ஊற்று-2 | நதி-12 | ஏப்ரல் 2020 | திங்களிதழ்
ISSN : 2582-4015
www.padaippu.com

படைப்பு

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்



"வளரும் செடிகளின்
வேர்களில் ஊற்றப்படும்
நீரையள்ளும்
கைகளில் ஒன்றாகவே
இருக்க விருப்பம்"

- கவிஞர் மு.முருகேஷ் மற்றும் கவிஞர் அ.வெண்ணிலாவுடனான நேர்காணல்

- தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில்..





படைப்புக் குழுமத்தின் கொரானா காலத் தொண்டு

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-2 | நதி-12 | ஏப்ரல் 2020

நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**ஸ்டெல்லா தமிழரசி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும் கருத்துக்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **“வளரும் செடிகளின் வேர்களில் ஊற்றப்படும் நீரையள்ளும் கைகளில் ஒன்றாகவே இருக்க விருப்பம்”**
  - கவிஞர் மு.முருகேஷ் மற்றும் கவிஞர் அ.வெண்ணிலாவுடனான நேர்காணல் -பக். 05
- **தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில்..**
  - படைப்புக் குழுமத்தின் கொரானா காலத் தொண்டு -பக். 15
- **தி பக்கட் லிஸ்ட்**
  - கவிஜி -பக். 18
- **எனக்குப் பிடித்த எழுத்தாளர் - தி.ஜ.ர.**
  - ஆனந்தி பார்த்தசாரதி -பக். 20
- **எனக்குப் பிடித்த எழுத்தாளர் - அனுராதா ரமணன்**
  - லலிதா சங்கர் -பக். 20
- **நகுலனிடமிருந்து விக்ரமாதித்யனுக்கு**
  - கவிஞர் விக்ரமாதித்யன் -பக். 21
- **ஆகுளி - சிறுபான்மைக்காக அதிரும் சிறு பறை**
  - இரா.பூபாலன் -பக். 29
- **கீழடி - தமிழின் தாய்மடி**
  - கடையநல்லூர் பென்ஸி -பக். 32
- **கோடை வெயில் - மனித உறவுகளைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கிறது!**
  - மு.தமிழ்ச்செல்வன் -பக். 35
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் -பக். 44
- **மீட்டெடுக்கப்படும் மரபு**
  - கருப்பசாமி.க (கலிங்கப்பட்டி) -பக். 47
- **தேனியில் ஒரு கவிதைத் திருவிழா**
  - பிருந்தாசாரதி படைப்புலகம் -பக். 50
- **சக மனுஷி**
  - சாந்தா தத் -பக். 54
- **எனக்குப் பிடித்த எழுத்தாளர் -சுஜாதா**
  - இ.செல்வராஜ் -பக். 56
- **அம்பேத்கார் என்றோர் அறிவாளர்**
  - மா.ரஞ்சனி -பக். 59
- **விளையும் பயிர்..**
  - ஏ. சாகுல் ஹமீது -பக். 61

## சிறுகதைகள்


- **ஒரே ஒரு ஊரிலே**
  - பிரேமபிரபா -பக். 26

- **மஞ்சள் வண்ண சுவர்த்தாள்**
  - மூலம்: ஷார்லட் பெர்கின்ஸ் ஸ்டெட்சன் (கில்மன்)
    மொழியாக்கம்: கார்குழலி -பக். 41

- **தலைகீழ் விகிதம்**
  - மதுரா -பக். 57


## கவிதைகள்


- **பிறைநிலா** -பக். 17

- **நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் - 18**
  - ஜின்னா அஸ்மி -பக். 25

- **ஊர்மிளை**
  - கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன் -பக். 38

- **படைப்புலகம்** -பக். 52
  - தோழன்பிரபா
  - பிரபுசங்கர்_க
  - கதிரவன் வீ
  - வணவை தூரிகா

- **கனக்கும் இரவு**
  - சௌவி -பக். 60


படைப்பு
சமூகத்தின் இணைப்பு



# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு ‘தகவு’ இருபத்திநான்காம் மின்னிதழ் உங்கள் கண்முன் பரந்துவிரிந்திருக்கிறது.

கொரானா என்னும் கொடிய வைரஸின் பரவலினால் உலகமே தன் பரபரப்பான இயக்கத்தை நிறுத்தியிருக்கிறது. தொட்டால் பரவும் நோய் என்னும் கற்பனை நிஜமாய் நிகழ்ந்து நம் வாழ்வினைப் பதம் பார்க்கத் தொடங்கியிருக்கிறது. என்றென்றைக்குமான வரலாறு சோகத்துடன் நினைவுகூர்ந்து சுட்டிக்காட்டப்போகும் ஒரு இக்கட்டான தருணத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இலக்கியங்கள் இப்போதே இச்சோதனைகாலத்தைப் பதிவு செய்யத்தொடங்கிவிட்டன.

தூய்மைப் பணியாளர்கள் களத்தில் நின்று வேலை செய்பவர்கள். இழிவாய்ப் பார்க்கப்பட்ட ஒரு தொழில் உலகத்தை நோயின் பிடியிலிருந்து மீட்க, இரவு பகல் பாராமல் உதவிக்கொண்டிருக்கிறது. நம் இலக்கியங்கள் துயரத்துடன் விவரித்துச்சென்ற அழுக்குகள் நிரம்பிய வாழ்வுச் சூழல்தான் அவர்களுக்கு எப்போதும் நேர்ந்திருக்கிறது. தூப்புக்காரி புதினத்தில் மாரி, ‘இதுதான் தொழிலுண்ணு எறங்கிட்டா அப்புறம் எதப்பத்தியும் யோசிக்கப்பிடாது.. இந்த ஒலகத்துல சுத்தப்படுத்துற ஒயந்த தொழில செய்யுறேண்ணு பெருமைப்பட தெரியணும்,’ என்று தன் பணியை உயர்வாகக் கூறினாலும் நிஜத்தில் அப்படிக் கருதப்படவில்லை என உணர்ந்திருந்தான். அதனால் தூய்மைப் பணிக்கான கருவிகள் கண்டுபிடிக்கப்படவேண்டும் என்பதை உணர்த்தியபடியிருந்தான். அப்புதினத்தில் பூவரசி ‘அழுக்குத்துணியப் போட்டு, அழுக்குல நின்னாலும் நீதான் அழகான மனுசன்.. ஆடம்பர துணி உடுத்தியவனுக்கிட்ட அழுக்கான மனசு இருக்கு.. ஒரு நாளு ஒனட்டண்டு மணம் வந்தது இல்ல. ஆனா நீதான் மனுசன்,’ என்று மாரியைப் பற்றி நினைப்பாள். எந்த மனிதனையும் மனிதனாகப் பார்க்க, நடத்தக் கற்றுத் தருவது கலையும் இலக்கியமும். ஆனால் எந்தக் கட்டத்தில் எந்த மனிதனின் தேவை அதிகமாக இருக்கிறதோ அந்த மனிதனைத் தெய்வமாகக் கருதிவிட்டு, பின்னர் தூக்கிப்போடும் கலையைக் கற்றுத் தந்து விடுகிறதே வாழ்க்கை.

நோய்த்தொற்று பற்றிய பயம் அதிகமாகியிருக்கிறது. அஞ்சுவது அஞ்சுவதுதானே அறிவார் தொழில். சட்டென்று ஒரே நாளில் கனவும் நினைவும் அழிந்து கும்பலுள் ஒன்றாக உயிர்விடும் வாதை குறித்த ஆதிபயம் அது. அசோகமித்திரனின் ‘அவனுக்குப் பிடித்தமான நட்சத்திரம்’ சிறுகதையில் அம்மை வார்த்த பக்கத்து வீட்டுக் குழந்தையை ஊரைவிட்டுத் தள்ளியிருக்கும் காலரா மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றுவிடுவார்கள். காட்டிக்கொடுத்தவன் தவிப்பான்.. பெற்ற தாய் தந்தை தவிப்பர்.. ‘ வியாதியுடன் படுத்திருக்கும் குழந்தைக்குப் பெற்ற தாயாரால் சிசுருஷை செய்யமுடியாது’ என்ற குற்றவுணர்வு எழும். தொற்றுநோயால் எழுந்த சமூகச் சூழல் அந்தச் சில மனிதர்களின் உக்கிர உணர்வுகளால் பதிவுசெய்யப்பட்டிருக்கும். சமகாலக் கொரானா குறித்துப் படைக்கப்படும் படைப்புகள் வாயிலாக எதிர்காலம் நம் தவிப்புணர்வுகளை உணர்ந்துகொள்ளத் தொடங்கும்.

பணிகளற்ற சூழல் நம்மில் பலரைப் பசியின் பெரும்பிடிக்குள் சிக்கவைத்துள்ளது. உப்பிலி வெந்ததைக் கடையடைத்து இரும்பேர் ஒக்கலோடு உண்ணும் பண்டைய வறுமைக் காட்சி இன்றும் அரங்கேறத்தொடங்கியது. குடும்ப வறுமை உண்டாக்கும் மன அரிப்பு கொடியது. வண்ணநிலவனின் எஸ்தர் அதை அறிந்திருந்தாள். வறுமையும் பசியும் போக்கி, இரந்தவர் இன்முகம் காண அரசுடன் தன்னார்வலர்களும் தொண்டாற்றத் தொடங்கியுள்ளனர். ‘நடமாடக் கோயில் நம்பற்கு ஒன்று ஈயில் படமாடக் கோயில் பகவற்கு அதாமே’என்றுணர்ந்த படைப்புக் குழுமம் வறியோர் பலருக்கு உணவளிக்கும் உன்னதப் பணியை மேற்கொண்டு வருகிறது.

வாளால் அறுத்துச் சுடினும் மாளாக் காதல் கொள்ளவைக்கும் மருத்துவப் பணியாளர்களையும் ‘ஊறஞ்சா வெல்படை’யாய்ச் சிறந்தோங்கும் காவல்துறையினரையும் தகவு வாழ்த்தி வணங்குகிறது.

தமிழின் இலக்கிய இணையர்களான கவிஞர் அ.வெண்ணிலா மற்றும் கவிஞர் மு.முருகேஷின் நேர்காணல் இவ்இதழில் இடம்பெற்றுள்ளது. மேலும் நூல் விமர்சனங்கள், கட்டுரைகள், தொடர்கள், சிறுகதைகள், கவிதைகள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்..

நன்றி.

– ஆசிரியர்

● வீரசோழன்.க.சோ.திருமாவளவன்



# “வளரும் செடிகளின் வேர்களில் ஊற்றப்படும் நீரையள்ளும் கைகளில் ஒன்றாக இருக்கவே விருப்பம்”

## –கவிஞர் மு.முருகேஷ் மற்றும் கவிஞர் அ.வெண்ணிலாவுடனான நேர்காணல்

அழகியலையும் இயற்கையையும் பேரின்பத்தையும் வெற்றிகளையும் மகிழ்ச்சியையும் மட்டுமே மேல்பூச்சுகளோடு பேசிவந்த கவிதைகள் இன்று கட்டுகள் உடைத்துத் தனக்கான மொழியில் நிதர்சனத்தை அதன் உண்மையைப் பேசுகின்றன. அப்படி அற்புதமான மொழியாலும் எளிமையான வார்த்தைகளாலும் நமக்கான குரலாய் வெடிக்கும் கவிஞர் அ.வெண்ணிலா வருடும் இதயங்களின் கவிதைகளாய்ப் பூப்பவர். சமகாலப் பெண் கவிஞர்களில் மட்டுமல்ல.. பொதுவாய் எல்லாக் காலக் கவிஞர்களின் வரிசையிலும் முக்கியமானவர் அ.வெண்ணிலா!

கவிஞர் மு.முருகேஷ் தமிழ்க் ஹைக்கூ கவிதைப்பிதாமகன் என்று சொல்லக்கூடிய அளவிற்குச் சிறந்த கவிஞர், எழுத்தாளர், சிற்றிதழாளர், பத்திரிக்கையாளர், குழந்தை இலக்கியப் படைப்பாளர், கல்வி ஆலோசகர், பதிப்பாளர் எனப் பல தளங்களில் தீவிரமாக இயங்கி வருபவர்.

இலக்கிய உலகின் தவிர்க்க முடியாத படைப்பாளர்களான இவர்கள் இருவரும் இணையர்கள். தமிழ் உலகிற்குக் கிடைத்த அரிய படைப்பாளிகளான கவிஞர் திரு.மு.முருகேஷ் மற்றும் கவிஞர் திருமதி.அ.வெண்ணிலா அவர்களுடனான ஓர் இனிய நேர்காணல்..

**இலக்கிய இணையர் இருவருக்கும் வணக்கம். ஐயா நீங்கள் கவிதை என்ற பின்புலத்தில் இருந்து வந்தவர். உங்களின் துவக்க நிலை எப்படி இருந்தது? எந்த இடத்தில் இருந்து செழுமைப்படுத்தி வளர்ந்தீர்கள்? அந்தக் காலகட்ட படைப்புலகத்தில் உங்களைப் பாதித்த நபர் யார்?**

'முதலில் கவிதையில் தொடங்கி, அடுத்து கதையெழுதி, பின்னர் புதினம் படைத்து, இறுதியாக, திறனாய்வு எனும் பெயரில் விமர்சனம் எழுதி வீணாகிப் போகிறார்கள் தமிழ் எழுத்தாளர்கள்' என்று ஆதங்கப்பட்டார் கவிக்கோ அப்துல்ரகுமான். நல்லவேளையாக, என் எழுத்தார்வம் முதலில் கதையிலிருந்தே தொடங்கியது.

சிறுவயதிலிருந்தே கதை கேட்கும் சூழலில் வளர்ந்தவன் நான். என் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த ரைஸ் மில் திடலில் நான்கைந்து குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக உட்கார்ந்து, தீப்பெட்டி ஒட்டுவார்கள். வேலையின் அலுப்பு தெரியாமலிருக்க யாராவது ஒருவர் கதை சொல்வார்கள். என் அம்மா சொல்லும் கதைகள் அவ்வளவு உயிர்ப்பாக இருக்கும். கதை கேட்பதற்காக உட்காரும் குழந்தைகள், அப்படியே தீப்பெட்டி ஒட்டும் வேலையிலும் ஒத்தாசையாக இருப்பார்கள். நானும் அப்படியாகக் கதை கேட்க ஒதுங்கியவன்தான்.

கதை கேட்பதிலிருந்த ஆர்வம், கதை சொல்லவும் என்னை உந்தித் தள்ளியது. கேட்ட கதைகளை, பார்த்த திரைப்படங்களை, படித்த கதைகளைச் சொல்லத் தொடங்கி, பின்பு கதை சொல்வதற்காகவே கதைப் புத்தகங்களைத் தேடிப் படிப்பவனானேன். எங்கள் தெருவிலிருந்த பாரிஜாதம் அக்காவும், வீட்டோடு ஒட்டியே குடியிருந்த சித்தப்பாவும் வாங்கிப் படித்த குமுதம், ராணி, கல்கண்டு இதழ்களே என் வாசிப்பிற்குத் துணை நின்றன.

உயர்நிலைப்பள்ளி மாணவனாக இருந்த காலத்திலேயே கதைகள் எழுதத் தொடங்கி, அப்படியே மெல்ல கவிதைப் பக்கமாய் வரத் தொடங்கினேன். எங்கள் பகுதியில் பாரதி மன்றம் நடத்திய 'பார்வை' கையெழுத்து இதழே என் தொடக்கக்காலக் கவிதைகளுக்கான தொட்டிலானது. திருக்கோகர்ணம் அரசுக் கிளை நூலகத்தில் பாரதி, பாரதிதாசன், சுரதா, அப்துல்ரகுமான், ஈரோடு தமிழன்பன், இன்குலாப், கந்தர்வன், மு.மேத்தா, வைரமுத்து, ஈழத்துக் கவிஞர் மேமன்கவி எனப் பெருங்காதலோடு கவிதை நூல்களை வாசித்ததன் விளைவாக, கவிதையின் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்து வந்தேன்.

இந்த நாட்களில் நூலகத்திலிருந்து காலை, மாலை என ஒரு நாளைக்கு இரு நூல்களைக்கூட எடுத்து வந்து வாசித்திருக்கின்றேன். என் மனசுக்கு நெருக்கமான படைப்புகளைத் தந்த அனைத்துப் படைப்பாளர்களுமே என்னைப் பாதித்தவர்கள்தான். என்றாலுங்கூட, கதைகளில் ஜெயகாந்தனும் மேலாண்மை பொன்னுச்சாமியும், கவிதைகளில் அப்துல்ரகுமானும் ஈரோடு தமிழன்பனும் என் ஆதர்ச படைப்பாளிகள் என்பேன்.

**அம்மா.. பொதுவாக உங்கள் கவிதைகள் வாழ்வியல் அதிர்வினை ஏற்படுத்தி, நம்மை அதனோடு பயணிக்கச் செய்யும். உங்களுக்கு ஆரம்பகாலக் கட்டங்களில் கவிதை எழுத உந்துதலாக இருந்தது எது? நீங்கள் எழுதிய முதல் கவிதை நினைவில் உள்ளதா? துவக்க காலத்தில் யாருடைய கவிதைகள் உங்களைப் பெரிதும் பாதித்தன?**

புதிதாகப் படிக்கப்போகும் வாசகர்களுக்கான அறிமுகமாக இருக்கும் என்ற புரிதலில் இக்கேள்வியை அணுகுகிறேன்.

விதை முளைத்தெழ அநேகக் காரணிகள் தேவை. வெப்பம், நீர், மண் இப்படி. இவையெல்லாம் ஒருங்கே சரியான விகிதத்தில் அமையும்போதே விதையிலிருந்து சிறு முளை வெளிவரும். அப்படித்தான் என் கவிதைகளின் பிறப்பும். வீட்டுச் சூழல் வாசிப்பதற்கும் எழுதுவதற்குமான புரிதலோடு இருந்தாலும், வாழ்வின் இரண்டாம் கட்டமான திருமணத்தை நோக்கி நகர்த்தப்பட்டபோதே எனக்குள் கவிதை பிறந்தது.

'அடுத்த ஆண்டும், வசந்தம் ஆர்ப்பாட்டமாய் வரும்' என்ற கவிதையே என்



முதல் கவிதை. திருமணத்திற்குப் பின், என் இயல்பு வாழ்வில் இருந்து நான் முற்றிலுமாக அந்நியப்படுத்தப்படுவேனோ என்ற அச்சத்திலிருந்து பிறந்த கவிதையது.

துவக்கக் காலத்தில் கனிமொழியின் கவிதைகள் எனக்கு மிகப் பிடித்தவை. மென்மையான குரலுடைய அந்தக் கவிதைகளுக்குள் இரும்புப் போன்று இருந்த உறுதியான தொனி என்னை வசீகரித்தது. இப்போது பாசாங்கில்லாமல் பன்முகம் காட்டும் சங்கக் கவிதைகள் மனத்திற்கு நெருக்கமாக இருக்கின்றன.

**ஐயா.. புதுக்கவிதை எழுதிக்கொண்டிருந்தவர் நீங்கள். புதுக்கவிதையில் இருந்து ஹைக்கூ எழுதலாம் என உங்களுக்கு எப்போது தோன்றியது? அதற்குத் தூண்டுகோலாக இருந்தது எது?**

எண்பதுகளின் பிற்பகுதியில் தீவிரமாகக் கவிதைகளை எழுதிக்கொண்டிருந்தேன். 1987-இல் நண்பர்களோடு இணைந்து வெளிக்கொண்டு வந்த 'விடியல்' எனும் சிற்றிதழில் எனது கவிதைகள் தொடர்ந்து பிரசுரமாயின. பொதுவாகவே, எனது கவிதைகள் சுருக்கமாக இருக்கும். பக்கம் பக்கமாக எழுதுவது படிப்பவருக்கு அயர்ச்சியை உண்டு செய்யுமென்பதை உறுதியாக நம்பினேன். அப்போது நடைபெற்ற கவியரங்குகளில் சக கவிஞர்கள் பக்கம் பக்கமாக எழுதி வந்து வாசிப்பார்கள். நான் ஒரு வெள்ளைத்தாளில் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சுருக்கமாகவே வாசிப்பேன். இது பார்வையாளர்களிடம் மிகுந்த வரவேற்பை என் கவிதைகளுக்குப் பெற்றுத் தந்தது.

விடியல் இதழில் கவித்தூறல்கள், மின்னல் பொறிகள், கவித்துளிகள் எனும் பெயர்களில் சிறுசிறு கவிதைகளை எழுதினேன். இந்தக் கவிதைகள் பெரும்பாலும் மூன்று வரிகளில் இருந்தன. அவற்றுள் இப்போதும் நினைவிலிருக்கும் ஒரு கவிதை..

அடுப்படிப் புகை
கரித்துணிக் கவிதை
அம்மா.

இந்தக் காலகட்டத்தில்தான் தமிழில் ஜப்பானிய மூவரி ஹைக்கூ கவிதை வடிவ நூல்கள் வெளிவரத் தொடங்கின. அப்துல்ரகுமானின் கட்டுரைகளும், ஈரோடு தமிழன்பன், மித்ரா, அமுதபாரதி, அறிவுமதி ஆகியோரின் ஹைக்கூ கவிதைகளும் என்னை ஹைக்கூவின்பால் ஆற்றுப்படுத்தின. சுருக்கமான இறுகிய மொழிநடையும், அழகிய காட்சிப் பதிவும், மூன்றாவது வரியின் மின்அதிர்வுமே என்னை ஹைக்கூ எழுதத் தூண்டின. அன்று தொடங்கி, இன்றுவரை ஹைக்கூவின் தீவிர வாசகனாகிப் போனேன்.

**ஐயா, ஹைக்கூ கவிதைகள் தமிழில் அறிமுகமாகி ஒரு நூற்றாண்டு கடந்த நிலையில் இன்றைக்குத் தமிழ்க் கவிதை வாசிப்புப் பரப்பில் ஹைக்கூவிற்கு எந்தளவு வரவேற்பு உள்ளது? சமகாலத்தில் உங்களுக்குப் பிடித்த ஹைக்கூ தொகுப்பு மற்றும் பிடித்த கவிஞர்கள் பற்றிச் சொல்லுங்களேன். ஹைக்கூ கவிதைக்காக மிக**

**முக்கியமான பங்களிப்பைச் செய்து இருக்கிறீர்கள். ஹைக்கூ கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து ஐந்து தொகுப்பு நூல்களையும் அளித்திருக்கிறீர்கள். இந்த அளப்பரிய பணிக்கு வாழ்த்துக்கள். அந்தச் சவாலான பணியை எப்படி ஐயா மேற்கொண்டீர்கள்?**

1916-இல் (அக்டோபர்-16) மகாகவி பாரதியார் 'சுதேசமித்திரன்' இதழில் எழுதிய 'ஜப்பானியக் கவிதை'எனும் குறுங்கட்டுரை வழியே தமிழில் ஹைக்கூ முதன்முதலாக அறிமுகமானது என்று கொள்வோமேயானால், ஒரு நூற்றாண்டினைக் கடந்துவந்திருக்கிறது தமிழ் ஹைக்கூ. தமிழில் ஹைக்கூ அறிமுகமான தொடக்கக் காலங்களில் இருந்த கேலியான பேச்சுகள், புரிதலற்ற விமர்சனங்கள் இப்போது குறைந்திருக்கின்றன.

சிற்றிதழ்கள் மட்டுமே ஹைக்கூ கவிதைகளை வெளியிட்டுவந்த நிலை மாறி, தற்போது வெகுசன இதழ்களும் ஹைக்கூ கவிதைகளை அழகான வடிவமைப்பில் வண்ணப்படங்களுடன் தனியே பக்கம் ஒதுக்கி வெளியிட்டுவருகின்றன. ஹைக்கூ கவிதைகளைப் படிக்கும் வாசகப் பரப்பும் விரிவடைந்திருக்கிறது. புத்தகக் கடைகளில், புத்தகக் கண்காட்சிகளில் ஹைக்கூ நூல்களை விரும்பிக் கேட்டு வாங்கும் வாசகர்களையும் பார்க்க முடிகிறது. எனக்குப் பிடித்த ஹைக்கூ கவிஞர்களின் பட்டியல் மிக நீளமானது. ஆனாலும், தமிழ் ஹைக்கூ எதுவென அறியவேண்டுமானால், கீழ்க்கண்ட கவிஞர்களின் 10 ஹைக்கூ நூல்களை அவசியம் வாசித்தாக வேண்டுமென்று நான் பரிந்துரைப்பேன்.



1. சூரியப் பிறைகள்– ஈரோடு தமிழன்பன், 2. ஐக்கூ அருவிகள் – அமுதபாரதி, 3. மித்ராவின் ஹைக்கூ கவிதைகள் – மித்ரா, 4. கடைசி மழைத்துளி – அறிவுமதி, 5. முள்ளில் அமரும் பனித்துளி - நா.விச்வநாதன், 6. மகரந்த ரகசியங்கள் – சிபி, 7. நெற்றி சுருங்கிய புத்தர் – மணி சண்முகம், 8. செல்ஃபி எடுத்துக்கொள்கிறது மரம் – லிங்குசாமி, 9. மீன்கள் உறங்கும் குளம் – பிருந்தாசாரதி, 10. மெல்லப் பதுங்கும் சாம்பல் நிறப்பூனை – வதிலை பிரபா.

ஐந்து ஹைக்கூ கூட்டுத் தொகுப்புகளை வெளியிட்ட அனுபவங்கள் ஒவ்வொன்றும் ஒரு தனிக்கதை. எனது ஹைக்கூ கவிதைகளை வாசித்த அன்னை ராஜேஸ்வரி பதிப்பக உரிமையாளரும் கவிஞருமான பா.உதயகண்ணன், எனது ஹைக்கூ கவிதைகளைத் தொகுப்பாக வெளியிட ஆர்வம் காட்டினார். 1993-இல் வெளியான எனது 'விரல் நுனியில் வானம்' ஹைக்கூ நூல் மூன்றே மாதத்தில் விற்றுத் தீர்ந்ததோடு, தமிழகம் முழுவதும் ஏராளமான கவி நண்பர்களையும் அந்த நூல் எனக்குப் பெற்றுத் தந்தது. பலரும் ஆர்வத்தோடு ஹைக்கூ எழுதிக்கொண்டிருந்தனர். அவர்களின் கவிதைகளை வாசித்த எனக்கு அவற்றையும் நூலாக்கும் ஆசை வந்தது. எனது நூலை வெளியிட ஆர்வம் காட்டிய பா.உதயகண்ணனிடம், "பல ஹைக்கூ கவிஞர்களின் கவிதைகளையும் தொகுத்துத் தருகிறேன். ஹைக்கூ கூட்டுத் தொகுப்பாக வெளியிடலாமே..!" என்றேன். அவரும் சம்மதிக்க இருவரும் சேர்ந்தே 1995-இல் 'கிண்ணம் நிறைய ஹைக்கூ' எனும் 64 கவிஞர்களின் ஹைக்கூ கவிதைகள் அடங்கிய தொகுப்பை வெளியிட்டோம். நல்ல வரவேற்பும் பாராட்டும் அந்தத் தொகுப்புக்குக் கிடைத்தது. அந்தத் தொகுப்பு நூலை வாசித்த பலரும் ஹைக்கூ எழுதத் தொடங்கினர். கவி நண்பர்களின் ஆர்வத்தாலும், புதிதாக எழுதும் கவிஞர்களை அடையாளப்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்தாலும் அடுத்தடுத்து

ஐந்து கூட்டுத் தொகுப்புகள் வெளிவந்தன.

இன்றைக்குத் தமிழ் ஹைக்கூ கவிதையில் சிறப்பான பங்களிப்பினைச் செய்துவரும் கவிஞர்களில் பலரும் அந்தக் கூட்டுத்தொகுப்புகளில் பங்கேற்றவர்கள் என்பதை அறியும்போது மனம் நெகிழ்கிறது.

**ஐயா.. அண்மையில் 'குக்கூவென...' எனும் மிகச் சிறிய ஹைக்கூ கவிதை நூலினைக் வெளியிட்டுப் பிரமாதப்படுத்தியிருந்தீர்கள். அநேகமாகத் தமிழில் இதுவரை வெளியான கவிதை நூல்களிலேயே மிகச் சிறிய நூலாக உங்களின் 'குக்கூவென...' இருக்கும். இதற்கான பின்புலம் மற்றும் உற்சாகம் உங்களுக்கு எங்கிருந்து கிடைக்கிறது? இதற்காக உங்களுக்குக் கிடைத்த பாராட்டு? அது பற்றிச் சொல்லுங்கள்..**

எந்தவொரு படைப்பும் அதன் நூலாக்க முறையிலும் கவனிக்கத்தக்கதாக இருக்கவேண்டுமென்று விரும்புபவன் நான். 'விரல் நுனியில் வானம்' எனும் எனது முதல் ஹைக்கூ கவிதை நூலை, வழக்கமான நூல்களின் பாதியளவில் வெளியிட்டேன். 'ஹைக்கூவிற்கு ஏற்ற வடிவம்' என்றார்கள். 2000-த்தில் 'ஹைக்கூ டைரி' எனும் சிறு நூலைக் கையடக்க டைரி வடிவில் வெளியிட்டேன். 2006-இல் முழு பக்க வண்ணப் புகைப்படத்தோடு 'உயிர்க் கவிதைகள்' ஹைக்கூ நூலினை வெளியிட்டேன். 'ஆகா... அழகு..!' என்று பாராட்டினார்கள். 2019-இல் வெளியான 'குக்கூவென...' உள்ளங்கைக்குள் அடங்கும் குறுநூல், எனது பத்தாண்டுகாலக் காத்திருப்பு. மத்திய அரசின் சாகித்திய அகாதெமி அழைப்பின் பேரில், 2009-இல் கொல்கத்தா சென்றிருந்தோம். அங்கே ஸ்ரீ சாரதா மடம் வெளியிட்டிருந்த 'My Eternal Companion' எனும் மிகச் சிறிய நூலொன்றை வாங்கி வந்தேன். அந்த நூலின் வடிவம் ஹைக்கூ நூலுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. நானும் அந்த நூலோடு சென்னையிலுள்ள பத்துக்கும் மேற்பட்ட அச்சகம், பைண்டிங் நிலையங்களுக்குச் சென்று, 'இப்படியொரு நூலைக் கொண்டுவர முடியுமா?' என்று கேட்டேன். 'இதற்கான இயந்திர வசதி கொல்கத்தா மற்றும் டெல்லியில் மட்டுமே உள்ளது. இங்கே முடியாது' என்றே பலரும் கைவிரித்தனர்.

2019 ஏப்ரலில் புக்மேக்கர்ஸ் உரிமையாளர் ஆதித்யாவைச் சந்தித்தேன். அவர், 'ம்... செய்யலாம். செலவு அதிகமாகும்' என்றார். நானும் சம்மதித்தேன். ஆறு மாதக் காலப் பெரும் முயற்சியில் 'குக்கூவென...' நூல் 4.8 செ.மீ உயரமும், 4.5 செ.மீ. அகலமும் கொண்ட தமிழின் மிகச் சிறிய நூலாக வெளிவந்தது. இந்நூலைப் பற்றிப் பல இதழ்கள் பாராட்டி எழுதின. 'புதிய தலைமுறை' தொலைக்காட்சியின் நிர்வாக இயக்குநர் ச.கார்த்திகைச்செல்வன், இந்நூலைப் பற்றிய சிறப்புக் காட்சித் தொகுப்பொன்றை ஒளிபரப்பினார். 2020-இல் சென்னையில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் இந்த நூலுக்கு மிகுந்த வரவேற்பு கிடைத்தது. தமிழ்ப் படிக்கத் தெரியாத குழந்தைகள் கூட, 'இந்தப் புக்கை வாங்கித்தாங்க. நான் எழுத்துக்கூட்டிப் படிக்கிறேன்...' என்று பெற்றோர்களிடம் கெஞ்சிக் கேட்டு வாங்கிப்போன காட்சிகளைக் கண்டேன். பல நண்பர்களும் 5, 10 எனப் பிரதிகளை வாங்கிச் சென்று நண்பர்களுக்குப் பரிசளித்தனர். இந்நூலிலுள்ள ஹைக்கூ கவிதைகள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மொழியாக்கம் செய்யப்பட்டுவருகின்றன என்பது கூடுதல் மகிழ்வளிக்கும் விஷயம்.

**அம்மா, நீங்கள் சொல்லுங்கள்.. பெண்ணிய எழுத்துக்கள் 1995-இல் எப்படி இருந்தன? பெண்ணிய எழுத்துக்களின் துவக்க நிலைக்கும், இப்போதுள்ள பெண் எழுத்தாளர்களின் நிலைக்கும் வளர்ச்சிப் போக்கு எவ்வாறு உள்ளது அம்மா?**

1995-2005 வரையிலான பத்தாண்டுகள் கவிதையுலகில் மிக எழுச்சியான காலகட்டம். ஐம்பதுக்கும் மேற்பட்ட பெண்கள் எழுதிக்கொண்டிருந்தார்கள். புதிதாகப் பலரும் எழுத வந்தார்கள். தமிழ்க் கவிதைப் பரப்பில் வளமான கவிதைகள் எழுதப்பட்டன.

2010-க்குப் பிறகான காலகட்டத்தில் முகநூல் சுய பிரசுர சாத்தியங்களைச் சாத்தியப்படுத்திய பிறகு, ஏராளமான எண்ணிக்கையில் கவிஞர்கள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

80-கள் வரை பெண்களில் மிகச் சிலரைத் தவிர, பிறர் உரைநடைதான் எழுதினார்கள். மிகச் சிலரே கவிதை எழுதினார்கள்.

இன்று உரைநடை எழுதும் பெண்கள், கவிதை எழுதும் பெண்களின் எண்ணிக்கையைவிட மிகக் குறைவு. கவிதை எழுதுபவர்கள் உரைநடைக்கு வாருங்கள் என்று சொல்ல மாட்டேன். ஆனால்



உரைநடை ஆயிரக்கணக்கான வீரர்களைத் திரட்டிக்கொண்டு போய்ப் போர்க்களத்தில் நிறுத்தி, முன்நின்று யுத்தம் செய்வதைப் போன்றது. நம்மை எப்போதும் சமருக்கு அழைத்துக்கொண்டே இருக்கும். அதற்குள் கவிதை, சிறுகதை எல்லாம் ஒளித்துவைத்துக் கொள்ளலாம்.

**சிறுகதை தொடர்பாகவே ஒரு கேள்வி. தமிழ்ச் சிறுகதை எழுதப்படத் தொடங்கி நூறு ஆண்டுகாலத்தைத் தொடப் போகிறது. அங்கீகாரம் பெற்ற, கவனிப்புப் பெறாத என்ற அடையாளங்களைக் கடந்து, இந்தத் தொகுப்பிற்குள் 54 பெண் எழுத்தாளர்களைப் பற்றி முழுமையான அறிமுகத்தைத் தந்து, தேடலைத் தூண்டச் செய்யும் தமிழின் முதல் ஆவணமாக வழிகாட்டுகிறது உங்களின் ‘மீதமிருக்கும் சொற்கள்’. இப்படித் தொகுப்பதற்கு உங்களுக்குப் பின்புலமாக இருந்தது எது அம்மா?**

சாகித்திய அகாதெமிக்காக, 2003-இல் தமிழ்ப் பெண் கவிதைகளைத் தொகுத்துக் கொடுத்தேன், ‘கனவும் விடியும்’ என்ற தலைப்பில். தமிழ்க்கவிதைப் பரப்பில் இயங்கிய பல பெண்களின் கவிதைகளைத் தொகுப்பதின் மூலம், கவிதையில் இயங்கிய பெண்களின் வரலாற்றைத் தொகுத்துச் சொல்லும் முயற்சியது. அதன் தொடர்ச்சியாகவே தமிழில் சிறுகதைகள் எழுதிய பெண்களைப் பற்றியும் ஒரு தொகுப்பு கொண்டு வந்தேன்.

நாம் எழுதிச்செல்லும்போது, எந்த மரபின் தொடர்ச்சியில் நிற்கிறோம், எதை நோக்கிப் பயணப்படப்போகிறோம் என்ற தெளிவுக்கு, இவை போன்ற தொகுப்புப் பணிகள் எனக்கு உந்துதலாக இருந்தன.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றினை வாசிக்கும்போது அதில் கடைசி பத்தியில் ஒன்றிரண்டு பெண்கள் பெயர்கள் மட்டுமே சடங்குபோல் குறிப்பிடப்படும். நூற்றாண்டை நெருங்கிக்கொண்டிருக்கும் ஓர் இலக்கிய வகைமையில் பெண்கள் எழுதவே வரவில்லையா என்ற கேள்விக்கு விடைதான் மீதமிருக்கும் சொற்கள்.

இத்தொகுப்பில் உள்ள கதைகளைப் படித்து, குறிப்பிட்ட எழுத்தாளரைத் தேடிப் படிக்கிறார்கள். நிறைய வாசகர்கள் அவர்களின் கதைகள் எங்கு கிடைக்கும், மறுபிரசுரமாகியிருக்கிறதா என்று அவ்வப்போது கேட்கிறார்கள். இத்தொகுப்புப் பணியின் வாயிலாகவே, மூவலூர் ராமாமிர்தத்தம்மாள், சித்தி ஜூனைதா பேகம் போன்றவர்களின் படைப்புகள்மீது கவனம் பெற வைக்க முடிந்தது.

புதியபாடத்திட்டத்தில் எட்டாம்வகுப்பு தமிழ்ப்பாடத்தில் எழுத்தாளர் கோமகள் எழுதிய ‘பால் மனம்’ என்ற சிறுகதையைத் தொகுப்பில் இருந்து சேர்த்திருக்கிறார்கள். தமிழின் முதல் முயற்சியான இப்புத்தகத்திற்காகக் கிடைத்த மகிழ்ச்சியான ஒன்றிரண்டு தருணங்கள் இவை.

**அம்மா, பொதுவாகப் பெண்களால் மட்டும்தான் பெண்களைப் பற்றியான**

**படைப்புகளைத் தர முடியுமா? ஆண்களால் பெண்களின் படைப்பைத் தர முடியாதா?**

ஆண், பெண் பாலின வேறுபாடு எழுத்தில் கிடையாது. எழுத்தாளர் என்றாலே எழுதப்படும் பாத்திரமாகக் கூடு பாயும் வித்தைதான். தற்போது எழுத்தாளர் ராஜேந்திர சோழன் எழுதிய கதைகளைப் படித்துக்கொண்டிருக்கிறேன். எத்தனை விதமான பெண்கள் அவரின் கதைகளுக்குள்? நான்கு பக்கக் கதைக்குள் அவர் கட்டியெழுப்பும் பெண்களின் அகவுலகமும், புறவுலகமும் என்னைப் புரட்டிப் போடுகிறது. "என்னய்யா மனுஷன் நீ, எங்கிருந்து இத்தனைப் பெண்களைப் படித்தாய்?" எனக் கைகுலுக்கத் தோன்றுகிறது.

**நல்லது அம்மா. அடுத்துக் குழந்தை இலக்கியம் பற்றிப் பேசலாம் எனத் தோன்றுகிறது. ஐயா நீங்கள் குழந்தை இலக்கியம் தொடர்பாகத் தொடர்ந்து எழுதியும், பயணம் செய்துகொண்டும் இருக்கிறீர்கள். குழந்தை இலக்கியம் படைத்தும் இருக்கிறீர்கள். குழந்தை இலக்கியம் எழுதலாம் என எப்போது உங்களுக்குத் தோன்றியது? குழந்தை இலக்கியம் பற்றி எழுதத் தேவை? தற்காலச் சூழலில் குழந்தை இலக்கியம் படைக்க வேண்டுமென எதை அவசியமாகக் கருதுகிறீர்கள்?**

1990-களின் தொடக்கத்தில் புதுக்கோட்டை மாவட்ட அறிவொளி இயக்கத்தில் பணி செய்துகொண்டிருந்தேன். அப்போது, 'ஊர்க்கூடி...' எனும் புதிய கற்போர்களுக்கான இதழொன்றினைக் கொண்டுவந்தோம். அந்த இதழின் துணையாசிரியர்பொறுப்பில், அந்த இதழுக்கான படைப்புகளைத் தொகுப்பது, வடிவமைப்பது என அனைத்துப் பணிகளையும் நான் செய்தேன். எல்லோரும் படிக்கின்ற மொழியிலேயே புதிய கற்போர்கள் படிக்கச் சிரமப்படுவதைக் கண்டேன். எளிய வார்த்தைகள், சுருக்கமான வாக்கியங்கள் கொண்ட மொழிநடை அவர்களுக்குப் படிக்க வசதியாகவும் இருந்தது. படிக்கவும் பிடித்திருந்தது. புதிய கற்போர்களை மனதில் வைத்துத் தொடர்ந்து நான் எழுத எழுத, அந்த எளிய மொழி நடை எனக்கும் கைகூடியது.

இந்தச் சூழலில் மதுரையில் பேராசிரியர் ச.மாடசாமி முயற்சியில் தொடங்கப்பட்ட BGVS கருத்துக்கூடத்தோடு இணைந்து புதிய கற்போர்களுக்கான சிறு நூல்களை உருவாக்கும் பணியில் நானும் இணைந்தேன். பேரா. ச.மாடசாமியின் நெகிழ்வான உரைகள், எனக்கான மொழி வகுப்புகளாகின. அப்போது எழுத்தாளர் உதயசங்கர் மொழிபெயர்த்த 'வாயும் மனிதனும்' என்கிற சிறு நூலை வாசித்தேன். மலையாளத்தைச் சேர்ந்த சிறுவன் அபிமன்யு எழுதிய குட்டிக் கதைகளின் தொகுப்பு அது. அந்தக் கதைகள் எனக்குப் புதிய புரிதலைத் தந்தன. என் கவனம் குழந்தை இலக்கியத்தின்மீது குவிந்தது. குழந்தைகள் மற்றும் புதிய கற்போர்களுக்கென 'மக்களின் விடுகதைகள்' நூலொன்றினை நான் தொகுக்க, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் அதனை வெளியிட்டது. அந்த நூல் பல்லாயிரம் பிரதிகள் விற்பனையாகி, குழந்தைகளின் மனவுலகிற்கு நெருக்கமாக என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்தது.

பிறகு, தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இந்திய வளர்ச்சி இயக்கமும் (பின்னாளில் யுரேகா கல்வி இயக்கமானது) இணைந்து நடத்திய மக்கள் பள்ளி இயக்கத்தின் மாநிலக் கருத்தாளராகத் தமிழகத்தின் பல மாவட்டங்களுக்குச் செல்லும் பணியில் ஈடுபட்டேன். குழந்தைகளை நெருங்கிச் செல்ல விளையாட்டுகளும் பாடல்களும் கதைகளும் எனக்குக் கை கொடுத்தன. பிறகு, சுனாமியால் மனித உயிர் இழப்புகளை அதிகமாகச் சந்தித்த நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆஃப்டர் ஸ்கூல் புரோகிராம் (After School Programme) எனும் திட்டத்தில் பணியாற்றியபோதும், திருவண்ணாமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளராகப் 'படிப்பும் இனிக்கும்' திட்டத்தில் பணி செய்த காலத்திலும் குழந்தைகளுக்காக எழுதும் முயற்சியில் முழுமையாக என்னை ஈடுபடுத்திக்கொண்டேன்.

'என் குழந்தைக்குத் தமிழே படிக்கத் தெரியாது' என்பதைச் சற்றும் மனக்கூச்சமின்றிப் பெருமையாகச் சொல்லி மகிழும் ஒரு தலைமுறை உருவாகியுள்ள காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதே எனக்கு மிகுந்த மன உளைச்சலைத் தந்தது. அந்தக் குழந்தைகளுக்குத் தமிழைச் சொல்லித் தரும் பணியாகவும், தமிழ் நூல்களை வாசிக்கத் தூண்டும் வகையிலும் நிறைய குறு நூல்களை எழுதத் தொடங்கினேன். 100-க்கும் மேற்பட்ட கதை அட்டைகளையும், 25-க்கும் மேற்பட்ட சிறுவர் இலக்கிய நூல்களையும் இதுவரை எழுதியிருக்கிறேன்.

பல்லாயிரமாண்டு கால இலக்கியப் பெருமையுடைய நம் தமிழில் குழந்தைகளுக்கான படைப்புகள் போதிய அளவில் இல்லை என்பதை முதலில் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மலையாளத்தில் குழந்தைகளுக்கான நூல்கள், வயது வாரியாகப் பிரித்து எழுதப்படுகின்றன. தமிழில் அப்படியான பணிகளின் தொடக்கமாக ஆரம்பக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கென 'படித்துப் பழகு', 'மலையிலிருந்து கதை அருவி' எனும் நூல்களையும், உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கென 'பெரிய வயிறு குருவி', 'உயிர்க் குரல்' ஆகிய நூல்களையும் எழுதினேன். இந்த நூல்கள் இதுவரை பல பதிப்புகள் வெளிவந்துள்ளன.

**அம்மா.. உங்களது சிறந்த பணிகளாகக் கங்காபுரம் நாவல், ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புத் தொகுப்பு, தேவரடியார் ஆய்வு ஆகியவற்றைக் கருதுகிறேன்.**

**முதலில் 'கங்காபுரம்' வரலாற்று நாவல் குறித்து.. நீங்கள் ஒரு நவீன இலக்கியப் படைப்பாளர். உங்கள் பார்வை, மரபின் மீதும், பண்பாட்டின் மீதும் அப்படியொரு நாவல் எழுத வேண்டும் என ஏன் தோன்றியது? பண்டைய மன்னர்களின் தொன்மைக்குள் நுழைய உங்களுக்கு ஊக்கமாக இருந்தது எது? நீங்கள் நாவல் எழுத எவ்வளவு காலம் எடுத்துக்கொண்டீர்கள்? இவற்றைப் பற்றிப் பகிர்ந்துகொள்ளுங்களேன்.**

உங்கள் கேள்வி, நவீனத்திற்குள் வரலாறு வராது என்ற தொனியைப் பிரதிபலிக்கிறது. வரலாற்றின் தொன்மையில் இருந்தே நவீனம் உருவாக முடியும். பலநேரங்களில் தொன்மமே நம்மின் நவீனமாகவும் மாறுகிறது.

மிகையுணர்ச்சிகள் மேலோங்கி, வரலாறு குறைவாகவும், புனைவிற்கான கற்பனை அதிகமாகவும் பிணைந்த கலவையே நம் வரலாற்று நாவல்களாகக் கடந்த ஐம்பது ஆண்டுகளாக எழுதப்பட்டுள்ளன.கடந்த பத்தாண்டுகளாக, தமிழில் வரலாற்று நாவல்களில் புதுமையான போக்கு நிகழ்ந்துவருகிறது.

மு.ராஜேந்திரன், இ.ஆ.ப. எழுதிய 1801 முதல் முத்துநாகுவின் சுளுந்தி நாவல் வரை அவ்வகைமையில் முன்னோடிகள். கங்காபுரம் நவீன வரலாற்று நாவலின் காத்திரமான வரவு.

வரலாற்று நாவல்களின் வழியாக நாம் என்ன கட்டமைக்கப் போகிறோம் என்ற கேள்வி மிக முக்கியமானது. சுந்தர சோழன், ராஜராஜன், ராஜேந்திரன் இவர்கள் பற்றியும் இவர்களின் வெற்றிபற்றியும் வரலாற்றுப் புத்தகங்களில் போதும் போதுமென்ற அளவுக்கு இருக்கிறது. இவர்களைப் பற்றிய நாவல்களும் தமிழில் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. இவைகள் சொல்லாத வேறொரு அனுபவத்தை என் நாவல் தர வேண்டும்.

அரசன் வாளேந்தினான், போர் புரிந்தான், வெற்றி பெற்றான் என்பதில் உள்ள ஈர்ப்பைவிட, அரசன் ஒரு சாதாரண மனிதனைப்போல் துயரப்பட்டான், அவனுக்கும் பசித்திருக்கிறது, அவனும் தனிமையில் துவண்டிருக்கிறான், காதலில் நிராகரிப்பைச் சந்தித்திருக்கிறான் எனத் தன்னைப் போன்ற மனிதனாகப் படிப்பதில் ஈர்ப்பு அதிகம். ராஜேந்திரன் எனும் பேரரசனின் நினைவுகளைப் பின்தொடர்ந்திருக்கிறேன் கங்காபுரத்தில். அதுவே வாசகர்களைப் பெருமளவில் ஈர்ப்பதற்கான காரணமாகவும் இருப்பதை வாசகர்களின் விமர்சனங்களில் இருந்து அறிகிறேன்.

**அடுத்ததாக..'நாட்குறிப்பு வேந்தர்' ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புகள் பற்றி. தேடித்தேடி, அதைத் தொகுத்துப் புத்தகமாகத் தமிழ்ச் சமூகத்திற்கு ஆவணமாகத் தந்து இருக்கிறீர்கள். இதற்கான மூலகாரணம் என்ன? அதன் வேர்களைத் தேடிப் பயணம் செய்த அனுபவங்கள் பற்றிக் கூறுங்களேன்.**

ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பைப் பதிப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் எழுத்தாளரும் வரலாற்று ஆய்வாளருமான மு.ராஜேந்திரன், இ.ஆ.ப. அவர்களுக்குத்தான் முதலில் தோன்றியது. அவர் வெள்ள நிவாரணப் பணிகளுக்காகக் கடலூர் மாவட்டத்திற்குச் சென்றிருந்த நேரத்தில், இரவு நேரங்களில் தினம் வாசிக்கக் கிடைத்த, நாட்குறிப்பின் சில தொகுதிகள், அவரை இப்பணிக்குத் தூண்டின. நாட்குறிப்பு பக்கங்களில் சரிபாதிக்காவது, இதில் நாங்கள் சந்தித்த சவால்களையும் சிக்கல்களையும் எழுதலாம். பன்னிரெண்டு தொகுதிகளையும் மொழிபெயர்ப்பதற்காக (பொருத்தமான சொல் அல்ல. பொருத்தமான வேறு வார்த்தைத் தெரியாததால், மொழிபெயர்ப்பு என்றே சொல்கிறோம்) அணுகியவர்கள், ஒப்புக்கொண்டு செய்து தராதவர்கள் என்ற

பிரச்சனைகள் ஒருபுறம், பன்னிரெண்டு தொகுதிகளையும் மூலம் சிதையாமல், அதேநேரம் வாசிப்பதற்கு எளிமையானதாகக் கொடுக்கும் சவால், பொருளாதாரம் எனச் சொல்லிக்கொண்டே போகலாம்.

இரண்டாண்டுகளாக அவ்வப்போது செய்து வந்ததோடு, ஒரு நாளைக்கு இருபது மணிநேரம், நாங்கள் இருவரும் தொடர்ந்து ஓராண்டு காலம் இப்பணியைச் செய்திருக்கிறோம். இதற்குமேல் ஒருவரும் இதில் ஒன்றும் சொல்லிவிட முடியாது என்ற நிறைவு வரும்வரை விடாமல் திருத்தினோம். மிகவும் மனநிறைவு தந்த பதிப்புப் பணி. அதிகம் உழைக்கும்போதே மிகுந்த உற்சாகமும் வேகமும் கொள்ளும் எங்கள் இருவரின் அடிப்படை குணமே, இந்தக் கடினமான பணியைச் சாத்தியப்படுத்தி இருக்கிறது. எங்களோடு இப்பணியில் இருந்த பதிப்புக் குழு நண்பர்கள் ந.மு.தமிழ்மணி, ருத்ர.துளசிதாஸ், பேரா.நடராஜன், நல்ல.வில்லியன், பிரெஞ்சு பேராசிரியர் வெங்கட சுப்புராய நாய்கர் முதலானோரின் பங்கும் அளப்பரியது.

சமூகம் எப்படிக் கொண்டாடப்போகிறது என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால், இந்தியாவுக்கே முன்மாதிரியான ஒரு வரலாற்று ஆசிரியராக, தேர்ந்த உரைநடையின் பிதாமகனாக, வரலாற்றுத் தகவல்களின் களஞ்சியமாக விளங்கிய ஆனந்தரங்கம் பிள்ளையை முந்நூறு ஆண்டுகள் கடந்தும் நாங்கள் கொண்டாடித் தீர்த்திருக்கிறோம். அவரின் உரைநடை வாசிப்பின் மாபெரும் அனுபவம். அந்த அனுபவத்தை வாசகர்கள் பெற வேண்டும். தமிழ்ச் சமூகத்தின் அசல் வரலாற்றை அறிய வேண்டும். இதுவே எங்கள் விருப்பம்.

**தமிழகத்தில் வழிபாட்டின் அங்கமாகக் கோயில்களில் இறைசேவைக்காக நேர்ந்துவிடப்பட்ட தேவரடியார் பெண்கள் குறித்து 'தேவரடியார் கலையே வாழ்வாக' எனும் ஆய்வுசெய்து முனைவர் பட்டம் பெற்றிருக்கிறீர்கள். தேவரடியாரை ஆய்வுக்கு எடுத்து நூலாக, ஒரு நூற்றாண்டை ஆவணமாய்த் தமிழ் மக்களிடம் சேர்த்து பண்பாட்டுக் கலைச் செல்வங்களை மீட்டெடுத்து இருக்கிறீர்கள். குறிப்பாக நீங்கள் இவர்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளக் காரணம் என்ன?**

நீங்கள் குறிப்பிட்டிருக்கிறபடி, தேவரடியார் குறித்த ஆய்வு படைப்புச் செயலுக்கு நிகராக மன நிறைவைத் தந்த பணி.

தேவரடியார் குறித்த ஆய்வைத் தேர்வு செய்ய இரண்டு காரணங்கள்; முதலாவது பெண்ணுக்கானஅறிவுத்தளம்என்பதுஇருபதாம் நூற்றாண்டின் கொடையல்ல. தென்னிந்திய அறிவுத் தளத்தில் ஏறக்குறைய பதினைந்து நூற்றாண்டுகளுக்கும் மேலாக, பெண்கள் முன்னணியில்தான் இருந்திருக்கிறார்கள். கலை, இலக்கியமே நம்முடைய அறிவுத்தளம். அதைக் கட்டிக் காத்தவர்கள் தேவரடியார் பெண்கள். இதை நிறுவும் விருப்பத்துடன்தான் இந்தத் தலைப்பைத் தேர்வு செய்தேன்.

இரண்டாவது காரணம்; தேவதாசி முறை சட்டரீதியாகத் தடை செய்யப்பட்டு, அறுபதாண்டுகள் ஆகின்றன. அறுபதாண்டுகளில், *1500* ஆண்டுகளாக, தேவதாசிப் பெண்கள், தங்களின் அர்ப்பணிப்பால் கட்டிக் காத்து, வளர்த்து வந்த இசை, நாட்டியவரலாற்றில்அவர்களின்தடங்கள் முற்றிலுமாக மறைக்கப்பட்டுவிட்டன. கலை வரலாற்றில் இருந்து அவர்கள் மொத்தமாக இருட்டடிப்பு செய்யப்பட்டார்கள்.

தமிழ்க் கலாச்சாரம், தமிழிசை, தமிழ் நாட்டியம் என்று தமிழின் மரபு குறித்து அக்கறை கொள்பவர்கள் ஒவ்வொருவரும் தேவரடியார் பெண்களில் இருந்தே தொடங்க வேண்டும் என்பதை என்னாய்வு உணர்த்துகிறது.

**ஐயா.. இருவரும் சிறந்த படைப்பாளர்களாகத் திகழ்கிறீர்கள். மேலும், ஒரு பத்திரிக்கையாளராக, உங்கள் பணியென்பது அளப்பரியது. பத்திரிக்கையாளராகத் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள், மறக்க முடியாதவை, மன நிறைவை அளித்தவை பற்றிப் பகிர இயலுமா?**

ஒரு ஆசிரியராக வரவேண்டுமென்பதே என் சிறுவயது ஆசை. அது கைகூடாமல் போனது. வேறொரு வாய்ப்பு அதுவாகவே வந்து என்னை அழைத்தபோது, எனக்குள்ளிருந்த பத்திரிக்கையாளன் விழித்துக்கொண்டான்.

*140* ஆண்டுக்கால பாரம்பரியமிக்க *'The Hindu'* பத்திரிக்கை குடும்பத்திலிருந்து வெளியான 'இந்து தமிழ் திசை' நாளிதழில் முதுநிலை உதவி ஆசிரியராகப் பணியேற்றேன். அலுவலக இருக்கையிலிருந்தே செய்யக்கூடிய பணி எனக்கு வழங்கப்பட்டபோதும், நானே



விரும்பி வெளியே சென்று பலரையும் சந்திக்கும் பணியைக் கேட்டுப் பெற்றேன்.

சென்னையில் உ.வே.சா. வாழ்ந்த வீடு இடிக்கப்படவிருந்த நிலையில் நானெழுதிய ஒரு கட்டுரையால் அம்முயற்சி தடுக்கப்பட்டது என் எழுத்துக்குக் கிடைத்த வெற்றியாக நினைக்கிறேன். தொலைக்காட்சியில் வந்த ஒரு தவறான குறிப்பைக் கண்டு, அப்போதைய முதல்வர் எடுத்த ஒரு நடவடிக்கை... நான் உடனடியாக வெளியிட்ட உண்மைச் செய்தியின் விளைவாக, பாதிக்கப்பட்டவர் நிரபராதி என அறிந்து, அவர் மீதான நடவடிக்கையை விலக்கிக்கொண்டதும் மனநிறைவைத் தந்தது.

சென்னையில் நடக்கும் இலக்கிய விழாக்கள், புதிய நூல் வரவுகள் குறித்துப் பல பதிவுகளை எழுதினேன். அரசியல் தலைவர்கள், எழுத்தாளர்கள், திரைக் கலைஞர்கள்... எனத் தினமும் யாரையேனும் ஒருவரைச் சந்திக்கும் சூழலை அமைத்துக்கொண்டேன். ஒவ்வொரு நாளும் எனக்குக் கிடைத்த புதிய அனுபவங்கள் என்னை உற்சாகத்தோடு செயல்படத் தூண்டின. இப்படியான நேர்சந்திப்புகளைத் தொகுத்து 'பூமியெங்கும் புத்தக வாசம்' எனும் தொகுப்பொன்றையும் சமீபத்தில் வெளிக்கொண்டு வந்துள்ளேன்.

**ஐயா.. அலைபேசியில் 'கவிஞரே...' எனப் புதிதாக எழுதிக்கொண்டிருப்பவர்களையும் உற்சாகமாய் அழைத்துப் பாராட்டுகிறீர்கள். இளம் கவிஞர்கள் உங்கள் ஊக்கத்தால் நிறையப் பேர் வளர்ந்திருக்கிறார்கள். தற்போது எழுதும் வளரும் கவிஞர்கள் பற்றி உங்கள் பார்வை?**

எனது நண்பர்களில் பாதிக்குமேல் கவிஞர்கள் என்பதில் எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி. ஒருவர் ஒரு கவிதை எழுதினாலும் என் பார்வையில் அவரும் கவிஞரே. புதிதாக எழுதவரும் ஒரு கவிஞரை, முதலில் அவரது உயரத்திற்கு இறங்கிச்சென்று பார்க்கவேண்டும்.. படிக்க வேண்டும். பிறகு, நம் உயரத்திற்கு அவரை அழைத்து வர வேண்டுமென்பதே எனது எண்ணம். இன்றைக்கிருக்கும் மூத்த படைப்பாளிகளில் பலருக்கு இப்படியான எண்ணம் கிடையாது. புதியவர்களின் கவிதை நூல்களை வாசித்துவிட்டு, 'நன்றாக இருக்கிறது' என்று சொல்லக்கூட மனமில்லாதவர்களாக இருக்கிற பலரை நான் அறிவேன். என் மனம் இதற்கு நேர்மாறானது.

எந்தக் கூட்டத்திலும் புதிதாக எழுதும் ஒரு இளம் கவிஞரை அடையாளம் காண்பதையும், எந்தப் புத்தகக் கண்காட்சியிலும் பிரபலமில்லாத ஒருவரின் கவிதை நூலையே தேர்ந்தெடுத்து வாங்குவதையும் நான் வழக்கமாகக் கொண்டிருக்கின்றேன். இப்படிச் சொல்வதால் முன்னோடி படைப்பாளிகளின் நூல்களை வாசிப்பதில்லை எனத் தவறாகப் பொருள்கொள்ள வேண்டாம். மேலும், புதியவர்களின் நூல்களை வாசிப்பதோடு நின்றுவிடாமல், அந்த நூலை வாசித்ததும் எனது கருத்தினை ஒரு கடிதமாகவோ அல்லது செல்பேசி வழியாகவோ தெரிவிப்பதை இன்றுவரை தவறாமல் செய்துவருகின்றேன். வளரும் செடிகளின் வேர்களில் ஊற்றப்படும் நீரையள்ளும் கைகளில் ஒன்றாக இருக்கவே விருப்பம். வெந்நீர் ஊற்றும் கைகளால் அழிப்பதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்..!

பல நூறு இளம் கவிஞர்கள் எனது ஊக்கத்தினால் வளர்ந்திருக்கிறார்கள் என்று சொல்வதைவிட, அவர்களோடு சேர்ந்து நானும் வளர்ந்திருக்கிறேன் என்று சொல்வதே பொருத்தமானது. தற்போது எழுதும் இளைய கவிஞர்களிடம் புதுமையான கவிமொழியும் புதிய பாடுபொருளும் உள்ளன. சமூகம் குறித்த நேரான பார்வையும் அரசியல் தெளிவும் இருந்தால் இன்னும் அவர்கள் உயரங்களைத் தொடுவார்கள் என்பது என் திடமான நம்பிக்கை.

**- அடுத்த இதழில் முடியும்.■**

● ரூஃபஸ் வி ஆண்டனி

# தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில்..



## கரம் கோர்ப்போம்...! நல் அறம் காப்போம்...!

படைப்பு சமூகத்தின் இணைப்பு என்ற இலக்கோடு தொடங்கப்பட்ட படைப்பு குழுமம் இலக்கியம் படைக்க மட்டுமல்ல..சமூகத்தைத் தன் செயல்பாடுகளின் வழியாகவும் இணைப்பதே இலக்கு என்ற உயரிய நோக்கத்தோடு செயல்பட்டுவருகிறது.

படைப்பு குழுமம் படைப்பாளிகளின் தனித்தன்மையுடன் இயங்கும் உலகம். தமிழகம் மட்டுமின்றி இந்தியா உட்பட்ட உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் அறுபதாயிரம் தமிழ் படைப்பாளிகளை நேரடி உறுப்பினர்களாகக் கொண்ட படைப்பு குழுமம் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் நடத்தும் ஆண்டுவிழாவில் பல்வேறுபட்ட இலக்கிய விருதுகளும், நலிந்த படைப்பாளிகளுக்கு நிதி உதவியும், இலக்கிய உலகில் சாதனை படைத்த படைப்பாளிகளுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது மற்றும் பணமுடிப்பும்,சமூகப் பணியில் தங்களை இணைத்துக்கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்குச் சிறந்த சமூக அக்கறையாளர் விருதும் அளித்துக் கௌரவித்துவருகிறது.

இலக்கியப் பணியோடு நின்றுவிடாமல் படைப்பு அறக்கட்டளை சார்பில் சமூகப் பணியாகக் கல்வி நிதியுதவி, மருத்துவ உதவி ஆகியவற்றுடன் புயல், வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க உதவிக்கரம் நீட்டித் தன்னாலான உதவிகளை இன்றளவும் செய்துவருகிறது.

நோய்த்தொற்று ஒரு பக்கமும், பசிக்கொடுமை மறுபக்கமும் சேர்ந்து உலுக்க,உலகிற்கே உணவளித்த நம் சமூகம் இன்று, உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஒருவேளை சோற்றுக்குக் கையேந்துவதை வெறும் வார்த்தைகளில் இங்கே சொல்லிவிட முடியாது.

நோயை மட்டுமே பார்த்துப் பயந்த மக்கள் இன்று பசியைப் பார்த்துப் பயந்து நிற்கிறார்கள். 'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்றார் பாரதி. ஆனால் இன்றும் வறுமையினால் ஒருவேளை உணவின்றித் தவிப்போருக்குப் போதுமான உணவு கிடைக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டது படைப்பு



குழுமம்.

கொரானா நோயின் அச்சுறுத்தல் ஒரு பக்கம், வயிற்றுப்பசி ஒரு பக்கம் என்று இக்கட்டான சூழ்நிலையில் ஏழை எளியமக்களின் பசிப்பிணி போக்க..வீட்டில் இருந்தும் தங்கள் பசியைத் தீர்த்துக்கொள்ள வழியில்லாமல் வாடுவோருக்கும், வீடற்றுச் சாலைகளில் வசிப்போருக்கும் நாள்தோறும் நேரடியாகச் சென்று இலவசமாக உணவளிக்க எண்ணம் கொண்டு முகநூலில் அறிவிப்பும் கொடுத்தது. அறிவிப்பைக் கண்ணுற்ற நல்லிதயங்கள் பலரும் நன்கொடைகளை வழங்க முன்வந்தார்கள். குறிப்பாக, நமது படைப்பு குழுமத்தின் படைப்பாளிகள், நமது முன்னெடுப்புகளில் என்றும் தோள் கொடுக்கும் தோழமைகள் பலரும் தங்களால் இயன்ற அளவு பண உதவிகளை அளித்தார்கள். இப்போதும் நன்கொடைகளை அளித்துவருகின்றனர் என்பதைப் படைப்பு குழுமம் நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறது.

படைப்பு குழுமம் அறக்கட்டளையின் திட்டமிடலும் தன்னார்வப் பணிக்காக நமது தோழமைகளின் செயல்பாடுகளும் களப்பணிகளும் நம்மை வியக்கவைக்கின்றன. KPM கேட்டர்ஸ் (சமையல்)டீம் உணவைத் தயாரித்து,சென்னை மற்றும் ஒரு சில நகரங்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பகுதியில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒருவேளை உணவை முன்னூறு நபர்களுக்குத் தண்ணீர் பாட்டில்களுடன் வழங்கி வருகிறார்கள். படைப்பு குழுமத்துடன் யுனிக் ஆங்கிள் நிறுவனப் பணியாளர்கள் தன்னார்வலர்களாகக் களப்பணியாற்றி வருவது பெரும் உதவியாக உள்ளது.

மேலும்... இல்லாதவர்க்கு உணவளிக்கும் அதே நேரத்தில், அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றிவரும் காவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் அனைவரையும் தாயுள்ளத்தோடு தேடிச்சென்று தேவையுள்ளோருக்கும் உணவளித்துக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கவிதை, கதை, கட்டுரை என்று முற்போக்கான எழுத்துக்களில் மட்டுமே கவனம் செலுத்துவதோடு இல்லாமல் பேரிடர் காலங்களில் தன் செயல்பாடுகள் வழியாகத் தன் இருப்பை நிரூபித்துக்கொண்டுள்ளது படைப்பு அறக்கட்டளை.

இந்தக் கொரானா காலத்தில் தங்கள் குடும்பங்களைக் கவனிக்க பொருளாதாரப் பற்றாக்குறை இருப்பினும் தங்களால் இயன்ற பண உதவி, பொருள் உதவி, உடலுழைப்பை நல்கிக்கொண்டுள்ள நல்லுள்ளங்கள் அனைவருக்கும் தனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது படைப்பு குழுமம். உதவும் உள்ளம்.. இறைவனின் இல்லம்.

**கரம் கோர்ப்போம் நல் அறம் காப்போம்.** ■

- கவி - பிறைநிலா
- சித்திரம் - அன்பழகன்



பட்டாசுத் தொழிற்சாலையில்
பணிபுரியும் தேவதைகள்
பெரும்பாலும் மெக்னீசிய
வாசத்துடனே காணப்படுகிறார்கள்
மேனியெங்கும் மெக்னீசியம்
கொஞ்சம் நெடிதூக்கலான
பாஸ்பரஸ் என அவர்கள் அருகே
வரும்போது நாகரிகமாக
மூடிக்கொண்டோம்தான் நாம் ...
அதிகாலைக் குளியல்
காக்கைக்குச் சோறு
அவசரச் சமையல்
பிள்ளைக்கு அன்பு
அடுக்குக்குச் சோறு
என்று பம்பரமென
சுற்றிமுடிந்துவிடுகிறது
அவர்களுக்கான ஒரு வாழ்க்கை..
பற்றியெரியும் மத்தாப்பூப்பொறிகளென
கடைசி நிறங்களை
மறைத்துக்கொண்டுதான்
புன்னகைக்கிறார்கள் தேவதைகள்..
தேவதைகளின் சாயலில்
பட்டாசுகள் சிரிக்கும்போது
கொஞ்சமாவது பற்றவையுங்கள்
அவர்களது வாழ்க்கையை.. ■

● கவிஜி







# தி பக்கட் லிஸ்ட்

தனியாக எப்படி மரணிப்பது என்ற கேள்வி எனக்குள்ளும் உண்டு.. எவர்க்குள்ளும் உண்டு. கேள்விகளற்றபோது இயக்கமற்றுப்போகும் உடல் இது. அன்பற்றபோது அடங்கிப்போகும் உயிர் இது. தோழமை அற்றபோது தனித்தொதுங்கித் தானற்றுப்போகும் வாழ்விது.

பார்க்கப் பார்க்க.. கண்ணீர் மெல்ல சுரந்து கன்னம் தாண்டி.. கழுத்து கூசிடும் வரை மெய்ம் மறந்து விழித்தே கிடந்த மனதை அடக்கவே முடியவில்லை. அற்புதங்கள் எவ்வழியும் நம்மைச் சேரும். கண்கள் திறந்து காது திறந்து மனதைத் திறந்து கொண்டிருத்தல்தான் மானுட அவசியம்.

மார்கன்...ஜாக் -இரண்டு தாத்தாக்கள். இருவரும் புற்றுநோயாளிகள். அவர்களுக்கான காலக்கெடு அடுத்து வரும் ஆறு மாதங்கள் மட்டுமே. அதற்குள் அவர்கள் தங்கள் தேடலைக் கண்டடைய வேண்டும். காலம் கொடுத்திருக்கும் கடைசி நாட்களை அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதுதான் படம்.

ஒருவர் பொருளாதார ரீதியாக சராசரி. ஒருவர் அவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கும் மருத்துவமனைக்கே சொந்தக்காரர்.

ஒரே அறையில் தங்கி இருக்கும் இருவரும் நண்பர்களாகி விடுகிறார்கள். நோய் சொல்லும் மந்திரம் அது. ஒரு கட்டத்தில் மார்கன், தான் சாவதற்குள் சில ஆசைகளைத் தான் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்று எழுதி..பிறகு ஏதோ யோசனையில் கசக்கிப்போட்ட லிஸ்ட்டை ஜாக் பார்க்க நேர்கிறது. அந்த லிஸ்டில் இருக்கும் ஆசைகளைப் பார்த்துவிட்டு எப்படியாவது நிறைவேற்றி வைத்துவிட வேண்டும் என்று யோசித்து அதை மார்கனிடமும் தெரிவிக்கிறார். சரித்திரப் பேராசிரியராக ஆக நினைத்து முடியாமல், ஒரு மெக்கானிக்காக வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கும் மார்கன் அவரின் வாழ்க்கை முழுக்க அவரின் இஷ்டப்படி இல்லவே இல்லை என்பதை உணர்ந்த ஒரு நொடியில் சம்மதிக்கிறார்.

மார்கனின் மனைவிக்கு விருப்பம் இல்லை. இருந்தும் ஜாக்கோடு போகிறார் மார்கன். இதயம் திறந்துகொள்ளும் பயணம் அது. திரும்பவும் ஒன்று நிரூபிக்கப்பட்டது. பயணம் மிகச் சிறந்த ஆசான். அது கற்றுத் தரும் அனுபவங்களின் வாயிலாக இந்த உலகத்தின்பால் கொண்ட பார்வையும் கனவும் வேறு வேறு உருவங்களில் வெவ்வேறு நேரங்களில் நமக்குக் கிடைக்கின்றன.

சின்ன சின்ன ஆசை சிறகடிக்க ஆசை என்பது போல...டாட்டூ குத்திக்கொள்ள ஆசை... வேகமாகக் கார் ஓட்ட ஆசை... தாஜ்மகால் பார்க்க ஆசை...ஸ்கை டைவிங் ஆசை... பிரமிட் பார்க்க ஆசை...இன்னும் இன்னும்...ஆசைகள். எல்லா ஆசைகளும் அதனதன் சுவாரஸ்யங்களோடு நிறைவேறுகின்றன. கண்ணீர் வரும் வரை சிரிக்க வேண்டும் என்று கூட ஒரு ஆசை இருக்கிறது. நான் மிக வியந்த இடம் இது. இப்படியும் கூட ஆசையா..! ஆம்.. புத்தனின் நுண்ணிய ஆசைகள் போல.. ஆசைகள் தன் கிளைகளைப் பரப்பி விரவிக் கிடக்கின்றன. மானுட மனம் கோணல் மாணலான வளைவுகள் கொண்ட பயணங்களால் ஆனவை. அதுவும் மூப்பில் இன்னதென்று தெரியாத இனம் புரியாத தவிப்புகள் ஆசைகளாகி அனுபவம் தேடும். தேடத் தேட முடியாத ஆரம்பம் மூப்பில் தொடங்கும் என்பதை உணர்ந்தபோது மிக மிக ஆழமான அற்புதமான அமைதியான ஒருவிதத் தாலாட்டை உணர முடியும். அதுதான் மரணத்தின் குறியீடு. தாலாட்டுதான் மரணத்துக்கான முதல் இசை என்பது மிகத் தாமதமாகத்தான் மானுட குலத்துக்குப் புரிகிறது. மனிதர்கள் ஆசைகளினாலே பிறந்தோம். ஆசைகளினாலே வாழ்ந்தோம். அதே ஆசைகளினாலேதான் சாகவும் செய்கிறோம்.

அது ஆளுக்கு ஆள்.. இடத்துக்கு இடம் மாறுபடும். அது அவரவர் வாழ்வில் அவரவர்க்கு மட்டுமே தெரியக்கூடிய ஒரு பகுதியாக இருக்கும். அந்தப் பகுதியைப் புரிந்துகொள்ள வாழ்ந்துதான் பார்க்க வேண்டி இருக்கிறது. அதுதான் இந்தப் படத்தில் நிகழ்கிறது.

ஜாக்கும் மார்கனும் நட்புக்குள் இணைந்தே கிடக்கிறார்கள். ஒருவரை ஒருவர் ஆழமாக நேசிக்கிறார்கள். அவர்கள் நிறைய பேசுகிறார்கள்.

நிறைய மௌனிக்கிறார்கள். பயணம் அவர்களைச் சமநிலைப்படுத்துகிறது. அவர்கள் இந்த உலகை இதுவரையில் இல்லாத இனி வரும் நிலையில் உணர முயற்சி செய்கிறார்கள். பயணங்களினூடாகப் பிரமிட்களில் அமர்ந்துகொண்டு இருவரும் பேசும் காட்சி இந்தப் படத்தில் மிக உன்னதமானது என்று சொல்லலாம். இந்த வாழ்வின் நோக்கம் வாழ்வதுதான் என்று புரியும் இடம்.

கார் ரேஸ் ஓட்டுகையில் சிவப்பு காரும் மஞ்சள் காரும் வானவில் சுமந்து செல்லும் காட்சியை நாம் உணர்வோம். இருவரும் மைக்கில் பேசிக்கொண்டே காரைச் செலுத்தும் போக்கு... அதே நேரம் நிஜமாகவே போட்டி போட்டு ஒருவரை ஒருவர் இடித்துக்கொண்டு விளையாடும் தருணம்...வெற்றி தோல்விகளற்ற அனுபவமாக மாறுவதை உத்வேகத்தோடு நாம் காண முடியும். உலகத்தின் மிக அழகான பெண்ணை முத்தமிட வேண்டும் என்பது கூட ஆசையில் ஒன்று. மொட்டைத்தலையுடன் புற்றுநோய் சிகிச்சைக்காக மருத்துவமனையில் படுத்திருக்கும்போது ஜாக்கோடு பேசிக்கொண்டே கண்ணீர் வரும் வரை சிரித்து மார்கன் அந்த ஆசையையும் தீர்த்துக்கொள்கிறார். ஜாக் கண்ணீர் வர வரவே சிரிக்கிறார்.

ஜாக்கின் மகள் தொடர்பான உரையாடலில் அதன் தொடர்பான செயல்பாடுகளில்.. ஜாக் மார்கனுடன் சண்டையிட்டுச் சென்று விடுகிறார். மார்கன் செய்வதறியாது தடுமாறுகிறார். ஒருவித அமைதி அவருள் அலைபாய்கிறது. அதன் பின் அமைதி தவழ தன் வீட்டுக்கு வந்து தன் மனைவியைக் காண்கிறார் மார்கன். அத்தனைக் காதல் கொண்ட தருணம் அது. குடும்பத்துடன் அமர்ந்து உணவருந்துகிறார் மார்கன். சமீபத்திய இடைவெளி வீட்டை இன்னும் அவருக்கு நெருக்கமாக்கி இருக்கிறது. ஆசைகள் காட்டிய அனுபவம் அவரை ஒருவித சமநிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

அதே நேரம் மார்கனுக்கு எதிர்மறையாக, யாருமே இல்லாமல் ஒரு இயந்திரம் போலத் தனியாக இருக்கும் ஜாக் உணவு பார்சலைப் பிரிக்கக் கூட பொறுமை இல்லாமல் அதைக் கசக்கி அடித்து வீசுகிறார். அங்கே முதுமையின் தனிமையை நன்கு உணர முடிகிறது. முதிய மனம் தனித்திருக்கையில் தவிப்பின் உச்சி தள்ளாட வைக்கிறது. அவரின் முகமும் அகமும் ஒருசேர தவிக்கிறது.

“நான் என்ன சின்ன பையனா.. இல்ல.. இதுதான் முதல் தடவையா” என்று மார்கன் கேட்டுக்கொண்டே அறையில் மனைவிக்காகக் காத்திருக்கிறார். ஒரு நினைவுக் கடலின் கொந்தளிப்பைப் போல அட்டகாசமான இசையைப் போல... மார்கனின் மனைவி அறைக்குள் நுழைகிறார். ஆனால் அதே நேரம் மார்கன் சரிந்து கிடக்கிறார். எல்லாம் நினைத்தது இல்லை. நினைக்காததும் சேர்த்திதானே வாழ்வு. எதிர் வரும் ஆச்சரியங்களின் கூட்டு முயற்சிதானே எதிர்காலம். மூப்பின் அந்திம காலம் மிக மிக அசாதாரணமானது. கொஞ்சம் அசௌரிகமானது கூட. வாழ்க்கை முழுக்க சேர்ந்துகொண்ட எல்லாக் கோபங்களும்.. தாபங்களும்.. சொல்லொணாத் துயரில் அயர்ச்சியை ஏற்படுத்தும் காலகட்டத்தில் அவர் தன்னைச் சரித்துக் கொள்கிறார்.

வாழ்க்கையின் முடிச்சுகளை நாம் போடவும் முடிவதில்லை. அவிழ்க்கவும் முடிவதில்லை. அது அதுவாகவே போட்டும் கொள்கிறது.. அவிழ்த்தும் கொள்கிறது. அதைப் புரியத்தான் குறைந்தபட்சம் ஒரு அறுபது ஆண்டுகளாவது மனிதன் வாழ வேண்டியிருக்கிறது. வாழ்க்கை அதனதன் போக்கே. தனி உடைமை என்பது நம் கவிதை போல... நமக்கு மட்டுமே புரியும்... அவர்கள் அவர்களுக்குள் சொல்லிக்கொள்வது போல.

நானும் கூட யோசிக்கிறேன். கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும் முன்னே முப்பதுவருடங்கள் ஓடிவிட்டன. பாதிக்குப் பாதி மிச்சமே இல்லாத வாழ்க்கையில் பெயர் மட்டுமே ஞாபகப்படுத்துகின்றது என்னை. உங்களுக்கும் இப்படித்தான் இருக்கும் என்றே நினைக்கிறேன். அதை உணரச் செய்த இந்தப் படத்தின் ஒவ்வொரு முடிச்சிலும் நாமே ஒளிந்துகிடப்பதுதான் பரவச நிலை. நிதர்சன சுய யோசனை.வாழ்வின் சந்து பொந்துகள் அதிசயம் கொண்டவை. எங்கிருந்து வேண்டுமானாலும் எதுவும் நடக்கும்.. திரைக்கதையை நாம் ஒருபோதும் எழுதவே முடியாது. அப்படி எழுதாத திரைக்கதையில்தான் அவரவருக்கான கதையின் சுவாரஸ்யம் இருக்கிறது.

இமயமலையின் உச்சியில் இருவரின் அஸ்தியோடுஉலராத நினைவுகளோடு பொதிந்து கிடக்கும் காட்சியோடு படம் முடிகிறது. ஏதோ உணர்ந்த மனதோடு கண்கள் நிறைய நம் சின்ன சின்ன ஆசைகள் இன்னுமொரு லிஸ்ட் தயாரிக்கிறது. சீக்கிரம் வாழ்ந்துவிட வேண்டும் என்பதுதான் மரணம் நமக்கு தரும் அன்புக் கட்டளை.

படத்தை இன்னும் ஒருமுறை பார்க்க வேண்டும்.

**படம் : தி பக்கட் லிஸ்ட்**
**இயக்கம் : ராப் ரெயினர்**
**மொழி : ஆங்கிலம்**
**வருடம் : 2007**



## ஆனந்தி பார்த்தசாரதி

### தி.ஜ.ர.

நான் மும்பையில் வசித்துவருகிறேன்.எனக்குப் பிடித்த எழுத்தாளர் பல பத்திரிக்கைகளில் உதவி ஆசிரியராகவும், ஆசிரியராகவும் பணியாற்றிய எனது தாத்தா திரு. தி.ஜ.ர. (தி.ஜ.ரங்கநாதன்) அவர்கள்.

எனக்கு அவரைப் பிடிக்கக் காரணம் நான் அவரது பேத்தி என்பதால் மட்டுமல்ல. அவரது தன்னம்பிக்கையான படைப்புகள்தான் காரணம். 1901ஆம் வருடம் பிறந்த அவர் நான்காம் வகுப்பு வரை மட்டுமே படித்திருந்தபோதும் அவரது படைப்புகளான குழந்தை இலக்கியங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் ஆகியவற்றில் அவர் கையாண்டிருக்கும் மொழியின் தரம் பிரமிக்கவே வைக்கிறது.



வெண்டல் வெல்கி, லூயி காரல் போன்றவர்களின் ஆங்கில நூல்களையும், ஹரிச்சந்திரநாத் சட்டோபாத்யாயா அவர்களின் வங்காள நாடகத்தினையும்..இன்னும் பல நூல்களையும் மற்றும் ராஜகோபாலாச்சாரி (ராஜாஜி) அவர்கள் எழுதிய அபேத வாதம் என்ற ஆங்கில அரசியல் நூலையும் தமிழில் மொழிபெயர்த்து எழுதியதில் அவரது புலமையும் தன்னம்பிக்கையும் புலப்படுகின்றன. அவரது படைப்புகள் அனைத்தும் 2006-07ஆம் நிதியாண்டில் தமிழக அரசால் நாட்டுடைமை ஆக்கப்பட்டிருப்பது அவரது படைப்புகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாகும்.

இத்தனைச் சிறப்பான.. மிகவும் எளிமையாக வாழ்ந்த எழுத்தாளர் திரு. தி.ஜ.ர. அவர்களின் குடும்பத்து வாரிசாகப் பிறந்திருப்பதில் மிகவும் பெருமையாகக் கருதுகிறேன்..

## லலிதா சங்கர்

### அனுராதா ரமணன்

அனுராதாரமணன் ஒரு யதார்த்த எழுத்தாளர். அவரது எழுத்து மிக எளிமையானது. வாசிப்பதற்கு நாம் எந்தப் ப்ரயத்தனமும் செய்ய வேண்டாம். வாழ்வின் நிதர்சனங்களை நம் கை பிடித்து அழைத்துச் சென்று காண்பிப்பதுபோல் இருக்கும் அவர் எழுத்து. இலக்கியத்தைப் பற்றி ஒருபோதும் பயமுறுத்தாத எழுத்தாளர். அவரின் "மீண்டும் மீண்டும் உயிர்த்தெழலாம்" வாசித்தால் சாவு கூட சுவாரஸ்யமாகிவிடும். அறிவுரையைக் கூட அறுக்காமல் சொல்ல அவர் ஒருவரால்தான் முடியும் என்பதற்குச் சாட்சி அவரின் "அன்புடன் அந்தரங்கம்." மிகச் சிக்கலான விஷயத்திற்குக் கூட மிக மென்மையான வார்த்தைகளில் அவர் கூறும் அறிவுரையைப் படிக்கும்போது ஒரு தாயின் அன்பான வருடலை உணர முடியும். உறவுகள் என்ற அவரின் கட்டுரைத் தொகுப்பில் அனைத்து உறவுகள் பற்றியும் அவர்தரும் விளக்கங்கள் அருமை. அவரின் சிறுகதைத் தொகுப்பின் இரண்டு பாகங்களையும் படித்தபின் நானும் ஒரு எழுத்தாளராகலாம் என்ற என் கத்துக்குட்டி எண்ணம் தவிடு பொடியானது. அனுராதா ரமணன் எனது ஆதர்ச எழுத்தாளர். இன்றும் அவர் எழுத்துக்களைத் தேடித் தேடிப் படிக்கிறேன். அது என் யானைப் பசிக்குச் சோளப் பொரி போல்தான் உள்ளது. படிக்கும் உங்களுக்கு என் வார்த்தை உயர்வுநவிற்சியாகத் தோன்றினாலும் என் மனதில் அவரின் இடத்தின் ஒரு துளிதான் இந்த என் எழுத்து. நன்றி.



● கவிஞர் விக்ரமாதித்யன்

# நகுலனிடமிருந்து விக்ரமாதித்யனுக்கு...



**கடிதம்-20**

'நகுலன்'

Trivandrum
17 - 8 - 83

நண்பருக்கு,

உங்கள் 11-8-83 கடிதம். உங்கள் சமீபத்திய கவிதைகளைப்பற்றி எனக்கு யாதொரு ஐயமும் இல்லை. சமீபத்தில் வந்திருந்த 'கணையாழி' கவிதைகளும் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. எனக்கு சில சொந்த விஷயங்களால் மிக அலைச்சல்; இப்பொழுது என் சகோதரி வந்திருக்கிறாள். இன்னுமொரு வாரத்தில் விரிவாக எழுதுகிறேன்.

**அன்புடன்**
**டி.கே.துரைசாமி**
**(நகுலன்)**

• • •

**கடிதம்-21**

TC 9/71 golf links Road
Kaudiyar East
Trivandrum 695041
14.3.84

நண்பருக்கு,

உங்கள் 12.3.84 கடிதம். மகிழ்ச்சி. நிச்சயமாக வாருங்கள். நான் இங்கதான் இருப்பேன். மார்ச் 31 வரை எனக்கு ட்யூட்டோரியலில் வேலை உண்டு. ஆனால் நீங்கள் வருவதால் எனக்கு ஒருவித அசௌகரியமும் கிடையாது. உங்களை ரயில் நிலையத்தில் அல்லது பஸ் நிலையத்தில் என்னால் சந்திக்க முடியவில்லை என்றால் நீங்கள் நேரடியாக என் வீட்டிற்கு வாருங்கள். எம்.எஸ். ராமஸ்வாமி சௌக்யம். அவர் உடல்நிலையும் சற்று க்ஷீண தசையில்தான்.

மற்றவை நேரில்.

**அன்புடன்**
**'நகுலன்'**

• • •

**விளக்கக்குறிப்பு :**

எம்.எஸ்.ராமஸ்வாமி :

மாவட்ட நீதிபதியாகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர்; மீ.ப.சோமு கவிதை முதல் தேவதேவன் கவிதைவரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, ஒரு நூலும் வந்துள்ளது.

• • •

## கடிதம்-22

‘நகுலன்’

TC 9/71 golf links Road
Kaudiyar East
Trivandrum - 695041
31.3.84

நண்பருக்கு,

உங்கள் 29.3.84 கடிதம். என் கவிதைத் தொகுதி வந்ததும் (ஆங்கிலம்) உங்களுக்கு ஒரு பிரதி அனுப்புகிறேன். இது நிற்க.

என்னிடம் ‘நீலக்குயில்’ உபரிப் பிரதி இல்லை. இருப்பதையும் உள்ள குப்பையில் கண்டுபிடிப்பது சாத்தியமில்லை. நீங்கள் சொல்வது ஒரு எல்லை வரைதான் சரி; தனியாக நின்றுவிடுவதும் அதைப்போலவே மீண்டும் வருவதும் இயற்கை. என்னைப் பற்றியவரை, நம்மையும் மீறித்தான் விஷயங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

நீங்களும் சரி, தேவதச்சனும் சரி எழுதிக்கொண்டுதான் இருப்பீர்கள். என்னுடைய அனுபவத்தை வைத்துப் பார்த்தால், நான் வெகுகாலத்திற்கு முன்பே எழுதுவதை நிறுத்தியிருக்கவேண்டும். அது நடைபெறவில்லை.

நண்பர் முருகேசபாண்டியனைக் கண்டதுபற்றிப் பின்னர் எழுதுகிறேன். அவசரம்.

**அன்புடன்**
**‘நகுலன்’**

• • •

**விளக்கக்குறிப்புகள்:**

1. ‘நீலக்குயில்’ : கோயில்பட்டியிலிருந்து வந்துகொண்டிருந்த சிற்றிதழ்; எஸ். அண்ணாமலை, இலக்கிய ஈடுபாட்டில், ஆசிரியராக இருந்து நடாத்தினார்; கி.ரா. முதல் வண்ணநிலவன் வரை எழுதியிருக்கிறார்கள்; அண்ணாமலை, ‘ஸ்வீட் மனோரமா’எனும் கடை வைத்திருந்தார்; பலகாரங்கள், சித்ரான்னங்கள் அங்கே வெகுருசியாக இருக்கும்.

2. முருகேசபாண்டியன் : இன்றைய தினம், ‘டிஸ்கவரி புக் பேலஸ்’ கொண்டுவரும் இலக்கிய இதழின் ஆசிரியர் / விமர்சகர். அன்றைய தினம், திருவனந்தபுரம் திராவிட மொழிகள் ஆய்வு நிறுவனத்தில் பயின்றுவந்தார்; நகுலன் குறித்து நல்லதொரு கட்டுரை எழுதியுள்ளார்.

• • •

## கடிதம்-23

TC 9/63 golf links Road
Kaudiyar East
Trivandrum - 695041
27-2-85

நண்பருக்கு,

நமஸ்காரம். உங்கள் ‘ஊரும் காலம்’ கிடைத்தது. படித்துவிட்டு சாவகாசமாக எழுதுகிறேன். இப்பொழுது வேலை நெருக்கடி.

சமயம் கிடைத்தால் ------------ கண்டு, நான் அவரிடமிருந்து கடிதம் எதிர்பார்ப்பதாகச் சொல்லுங்கள்.

உங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்.

சிரமத்திற்கு மன்னிக்கவும்.

**அன்புடன்**
**‘நகுலன்’**
**(டி.கே.துரைசாமி)**

• • •

**விளக்கக்குறிப்பு :**

ஊரும் காலம் : என் இரண்டாவது கவிதைத் தொகுப்பு.

• • •

**கடிதம்-24**

'நகுலன்'

TC 9/63 golf links Road
Kaudiyar East
Trivandrum - 695041
18-4-85

நண்பருக்கு,

நமஸ்காரம். உங்கள் 15-4-85 கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சியும் நன்றியும்.

சரி, என் நாவலைக் கொண்டுவர முயற்சிக்கிறேன். மீண்டும் பொருளாதார வகையில் அது நஷ்டமாகவே முடியும்.

திரு.க.நா.சு. சென்னை வந்த விஷயம் எனக்குத் தெரியாது - அவர் சென்னையிலேயே தங்குவதாகத் தீர்மானித்துவிட்டாரா? இதுகுறித்து எழுதுங்கள்.

க.நா.சு.வின் இலக்கியக்கொள்கைபற்றி ஒன்றை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அவருக்கு எழுபதுக்குமேல் வயதாகிறது. அவர் இந்த வயதிலும் உற்சாகமாக இயங்குவதுபற்றியும் யோசிக்கவேண்டும். சமீபத்தில் வந்த கந்தசாமியின் நாவல்களில், 'அவன் ஆனது'தான் சிறந்தது என்று அவர் குறிப்பிட்டிருப்பதையும் நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தமிழில் தரமாக எழுதுபவர்கள் எல்லோருமே கசப்பான அனுபவங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். தரமான எழுத்தாளர்களைவிட --- தான் அவ்வளவு கஷ்டப்படாமல் வாழ்கிறார்கள். ஆனால் இந்த நிலைக்கு அவர்கள் மாத்திரம் பொறுப்பில்லை. பொறுப்பு நீங்கள் குறிப்பிட்டிருக்கிற மாதிரி, 'வாக்காளப் பொதுமக்கள்'தான். நீங்கள், 'குழு' என்ற பதத்தை எந்த அர்த்தத்தில் உபயோகிக்கிறீர்கள்? எந்த ஒரு குழுவும் / தனி எழுத்தாளனும் இலக்கியபூர்வமாக இயங்கினால் அவனுக்கு அந்தக் குழுவுக்கு யாதொரு பின்துணையும் தேவையில்லை. இதையெல்லாம் நீங்கள் சற்று நிதானமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்னும் இதைப்பற்றி நிறைய சொல்ல இருக்கிறது. அதை நாம் நேரில் சந்திக்கும்பொழுது / சந்திப்போமென்றால் பேசிக்கொள்ளலாம்.

முருகேசபாண்டியனை நான் பார்க்கச் சென்ற நேரத்தில் அவர் சமயவேலுடனும் இன்னொரு நண்பருடனும் என் வீட்டிற்கு வந்திருந்தார். நான் வீடு திரும்பும்வரையில் எனக்காகக் காத்திருந்தார்கள். எனக்கு அதில் ஒரு மகிழ்ச்சி. நிச்சயமாக அவரை மீண்டும் சந்திக்கநேர்ந்தால் நீங்கள் கேட்டதாகச் சொல்கிறேன். எம்.எஸ்.ஆர்.,க்கு உங்கள் அன்பைத் தெரிவித்துவிட்டேன்.

-----வை நீங்கள் பார்க்கவேண்டிய அவசியமில்லை.

உங்கள் கவிதைத்தொகுதியைப் படித்துவிட்டேன். முதலில் எனக்குச் சில கவிதைகள் பூர்ணதிருப்தி அளிக்கவில்லை. அதனால்தான் உடனடியாக எழுதவில்லை. நீங்கள் ஒரு சுத்த ஆத்மா என்பதாலும், எனக்கு உங்களிடம் ஒரு பிரத்யேகப் பிணைப்பு உண்டு என்பதாலும், உங்கள் ஆற்றல்பற்றி எனக்கு எவ்வித சந்தேகமுமில்லை என்பதாலும், அதேசமயம் என் இலக்கிய அபிப்ராயத்தில் ஒரு விதச் சாய்வும் இருக்கக்கூடாது என்பதாலும், உங்களுக்கு அவசரமாக எழுத விரும்பவில்லை. சற்றுக் கால இடையீடு விட்டு உங்கள் தொகுதியை ஒரு முறைக்கு மூன்று முறையாகப் படித்தபின் எழுதுகின்றேன். இந்தத் தொகுதியில் சில கவிதைகள் மிகச் சிறப்பாக அமைந்திருப்பது, இந்தத் தொகுதியின் பிரசுரத்தை நியாயப்படுத்துகிறது. நீங்கள் ஒரு அசல் கவிஞன் என்பதை மீண்டும் ருசுவாக்கிறது. இந்த அடிப்படையில், ஆங்கிலத்தில், வேறொரு நூலுடன் இதையும் இணைத்து ஒரு கட்டுரை எழுதி, ஒரு ஆங்கில பத்திரிகைக்கு அனுப்பியிருக்கிறேன். பிரசுரமானால் (இது என் கையில் இல்லை.) அறிவிக்கிறேன்.

என் உடல் பலவீனப்பட்டுக்கொண்டிருக்கிறது. வண்டி அதிக நாட்கள் ஓடும் என்று தோன்றவில்லை. என் பிறப்பு என் அனுமதி பெற்று நடந்த விஷயமில்லை;

அதுபோல் அதன் முடிவையும் நிர்ணயிக்க அதிகாரம் கிடையாது.

சித்திரையில் நல்ல யோகம் வரும். நமது மரபின்படி வாழ்க்கையில் இருந்துகொண்டுதான் நாம் செய்யவேண்டியதைச் செய்யவேண்டும். இந்த அறுபதாவது வயதிலும் முடிக்கிறவரையில் நான் வேலை பார்க்கவேண்டும் என்ற நிர்பந்தத்தை நான் உதறிவிட முடியாது.

ஒரு வேலையில் நிரந்தரமாக இருந்துகொண்டு உங்கள் ஆற்றலை விருத்தி செய்துகொள்ளுங்கள். அதுதான் ஆரோக்கியமான வழி.

எப்பொழுதும் உங்கள் நலனைக் கோரும்

உங்கள் நண்பன்

**'நகுலன்'**

• • •

**விவரக்குறிப்புகள்:**

*1. க.நா.சு. : நவீன இலக்கியத்தின் பேராளுமை; 'பொய்த்தேவு' நாவல், தமிழின் நனிசிறந்த புதினங்களுள் ஒன்று; 'வாழ்ந்தவர் கெட்டால்', இன்னொரு நல்ல நாவல்; 'அசுரகணம்', 'வள்ளுவரும் தாமஸூம்' மற்றும் சில நாவல்களும் உண்டு.*

*க.நா.சு. வின் மொழிபெயர்ப்பு நாவல்கள் / சிறுகதைகள் மிக முக்கியமானவை; குறிப்பாக, 'மதகுரு' நாவல் மற்றும் ஒரு சிறுகதைத் தொகுப்பு.*

*புதுக்கவிதை முன்னோடிகளுள் ஒருவர்.*

*சீரிய விமர்சகர். க.நா.சு. தமிழுக்குத் தந்த கொடை மகத்தானது. வாசகர்கள், தவறாமல் படிக்கவேண்டும்.*

*2. கந்தசாமி : சா.கந்தசாமி. சிறுகதை / நாவல் ஆசிரியர்; இவருடைய 'சாயாவனம்' நாவல், காலத்தில் நிலைபேறு கொண்டிருக்கும்; சிறுகதைகள் சிலவும். விமர்சகரும் கூட.*

*3. முருகேசபாண்டியன் : ந. முருகேசபாண்டியன். விமர்சகர்; தீவிரமாக இயங்கிவருபவர்; எண்பதுகளின் நடுவே, திருவனந்தபுரம், திராவிட மொழிகள் ஆய்வுமையத்தில் பயின்றுவந்தார்; 'டிஸ்கவரி புக் பேலஸ்' வெளியிட்டுவரும் 'நிலவெளி' இலக்கியத்திங்கள் ஆசிரியர்.*

*4. சமயவேல் : சீரிய நவீன கவிஞர், மொழிபெயர்ப்பாளர், விமர்சகர்.*

*5. என் கவிதைத் தொகுப்பு : 'ஊரும் காலம்.'*

**- தொடரும்**



ஜின்னா அஸ்மி

# நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் 18

என் காதலின் மீது
கத்தி வைக்கிறாய்
அதை அன்பினால்
கூர் தீட்டுகிறாய்

• • •

எல்லோருக்கும் பொதுவானது கடவுள்
கடவுளுக்குப் பொதுவானது
காதல்

• • •

இருளில் தேடாதே
இருளைத் தேடு
காதல் தெரியும்

• • •

பதிலில் என்ன இருக்கிறது?
கேள்வியிலாவது
பதில் இருக்கிறது

• • •

கண்ணாடி போலல்ல காதல்..
நான் அழுதால்
அது சிரிக்கிறது

• • •

என் ஏக்கம்
உனது விளையாட்டுப் பொருள்.
இப்பொழுது நீ விளையாட
மிகவும் ஏங்குகிறாய்

• • •

என் வெற்றிக்குக் கூட
நீ தோல்வியைத்தான்
பரிசளிக்கிறாய்

• • •



## நட்ட கல்லும் பேசுமோ?

● பிரேமபிரபா

# ஒரு ஒரு ஊரிலே



சரியாகக் காலை ஏழு மணிக்கு ஒரு முறையும், மாலை ஆறு மணிக்கு ஒரு முறையும் அரைத் தூக்கத்தில் கைகளை மேலே உயர்த்திச் சோம்பேறித்தனத்துடன் கொட்டாவி விடுவது போல் பஞ்சாலையின் சங்கு ஒலிக்கும். பஞ்சாலைக்குச் செல்லும் வழியில் இருக்கும் தட்டோடு பதித்த ஒரு சிறிய டீக்கடையில் காலை நேரத்தை விட மாலையில் கொஞ்சம் கூட்டம் அதிகமாகவே இருக்கும். பணி முடிந்து வீடு திரும்பும் தொழிலாளிகள் தங்களின் சங்க வேலைகளைக் குறித்துஅங்கேதான் நெடுநேரம் பேசி முடித்து அங்கேயே தீர்மானமும் எடுத்துவிடுவார்கள். டீக்கடை நடத்தும் முத்தையாவும் அவர்களில் ஒருவனாக விவாதத்தில் உரிமையாகச் சேர்ந்து கொள்வான்.

“நம்ம அய்யாத்துரை மில்லுலே வேலைக்குச் சேந்து ஐம்பது வருசத்துக்கு மேலே ஆயிடுச்சாம். நாளைக்குத்தான் வேலைக்குக் கடைசி நாளுன்னு மேஸ்திரி சொன்னாரு. அவருக்கு நம்ம சங்கத்துச் சார்பா எல்லாரும் சேந்து கௌரவம் செய்யணும்,”அய்யாத்துரையின் வயதையொத்த தொழிலாளி சோணைமுத்து பேச்சை ஆரம்பித்தார்.

“இன்னும் ரெண்டு வருசம் வேலை பாக்கறீங்களான்னு சூப்ரவைசர் கேட்டப்போ கூடமுடியாதுன்னுட்டாராமே, அது யாருக்காவது தெரியுமா?”அனைவரையும் சிறிது நேரம் வியப்பிலாழ்த்திய திருப்தியில் நீலமேகம் கேள்விகேட்க, தூரத்தே அய்யாத்துரை அவர்களை நோக்கி சைக்கிளில் மெதுவாக வந்துகொண்டிருந்தார்.

இந்த வயதிலும் கட்டுக்கோப்பான உடல்வாகு. நரைமுடிகளின் அவசர ஆதிக்கத்துக்குப் பதிலடி கொடுக்கும் வண்ணம் கருத்த முடிகளும் அதே அளவில் இளமைத் துள்ளலுடன் எட்டிப்பார்த்தன. “அண்ணனுக்கு ஒரு டீ” என்று அதிகாரமாகத் தங்களுக்கிடையே இருக்கும் நெருக்கத்தைச் சக தோழர்களுக்குக் காட்டினான் சோணைமுத்து. டீயைக் குடித்துக்கொண்டே கடைக்கு வெளியே வந்தார் அய்யாத்துரை. அவரைச் சூழ்ந்துகொண்டு மற்றவர்களும் வெளியே போட்டிருந்த மர பெஞ்சில் வந்தமர்ந்தார்கள். கண்மாயின் குளிர்ந்த காற்று அனைவரையும் சிறிது நேரம் தன்னிலை மறக்கச் செய்தது.

“நாளையோட வேலைக்குக் கடைசி நாள். இப்போதான் வேலைக்குச் சேர்ந்தது மாதிரி இருக்கு. அதுக்குள்ளே நாப்பது வருஷம் கண் மூடித் தொறக்கரத்துக்குள்ளே ஓடிடிச்சு. இத்தனை நாளு என் குடும்பத்துக்கு உழைச்சேன். இனிமே என் ஐயன் சோணைச்சாமிக்கும், கருப்புச்சாமிக்கும் சேவகம்பாத்து மிச்ச நாளை சந்தோசமா ஓட்டிடுவேன்,”அய்யாத்துரையின் பேச்சில் நிறைவாக வாழ்ந்த திருப்தி தெரிந்தது. இனிமேல் வாழ்வதற்கான அர்த்தமும் புரிந்தது.

அய்யாத்துரையைத் தொழிலாளியாகத் தெரிந்த அனைவருக்கும் அவர் ஒரு மிகச் சிறந்த நாட்டுப்புறப் பாடகர் என்று நிச்சயம் தெரியும்.

நெற்காவல், நீர்க்காவல், ஊர்க்காவல் என்று கிராமங்களில் காவல் காத்து வரும் குடும்பங்களில் அய்யாத்துரையின் குடும்பமும் ஒன்று. தெய்வங்களாகிப்போன அவரது மூதாதையர்கள் வீரண மணியம், முத்திருளாண்டி மணியம் இருவரைப் பற்றித் தானே பாட்டெழுதிப் பாடும் திறமைப் பெற்றவர். அந்த இருவரும் கிழக்குச் சீமையிலிருந்து சிறுவாலை ஜமீனிடம் வேலை பார்க்கக் கிளம்புவதிலிருந்து இறுதியில் காவல் பணியில் உயிர்விட்டுப் பட்டவர்களாகும் வரை அனைத்தையும் தொகுத்து ஒரு கதை போலப் பாடுவார். முதலில் கட்டை கொடுத்த கம்மாளன், உடுக்கை கொடுத்த உத்தமன், சத்தம் கொடுத்த சாம்பசிவன் என அனைத்துத் தெய்வங்களையும் பணிந்து வணங்கிவிட்டுக் கதையைத் தொடங்குவார்.

கருக்கல் நேரம். உழவர்கள் ஏரைத் தோளில் சுமந்துகொண்டு அன்றைய கதைகளைப் பேசிக்கொண்டே நடந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன் உழவு மாடுகளும் தத்தம் வீடுகளில் தயாராய் வைத்திருக்கும் கழனிப்பானையை நினைத்துகொண்டே வேகமாய் நடந்தன. பெருகி ஓடும் நீரின் சலசலப்புடன் கூடடையும் பறவைகளின் ஒலியினை ரசித்துக் கேட்டுக்கொண்டே வீரண மணியம் தன் மகன் முத்திருளாண்டியைப் பார்த்தார். அவனோ மலைகளுக்கிடையில் ஊஞ்சல் ஆடிக்கொண்டே மறையும் ஆதவனின் அழகை ரசித்துக்கொண்டிருந்தான். உயர்ந்து கம்பீரமாகக் குதிரையில் அமர்ந்திருக்கும் ஐய்யனார் கோயிலின் முன் இருக்கும் பலி பீடத்தில் யாரோ ஒரு அகல் விளக்கை ஏற்றியிருந்தார்கள். தந்தை வீரண மணியமும் அவருடைய தனயன் முத்திருளாண்டி மணியமும் புட்டுத் தோப்பிலிருந்து சிறு வாலை ஜமீனின் அழைப்பிற்கிணங்கக் காவல் வேலைக்குச் செல்கின்றனர். சிறுவாலை போகும் வழியில் ஆளுக்கொரு பெட்டியுடன் இருவரும் பிரிந்துவிடுகிறார்கள்.

இருளப்ப சுவாமியுடன் இருபத்தோரு தெய்வங்கள் அடங்கிய பெட்டியைத் தலையில் சுமந்துகொண்டு தந்தை வீரண மணியம் வந்து சேர்ந்தது அலங்காநல்லூர்சாலையில் இருக்கும் அரியூர்மந்தைஐயன்படிவாசல். அரியூர் மந்தைக்கு அவர் வரும்போது நன்றாக இருட்டிவிட்டது. அவர் தலையில் சுமந்துகொண்டு வந்த பெட்டியைக் கீழே இறக்கி வைத்துவிட்டு அங்கிருந்த கோனாரிடம் தான் வந்த விபரத்தைச் சொல்கிறார். பிரயாணக் களைப்பில் தாக சாந்தி செய்ய கோனாரிடம் தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டுக் கீழே இறக்கி வைத்த பெட்டியை எடுக்க முயற்சிக்க அவரால் அதை எடுக்க முடியவில்லை. மனமுருக இருளப்ப சுவாமியை வேண்டிக் கேட்க இந்த ஆலயத்தில் இங்குதான் இருப்பேன் என்று சாமி சொல்லிவிட்டது.

கோனாரும் வீரண மணியமும் சிறு வாலை சென்று ஜமீந்தாரிடம் நடந்ததைக் கூறுகிறார்கள். அனைத்தையும் பொறுமையாகக் கேட்ட ஜமீந்தார் “அரியூரும் எங்கள் ஊர்தான். கோனாருக்குக் காவலாய் இருந்து நாங்கள் மதுரைக்குச் செல்லும்போது வழியனுப்பவேண்டும். உங்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் நானே செய்து கொடுக்கிறேன். இருளப்ப சுவாமிக்கு வழிபாடு நடத்தி அந்த ஊரிலேயே காவல் காத்து வாருங்கள்” என்றார். இதைக் கேட்ட வீரண மணியம் ஜமீந்தார் கூறியதை இருளப்ப சுவாமியின் அருள் வாக்காக மதித்து அரியூரிலேயே தங்கி வழிபாடுகளை மேற்கொண்டார். அந்த ஊர் மக்களும் இதையறிந்து வீரண மணியத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்கள்.

சில காலம் முன்பு அலங்காநல்லூரில் ஊர்வலமாக வரும் அழகருக்குப் பூப்பல்லக்கு ஜோடிக்க அந்தணர் குடும்பம் அடங்கிய ஒரு கூட்டம் ஒன்று வந்துகொண்டிருந்தது. வைகையில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. அந்தணரின் குடும்பம் வைகையில் நீரருந்திவிட்டுத் திரும்பிப் பார்க்கையில் அந்தணரின் குழந்தையைக் காணவில்லை. பல இடங்களிலும் தேடிப்பார்த்து விட்டுக் குழந்தை கிடைக்காமல் போகவே அலங்காநல்லூருக்குச் சென்றுவிட்டார்கள்.

புத்திர சோகத்தில் உழன்று செய்வதறியாது குழம்பிய வேளையில் ஒரு பெரியவர் கனவில் வினாயகர் வந்து எந்த இடத்தில் குழந்தையை அவர்கள் தொலைத்தார்களோ அதே இடத்தில் விடிந்த பிறகு வந்து பார்க்குமாறு கூறினார். நீண்ட பொழுதாக அந்த இரவு அந்தணருக்குக் கழிந்தது. விடிந்த பிறகு அவர்கள் குழந்தை காணாமல் போன அந்த இடத்தில் வந்து பார்க்கும்போது அங்கே அழகர் பெருமாள், இலட்சுமி, விநாயகர், கருப்பசாமி சிலைகளுடன் குழந்தையும் குழந்தையின் தாய், தகப்பன் வடிவில் மேலும் இருவரும் இருந்தார்கள். அனைவரையும் மனதார வணங்கிய அந்தணர் குடும்பத்தினரிடம் குழந்தையின் தாய், தந்தையாக இருந்தவர்கள் சிறு வாலை ஜமீந்தார் வரும்போது இங்கு நடந்த விபரங்களை அவரிடம் கூறிவிடுங்கள் என்று சொல்லி மறைந்துவிட்டார்கள்.

அங்கு வந்த ஜமீந்தார் அனைத்தையும்

கேட்டறிந்து அந்த அந்தணர் குடும்பத்தை அங்கேயே தங்கி மேற்கொண்டு பூஜைகள் செய்து வழிபட வேண்டிக்கொண்டார். அதுவே பிற்காலத்தில் கோயில் பாப்பாக்குடி என்றழைக்கப்பட்டது.

இப்படியாக, தந்தை வீரணமணியம் அரியூரிலேயே தங்கிவிட அவருடைய தனயன் முத்திருளாண்டி மணியம் சிறுவாலைக்கு வழி கேட்டுக்கொண்டே பெட்டியுடன் அந்தணர் குடும்பம் வசிக்கும் கோயில் பாப்பாக்குடியை வந்தடைந்தான். தான் கொண்டு வந்த பெட்டியைக் கீழே இறக்கி வைத்துவிட்டு அந்தணரிடம் நீர் வாங்கித் தாகம் தீர அருந்தினான். கீழே இறக்கி வைத்த பெட்டியை எடுக்க எவ்வளவு முயன்றும் அவனால் முடியவில்லை. இதைப் பார்த்த அந்தணர் ஜமீந்தார் வரும்போது இதைப் பற்றித் தெரிவிக்கலாம் என்றும் அதுவரை தங்களுக்குக் காவலாக இருக்குமாறும் முத்திருளாண்டி மணியத்திடம் வேண்டிக்கொண்டார்.

சில நாட்கள் கழித்து அங்கு வந்த சிறுவாலை ஜமீந்தார் விபரங்களைக் கேட்டறிந்து முத்திருளாண்டி மணியத்திடம் அவருடைய தந்தை வீரண மணியம் தற்போது அரியூரில் இருப்பதைக் கூறினார். முத்திருளாண்டி மணியமும் அரியூர் சென்று தாய் தந்தையரைக் கண்டு விபரத்தை அறிந்தான். சில நாட்கள் கழித்து அனைவரும் ஒன்றாகக் கோயில் பாப்பாகுடியில் இருந்துகொண்டு ஜமீந்தார் கேட்டது போலத் தெய்வக் காரியங்களில் தங்களை முழுவதும் ஈடுபடுத்திக்கொண்டார்கள். அமைதியாகச் சென்ற அவர்களின் வாழ்க்கையில் எதிர்பாராத விதமாக ஒரு நிகழ்ச்சி நடந்தேறியது.

வழக்கம் போலக் கோயில் காரியங்களை முடித்துவிட்டுத் தந்தையும் தனயனும் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்கள். அப்போது புதரினுள் யாரோ இருவர் தணிந்த குரலில் பேசிக்கொண்டிருக்கும் சப்தம் கேட்டு முத்திருளாண்டி மணியம் தந்தையை அமைதியாக இருக்கச் சொல்லி மறைவாக நின்று அவர்கள் பேசுவதைக் கேட்டார். அங்கிருக்கும் சில வீடுகளைக் குறிப்பிட்டு எப்படியாவது இன்று அங்கு சென்று கொள்ளையடிக்க ஒருவன் கூற மற்றவனும் அதை ஆமோதித்தான். கோயில் பற்றியும் அவர்கள் பேசிக்கொண்டார்கள். ஜமீந்தார் கோயிலிற்குச் செய்த ஆபரணங்களைப் பற்றியும் யாருமறியாமல் எப்படி கோயிலிற்குச் செல்லவேண்டும் என்பதையும் ஏற்கனவே பலமுறை திட்டமிட்டவர்கள் போலப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஓரத்தில் நின்றுகொண்டிருந்த தகப்பனாரை முத்திருளாண்டி மணியம் செய்கையால் அருகில் அழைத்தான். அந்தக் கள்வர்கள் பேசுவதைக் கேட்ட அவர் துளியும் தாமதிக்காமல் அவர்கள் எதிர்பாராத நேரத்தில் தாக்கினார். இதை எதிர்பார்க்காத கள்வர்கள் கையில் இருக்கும் சிறிய கட்டாறியை அவர் மேல் எறிய உடனே முத்திருளாண்டி மணியம் குறுக்கே பாய்ந்தான். அவனுடைய இடது தோள்பட்டையை உரசிக்கொண்டு சென்ற கட்டாறி தந்தை வீரணமணியத்தின் மார்பில் பாய அவர் சரிந்து கீழே விழுந்தார். பேசிக்கொண்டிருந்த கள்வர்கள் இருவருடன் மேலும் சிலர் அங்கு வந்து சேர முத்திருளாண்டி மணியம் அவர்களுடன் அதிகம் போராட வேண்டி இருந்தது. அவனுடைய தந்தை உயிருக்குப் போராடிக்கொண்டிருக்க செய்வதறியாது குழம்பி நின்ற அந்த நொடியில் கள்வர்களில் ஒருவன் பின்புறமாக வந்து தாக்கினான். அதில் ஒருவன் கூரான கழியை எடுத்து வீச அது முத்திருளாண்டி மணியத்தின் நெஞ்சில் பாய்ந்தது. அதற்குள் அரவம் கேட்டு ஊர்க்காரர்கள் திரண்டு வந்தார்கள். கள்வர்களின் தாக்குதலால் உயிருக்குப் போராடும் தந்தையையும் தனயனையும் கண்ட மக்கள் செய்வதறியாமல் குழம்பி நிற்க இருவரின் உயிரும் மெல்லப் பிரிந்தது. இருளப்ப சாமியின் கோயில் கோபுரத்திலிருந்து இரண்டு புறாக்கள் பறந்து சென்றதைக் கண்ட ஒருவன் வீரண மணியமும், முத்திருளாண்டி மணியமும் தெய்வமாகிப் போனார்கள் என்று உரத்த குரலில் கத்திக்கொண்டே ஊருக்குள்ளே ஓடினான்.

ஊரின் மேற்கே உள்ள அய்யனார் கோயிலில் பட்டவர்களான வீரணமணியத்திற்கும், அவருடைய தனயன் முத்திருளாண்டி மணியத்திற்கும் சிலை இருக்கிறது. அய்யனாரின் பரிவாரங்கள் கிராமத்திற்கே உரித்தான பகட்டான அரண்மனை, ஆடம்பரமான மாளிகையெல்லாம் விரும்பாமல் இண்டஞ்செடி, சங்கஞ்செடி மண்டிய மேடைகளில் திறந்த வெளியில் கோயில் கொண்டிருக்கிறார்கள் என்பது அதன் முக்கியச் சிறப்பு

இப்படியாக ஒரு அடர் மழைக் காலத்தில் அய்யாத்துரை நடுக்கூடத்தில் அமர்ந்துகொண்டு பேரன் பேத்திகளிடம் தன் முன்னோர்களின் கதையைச் சொல்லி முடிக்க அதுவரை திண்ணையில் அமர்ந்து கதை கேட்ட அந்தப் பெரியவரும், அவரின் மகனின் வயதையொத்த அந்த இளைஞனும் அங்கிருந்து வெளியேறி இருளப்ப சாமி கோயிலை நோக்கி நடந்தார்கள். ■

● இரா.பூபாலன்




# ஆகுளி - சிறுபான்மைக்காக அதிரும் சிறு பறை

தமிழ் மொழியில் ஒரு சொல் என்பது மிக நீண்ட ஆயுளைக் கொண்டது. வேறெந்த மொழியை விடவும் தமிழில்தான் சொற்கள் பன்னெடுங்கால ஆயுள் கொண்டவையாக இருந்துவருகின்றன. சங்க இலக்கியத்தில் சொல்லப்பட்ட ஏராளமான சொற்கள் இன்றளவும் மக்களின் பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் உயிர்ப்புடன் இருந்து வருகின்றன என்பது தமிழன் தனது மொழியைச் சிதையாமலும் அழியாமலும் பல்லாயிரம் ஆண்டு காலம் காத்துவருகிறான் என்பதன் எடுத்துக்காட்டு. இன்றைய நவீன தமிழில் நாம் பழஞ்சொற்கள் பலவற்றைக் கைவிட்டுவிட்டோம். மிகக் குறைந்த சொற்களுக்குள் புழங்கி நமது படைப்பின் எல்லையைச் சுருக்கிக்கொண்டோம். நாம் புழங்கிக்கொண்டிருக்கும் சில ஆயிரம் சொற்களுக்கு வெளியே நம் மொழி சில லட்சம் சொற்களுடன் ஒரு பேராழியாக நீண்டு விரிந்துகிடக்கிறது. ஒரு சொல் என்பது கூழாங்கல்லைப் போலப் பளபளப்பாக இருக்கிறது. கூழாங்கல்லைப் போலவே காலமெல்லாம் மொழியின் பிரவாகத்தில் உருண்டு உருண்டு தன் பளபளப்பைப்

பெறுகிறது.

கவிஞர் கீதாபிரகாஷ் வெளியிட்டிருக்கும் அவரது இரண்டாவது தொகுப்பின் பெயரைக் கேட்டதும் அந்தச் சொல் மிகப் புதியதாக இருந்தது எனக்கு. அந்தச் சொல் மிகப் புதியதன்று மிகப் பழையது. ஆகுளி அவரது கவிதைத் தொகுப்பின் பெயர். இந்தச் சொல் நம் பண்டைய இலக்கியங்களான புறநானூறு, மலைபடுகடாம், பெரிய புராணம் உட்பட பலவற்றில் பயன்படுத்தப்பட்டிருப்பது தெரியும். ஆகுளி என்பது பறையின் வகையைச் சேர்ந்த ஒரு சிறிய இசைக்கருவி. குறிஞ்சி நிலத்தைச் சேர்ந்த மக்கள், சிவ வழிபாட்டில் பயன்படுத்திய உடுக்கையைப் போன்ற சிறிய இசைக் கருவி. சரி! இந்தத் தொகுப்பு இசையைப் பற்றியதா, இசைக்கருவிகளைப் பற்றியதா, பறையைப் பற்றியதா என்றால் இல்லை. ஆகுளி என்பது இங்கு காரணப் பெயர். சிறுமையைக் கண்டு அதிரும் சிறு பறை, சிறுபான்மைக்கு எதிராகக் குரலுயர்த்தும் ஒரு சிறிய கருவி இந்தக் கவிதைகள், இந்தக் கவிஞர்.

பெண்ணின் வலிகளைப் பெண் எழுதும்போது தெறிக்கும் உண்மையின் பெருவலி வாசகனுக்குத் தன் வலியாகக் கடத்தப்படுகிறது. எப்போதாவது குருதி பார்க்கும் ஆண்களைப் போலில்லை பெண்கள் என்பது எத்தனை சத்திய வாக்கு.

உயிர் போய் உயிர் வரும்
பிரசவத்திற்குப் பின்பு
ஆட்டின் கோழியின் கல்லீரல் போல்
கட்டி கட்டியாகக் கொட்டித்தீர்க்கும்
கழிவுத்தீட்டு
பெண் உடலின் சிவப்புக் குருதியை
வெறும் இரத்தமென
எப்படிச் சொல்வது?
எப்போதாவது
குருதி பார்க்கும்
ஆண்கள் போலில்லை
பெண்கள்
மாதங்கள் தோறும்
குருதியின் வாடை
சுமக்கும் பெண்டீரை
மோப்பம் பிடித்து வரும்
எறும்புகளிடம் தப்பித்தல்
அத்தனை எளிதல்ல

எறும்புகளிடம் தப்பிக்க எத்தனை பிரயத்தனம் வேண்டியிருக்கிறது எப்போதும் பெண்டிருக்கு.

புதிதாக வந்தவர்களிடம்
பழைய ரகசியங்களை
ஒரு போதும் சொல்லாது
வாடகை வீட்டின் சுவர்கள்

புதிய நண்பர்களிடம் பழைய ரகசியங்களை மனிதர்கள்தான் சொல்லிவிடுகிறார்கள். பழைய நண்பர்களின் பழைய அன்பைத் துறந்துவிடுகிறார்கள். எத்தனை நினைவுகளைக் கிளறிவிடுகிற கவிதை இது.

தன் கூவலை நிறுத்திச்
செய்வதறியாது
தலையசையாமல்
மரத்தின் கிளையில் அமர்ந்து
பெண்ணொருத்தியின் கதறலை
வெறுமனே கண் அகலப் பார்க்கிறது
ஒற்றைக் குயில்
பிறகு அவளின் கால்கள் உதற உதற
கழுத்தில் மேலும் கீழுமாய்
இழுபறித்து அடங்கிய சுவாசம்
அடங்கிய கணம்
எங்கிருந்தோ வந்த பிணப்பறவை
குருதி படர்ந்த அவள் சதைகளைக்
கொத்தத் துவங்கியவுடன்
தன் கேவலோடு
வேறு கிளைக்குத் தாவியது

## சாட்சியான அந்த

## ஒற்றைக் குயில்

பெண்ணொருத்தியின் கதறலைக் கண்களால் கண்ட ஒற்றை சாட்சியாக இருக்கும் குயில்தான் இந்தக் கவிதை. இந்தக் கவிதை காலத்தின் சாட்சியாக இருக்கிறது. தன் காலத்தில் கொல்லப்பட்ட ஆயிரமாயிரம் பெண் கொலைக்கும், ஒரு நாகரீக சமுதாயம் தன் நாகரீக உச்சத்திலும் பெண்ணை சக மனுஷியாய் ஒரு துளியும் பொருட்படுத்தாது வல்லுறவு கொண்டு சாகடித்துக்கொண்டிருந்தது என்கிற கசப்பான வரலாற்றிற்கும் சாட்சியாக இருக்கப்போகிற படைப்பில் இதுவும் ஒன்றாக இருக்கும். இதைத்தான் படைப்பின் நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

ஆகுளி தொகுப்பு முழுவதும் சமூகத்துக்கான கவிதைகள் சிறு பறையென அதிர்கின்றன. கவிஞரின் குரல் வலுவாகக் கவிதைகளில் ஒலிக்கிறது. கவிதைகள் வெறும் விளையாட்டுப் பொருளல்ல என்று தீர்க்கமாக நம்பும் என் போன்ற வாசகர்களுக்கு இதில் உள்ள மிகை உணர்ச்சியும், வலிந்த கட்டமைப்பும் ஒரு குறையாகத் தெரியாது. கவிதைகள் தன்னளவில் சமூகத்துக்கான பணியைச்செய்துகொண்டிருக்கின்றனஎன்கிற நம்பிக்கை காரணமாக இருக்கலாம். கவிஞர் கீதாபிரகாஷ் தன் கவிதைத் தொகுப்புக்கான கவிதைகளை மிகச்சரியாகவும் நியாயமாகவும் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

நெகிழிப் பை மீன்களின் அழுகை, திருவனந்தபுரம் கொச்சுவேலி எக்ஸ்பிரஸை ஒன்றன் வாலை ஒன்று பிடித்து வரிசையாக வரும் யானைகளென்ற ஷமிக்குட்டியின் கற்பனை, வழிந்துபோகும் பெண் குருதியைத் தீட்டெனச் சொன்ன ******* மகன் யார் ? எனும் சீற்றம், நிலமற்றுப் போனவனின் மலடான நிலம் குறித்த கவலை, அவள் உங்களைப் போல இல்லை எனும் பிரமாணம், மாரிமுத்துத் தாத்தாவின் வாயில் ஒட்டியிருந்தது அவரது நிலத்தின் மண் என்று தனது கவிதைகள் அனைத்திலும் சமூகத்துக்கான சில சொற்களையேனும் வைத்திருக்கிறார். கேள்விகளை, பூடகமான பதில்களை, நேரடியான கோபங்களை, மறைமுகமான அரசியல் நையாண்டிகளைப் பேசியிருக்கிறார் கவிதைகளில்.

தொடர்ந்து தனது கவிதைகளை ஆகுளியின் இசையென இசைத்தபடியேயிருக்கட்டும்.

வெளியீடு : அகநி வெளியீடு, 3, பாடசாலை வீதி, அம்மையப்பட்டு, வந்தவாசி-604 408

**பேச : 98426 37637**

**விலை : ரூ 70/-**



ஆய்வு

தொடர் – 6

● கடையநல்லூர் பென்ஸி

# கீழடி - தமிழின் தாய்மடி




கீழடித் தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் அமர்நாத் ராமகிருஷ்ணாவின் பணிமாறுதலைத் தொடர்ந்து மூன்றாம் கட்ட அகழாய்வைப் பற்றி இந்தியத் தொல்லாய்வுத்துறை மௌனம் காக்க, தமிழக அரசியல் கட்சிகள், பொதுநல அமைப்புகள் மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கின.

முடங்கிக் கிடக்கும் இப்பணி குறித்து நாடாளுமன்ற நிதிநிலை அறிக்கைக்கான கூட்டத் தொடரின்போது, மாநிலங்களவையில் ஜனவரி 2-ஆம் தேதி(2017) “தமிழகத்தின் கீழடி கிராமத்தில் தொல்லியல் அகழாய்வுப் பணியைத் தொடங்கக் கோருதல்” எனும் தலைப்பின்கீழ் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்து தமிழகப் பாராளுமன்ற உறுப்பினர் பேசினார்.

இந்திய ஆட்சிப்பணி அலுவலரும் திராவிடவியல் ஆய்வாளரும், ஒடிசா மாநிலக் கூடுதல் தலைமைச் செயலராகவும், வளர்ச்சி ஆணையராகவும் பணியாற்றி, பணி ஓய்விற்குப் பிறகு அம்மாநிலத்தின் சிறப்புத் தலைமை ஆலோசகர் பொறுப்பில் இருந்தவர் திண்டுக்கல் நத்தம்தந்த முத்து ஆர்.பாலகிருஷ்ணன். சிந்துவெளி ஆய்வுகளுக்காகப் பெரியார்-மணியம்மை பல்கலைக்கழகம் 2017-இல் இவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியது. தற்போது சென்னை ரோஜா முத்தையா நூலகத்தில் உள்ள சிந்துவெளி மையத்தின் கௌரவ ஆலோசகராகவும் சிந்துவெளி தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டும் வருகிறார். அவர் சொல்கிறார்,

“இந்த ஆய்வு முடிவுகளுக்கும் சங்க இலக்கியத்திற்கும் என்ன தொடர்பு எனக் கேட்கிறார்கள். சங்கப் பாடல்கள் அந்தக் காலகட்டத்து மண்ணையும் மனிதர்களையும் பாடின. அந்தப் பாடல்களுக்கான வரலாற்றுப் பின்னணியை இங்கே கிடைத்த பொருட்கள் உணர்த்துகின்றன. சங்க காலப் பாடல்கள் காட்டும் தமிழ்ச் சமூகம் மிக உயர்ந்த நாகரீகம் கொண்டதாகத் தென்படுகிறது. அப்படி ஒரு நாகரீகம் இருந்திருந்தால்தான், அம்மாதிரி பாடல்கள் உருவாகியிருக்க முடியும். அதற்கான ஆதாரமாகத்தான் கீழடி இருக்கிறது.”

மற்றொரு விஷயத்தையும் பாலகிருஷ்ணன் சுட்டிக்காட்டுகிறார். “சிந்து சமவெளி குறியீடுகளுக்குப் பிறகு தமிழ் பிராமி உருவாவதற்கு முன்பாகக் கீறல்கள் பானைகளில் எழுதப்பட்டுள்ளன. சிந்துவெளிக் குறியீடுகளைப் போலவே இந்தக் கீறல்களையும் படிக்க

முடியவில்லை. இம்மாதிரியான பானைக் கீறல்கள் இந்தியாவிலேயே அதிகம் கிடைத்திருப்பது தமிழ்நாட்டில்தான். கீழடியில் மட்டும் 1001 பானைக் கீறல்கள் கிடைத்திருக்கின்றன. இது எழுத்து உருவாவதைக் காட்டுகிறது. இம்மாதிரியான கீறல்கள் கங்கைச் சமவெளியில் பெரிதாகக் கிடைக்கவில்லை", என்கிறார் அவர்.

மூன்றாம் கட்ட அகழாய்வு :

அமர்நாத் ராமகிருஷ்ணாவின் பணிமாறுதலுக்குப்பின் ஒரு வருட இடைவெளியில் 2017ஆம் ஆண்டு மத்தியத் தொல்லியல் கண்காணிப்பாளர் ஸ்ரீரமணன் தலைமையில் தொடங்கிய அகழாய்வுப் பணி செப்டம்பர் 30ஆம் தேதி நிறைவுபெற்றதாக அறிவிக்கப்பட்டது. 16 குழிகள் தோண்டப்பட்டு மொத்தத் தொல்லியல் பரப்பு 400 சதுரமீட்டர்களானது.

இந்நிலையில் இந்தியத் தொல்லியல் துறை நடத்திவரும் கீழடி அகழ்வாய்வு அறிக்கையை வெளியிடவும், தமிழக அரசும் இணைந்து ஆய்வை நடத்திடவும், அங்கு கிடைத்த பொருட்களைக் கீழடியிலேயே அருங்காட்சியகம் அமைத்துப் பாதுகாக்க இடம் ஒதுக்கப்படவும் வழக்கறிஞர் கனிமொழி மதி, சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் பொதுநல வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கில் சரியான தீர்ப்பை அளிக்க வேண்டும் என்பதால் அவர்கள் நேரடியாகக் கீழடிக்குச் சென்று ஆய்வு நடத்தி அதன் பின்னர் இந்தியத் தொல்லியல் துறைக்குப் பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்தனர். அதில் முக்கியமான ஒன்று மத்தியத் தொல்லாய்வுத் துறையுடன் தமிழகத் தொல்லியல் துறையும் இணைந்து 4ஆம் கட்ட அகழாய்வு நடத்த மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்பது.

நான்காம் கட்ட அகழாய்வு :

நான்காம் கட்ட அகழாய்வுப் பணிகள், தமிழகத் தொல்லியல்துறை இயக்குநர் டாக்டர் ஆர்.சிவானந்தம் தலைமையில் தொடங்கியது. இதில் நாள்தோறும் 40-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்தனர்.

ஐந்தாம் கட்ட அகழாய்வு :

நான்காம் கட்ட அகழாய்வுக் குழுவே ஐந்தாம் கட்டஅகழாய்வை ஜூன் 13, 2017இல் தொடங்கி, 14 அக்டோபர், 2019இல் நிறைவு செய்தது. 5 பேருக்குச் சொந்தமான நிலங்களில் 52 குழிகள் தோண்டப்பட்டு, அகழாய்வுப் பணிகள் நடந்தன. இதில் 800க்கும் மேற்பட்ட பொருட்கள் கண்டறியப்பட்டன.

அகழாய்வில் அறியப்பட்ட இரட்டைச்சுவர், வட்டப்பானை, சுடுமண் குழாய், தண்ணீர்த் தொட்டி, தண்ணீர்க் கால்வாய் உள்ளிட்ட பொருட்கள் இருக்கும் இடம், வரைபடம் மூலம் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

2018ஆம் ஆண்டில், கீழடியில் தமிழக அரசால் நடத்தப்பட்ட 4வது அகழாய்வில் கிடைத்த பொருட்கள் மீது செய்யப்பட்ட ஆய்வின் முடிவுகள்தொகுக்கப்பட்டுத் தமிழகத் தொல்லியல் துறையால் வெளியிடப்பட்டுள்ளன. 19 செப்டம்பர், 2019 அன்று கீழடியில் கிடைத்த 6 பொருட்கள் ஆக்சிலரேட்டட் மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி (Accelerated mass spectrometry)ஆய்வுக்காக அமெரிக்காவின் ஃப்ளோரிடாவில் உள்ள பீட்டா அனலிடிகல் லேபிற்கு அனுப்பப்பட்டன. அதில் கிடைத்த முடிவுகளின்படி, அந்தப் பொருட்கள், கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கும் கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

கீழடியில் 353 செ.மீ. ஆழத்தில் கிடைத்த பொருள் கி.மு. 580ஆம் ஆண்டையும் 200 செ.மீ. ஆழத்தில் கிடைத்த பொருள் கி.மு. 205ஆம் ஆண்டையும் சேர்ந்தன எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த இரு மட்டங்களுக்குக் கீழேயும் மேலேயும் பொருட்கள் இருப்பதால், கீழடியின் காலகட்டம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு முதல் கி.மு. ஒன்றாம் நூற்றாண்டு வரையிலானது எனத் தொல்லியல் துறை முடிவுக்கு வந்துள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வரலாற்றுக் காலம் என்பது கி.மு. மூன்றாம் நூற்றாண்டில்தான் துவங்குகிறது. ஆகவே கங்கைச் சமவெளியில் நடந்ததைப் போல, இரண்டாவது நகர நாகரீகம் இங்கு நிகழவில்லை எனக் கருதப்பட்டுவந்தது. ஆனால், கீழடியில் கிடைத்த பொருட்களை வைத்து, கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே இரண்டாவது நகர நாகரீகம்

தொடங்கியுள்ளது என்ற முடிவுக்குத் தொல்லியல் துறை வந்துள்ளது. கங்கைச் சமவெளியிலும் இதே காலகட்டத்தில்தான் நகர நாகரீகம் உருப்பெற்றது.

கொடுமணல், அழகன்குளம் ஆகிய இடங்களில் கிடைத்த எழுத்தின் மாதிரிகளை வைத்துத் தமிழ் பிராமி எழுத்தின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டாகக் கருதப்பட்டது. ஆனால், தற்போது கீழடியில் கிடைத்த ஆய்வு முடிவுகளின்படி, தமிழ் பிராமி கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆகவே 2,600 ஆண்டுகளுக்கு முன்பாகக் கீழடியில் வாழ்ந்தவர்கள் எழுத்தறிவு பெற்றிருந்தார்கள், எழுதத் தெரிந்திருந்தார்கள் என்ற முடிவுக்குத் தொல்லியல் துறை வந்துள்ளது.

கீழடியிலிருந்து கிட்டத்தட்ட 70 எலும்புத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை காளை, எருமை, ஆடு, பசு ஆகியவற்றினுடையவை. ஆகவே கீழடியில் வாழ்ந்த சமூகம் பெரும்பாலும் ஆடு, மாடுகளை வளர்த்த சமூகமாக இருந்திருக்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர் ஆய்வாளர்கள்.

கீழடி வழக்கு வழக்குரைஞர் கனிமொழி மதியைக்கனடாவரைஅழைத்துச்சென்றிருக்கிறது. கனடாவின் தமிழ்ப்பேரவை வருடாந்திர தைப்பொங்கல் விழாவினை 20 ஜனவரி, 2020அன்று கனடாவின் மர்காம் நகரின் கொண்டாடியபோது, 2019ஆம் ஆண்டின் சாதனையாளருக்கான விருதாகிய “மாற்றத்திற்கான தலைவர்கள் விருது” -ஐ வழக்கறிஞர் கனிமொழி மதி அவர்களுக்கு வழங்கி அழகு சேர்த்தது.

ஆறாம் கட்ட அகழாய்வுப் பணிகள், கடந்தபிப்ரவரி 19, 2020 அன்று தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த அகழாய்வில் 10 தொல்லியல் ஆய்வாளர்கள் உட்பட 270 பேர் ஈடுபட உள்ளனர். இவ்வகழாய்வு கீழடியிலும் அதற்குஅருகில்உள்ளகொந்தகை, அகரம், மணலூர் ஆகிய இடங்களிலும் நடத்துவதற்கு மாநிலத் தொல்லியல் துறை முடிவுசெய்திருக்கிறது. இந்த இடங்களில் தரையை ஊடுருவிப் பார்க்கும் ரேடார், ஆளில்லா விமானம் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சரியான இடங்கள் அடையாளம் காணப்படும் என்றும் தகவல்.

இவற்றில் கொந்தை ஒரு புதைமேடு எனக் கருதப்படுகிறது. மணலூர், அகரம் ஆகியவை மக்கள் வாழ்ந்த இடங்களாகக் கருதப்படுகின்றன. ஒட்டுமொத்தமாக 120 ஏக்கர் பரப்பளவில் 50 லட்ச ரூபாய் செலவில் இந்த அகழாய்வுகள் நடத்தப்படும்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் உட்பட இந்தியாவில் உள்ள மூன்று பல்கலைக்கழகங்களும் சில வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களும் இந்த ஆய்வில் பங்கேற்கின்றன.

இதன் தொடர்ச்சியாக தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை, ஈரோடு மாவட்டத்தில் உள்ள கொடுமணல் ஆகிய இடங்களிலும் அகழாய்வுகள் நடத்தப்படவிருக்கின்றன. மேலும், புதிய கற்கால இடங்களைக் கண்டறிய வேலூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, சேலம் ஆகிய இடங்களில் தொல்லியல் கள ஆய்வை மாநில அரசு நடத்தவுள்ளது என்ற நல்ல தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

நம்முடைய பழம்பெருமை, உயர் கலாச்சாரப் பண்பாடுகளை உலகுக்கு உணர்த்தும் சங்க இலக்கிய வரலாற்றின் சரித்திரச் சான்றுகள்தான் கீழடி அகழாய்வு. கீழடி மட்டுமல்ல அதிரம்பாக்கம், குடியம், வடமதுரை, நெய்வேலி, பரிக்குளம், அரிக்கமேடு, அரியலூர் எனத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் வரலாற்றுப் புதையல்கள் நிறைந்தே கிடக்கின்றன. சென்னையை அடுத்துள்ள அதிரம்பாக்கத்தில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கிடைத்த கற்கருவிகள், 3,85,000 வருடத்திலிருந்து 3,25,000 வருடங்களுக்குள் இடைக்கற்காலம் அங்கு நிலவியிருக்கலாம் என்று காட்டுவதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. தெற்காசியாவில் இடைக்கற்காலம் முன்பு கருதப்பட்டதைவிட முன்கூட்டியே நிகழ்ந்திருக்கலாம் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

வெட்ட வெளிக்காடுகளிலும், மரப் பொந்துகளிலும், குகைகளிலும் வசித்துவந்த மனித இனம், கடந்து வந்திருக்கிற பாதை அற்புதமானது. உயிர் பிழைத்திருப்பதற்கான போராட்டம் என்ற கட்டத்தையெல்லாம் தாண்டி, உலகத்தை உயிர் வாழப் பாதுகாப்பான இடமாக மாற்றியிருக்கிறோம். நாம் கடந்து வந்த காலத்தை அறிவதில்தான் நம் நிகழ்காலமும் எதிர்காலமும் இருக்கின்றன. ■

● மு.தமிழ்ச்செல்வன்

# கோடை வெயில் - மனித உறவுகளைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கிறது!






என்னுடைய பள்ளிப்பருவ விடுமுறை நாட்களை எஸ்.ராமகிருஷ்ணனின் ஒரு சிறிய விடுமுறைக்காலக் காதல் கதை நினைவூட்டியது. பள்ளி விடுமுறை நாட்களும் கோடைகால வெயிலும் பல அனுபவங்களை எல்லோருக்கும் தரும் என நினைக்கிறேன். அதுவும் எங்கள் கரிசல் நிலக் கந்தக பூமியில் இன்னும் கொஞ்சம் அதிகமாகவே வெயில் உக்கிரத்தைக் கொட்டும். அந்த வெயிலிலும் வீட்டில் ஓரிடத்தில் நிற்காமல் கண்மாய், வேலிக்காடு என எங்கும் சுற்றித் திரிவோம். அப்படிப்பட்ட பால்யப் பருவ நினைவுகள் ஒவ்வொன்றும் இந்நாவலை வாசிக்கும்போது கண்முன்னே வந்து வந்து சென்றன.

பதினோரு மாத பள்ளி அனுபவம் என்றாலும் ஒரு மாத காலம் பள்ளி விடுப்புக்குப் பிந்திதான் என்கிற உண்மையைக் கூறி வாசிக்கிற அனைவரையும் ஆம் சொல்ல வைத்திருக்கிறார் எஸ்.ராமகிருஷ்ணன். ஏனெனில் இப்படியான நினைவுகளைத் தாண்டாமல் நாம் வந்திருக்க முடியாது.

விடுமுறைக் காலத்தில் கொளுத்துகிற வெயில் எவ்வளவு உற்சாகத்தை நமக்கு அள்ளித் தந்தது. வெயிலை ரசித்தோம். அனுபவித்தோம். கொண்டாடினோம். ஏனென்றால் வெயிலால்தானே ஒருமாதம் விடுமுறை கிடைத்தது. பின்பு எப்படி ரசிக்காமல் அனுபவிக்காமல் கொண்டாடாமல் இருக்க முடியும்? இப்படி எண்ணற்ற நினைவுகளை ஒரு சிறிய விடுமுறைக்காலக் காதல் கதையின் வழியாக மீண்டும் அனுபவித்த நிறைவைத் தந்திருக்கிறார் எஸ்.ராமகிருஷ்ணன்.

விடுமுறையில் உறவினர் வீடுகளுக்குச் செல்வது எவ்வளவு தித்திப்பான நிகழ்வு என்பதை அழகாகச் சொல்லியிருக்கிறார். ஊருக்குப் போவதே மகிழ்ச்சிதான். அதுவும் தன் சோட்டுப் பிள்ளைகள் நிறைய இருக்கிற ஊருக்குப் போனால் சொல்லவே வேண்டாம். அந்த மகிழ்ச்சி இரட்டிப்பாகிவிடும். அவர்களோடு நேரத்தைச் செலவழிக்கும்போது சாப்பாடு தண்ணியைக்கூட மறந்துவிடுவோம். அடிக்கிற வெயிலில் காடுமேடு சுற்றித்திரிவதில் தண்ணீர் கூட குடிக்க வேண்டுமென்று தோணாது என்றால் வெயிலை எவ்வளவு மகிழ்ச்சியாக அனுபவித்திருப்போம். நினைத்தால் ஏக்கமே மிஞ்சுகிறது.

எங்களுக்கு விடுமுறையில் வாங்கித் திங்க காசுகூட கொடுக்கமாட்டார்கள். கொடுப்பதற்கு

வீட்டில் ஒன்றும் கிடையாது. இருக்காது. அவ்வளவு வறுமை. ஆனால் எத்தனையோ பையன்கள் பிள்ளைகள் தெருவில் விற்க வரும் ஐஸ் முதல் வெவ்வேறு தின்பண்டங்களைக் கேட்டு அடம் பிடித்து வாங்கித் தின்பார்கள். அதுவும் ஒருசில நேரங்களில், 'நான் வாங்கிட்டேனே. நீ வாங்கல?' எனக் கேட்டுக்கொள்வார்கள். ஏதாவது சொல்லிச் சமாளிப்பேன். அப்படிப்பட்ட நேரத்தில் இவர்களைப் போன்று நாம் எப்போது வாங்கி ஆசைதீர திங்கப் போகிறோம்? என மனது ஏங்கும்! அது கடைசிவரை நிறைவேறவே இல்லை. ஆனால் நான் ஒரு சிறிய விடுமுறைக்காலக் காதல் கதையில் வருகிற சுப்புவாகவே இந்நூலை வாசிக்கும்போது உணர்ந்தேன். நான் ஆசையாய் வாங்கித் திங்க நினைத்த அனைத்தையும் சுப்பு, சில்யா இருவரும் வாங்கித் தின்றார்கள். குடித்தார்கள். அவர்கள் தின்ற அனைத்தையும் நானும் அவர்களோடு தின்ற, குடித்த நிறைவு கிடைத்தது, இத்தனை வருடங்கள் கழித்து.

கோடை வெயிலில் ஒரு கண நேரத்தைக் கூட வீணடிக்கக்கூடாது என்ற மனநிலை இருக்கும். ஏதாவது துருதுருவென்று செய்துகொண்டே இருக்க வேண்டும். நடப்பது, ஓடுவது, விளையாடுவது என இயங்கிக்கொண்டே இருக்கவில்லை என்றால் எரிச்சலாக இருக்கும். அதனால் வீட்டில் எக்காரணம் கொண்டும் சாப்பிடும் நேரம் தாண்டி ஒரு நிமிடம் கூட இருப்பது இல்லை. எந்நேரமும் தன் சேக்காலி பையன்களுடன் இருப்பதுதான் இன்பமயமான நேரங்கள் என்று நினைக்கத் தோன்றும். அந்தப் பருவத்தைக் கடந்து வந்தவன் நான் மட்டுமல்ல. நம்மில் முக்கால்வாசி பேர் அப்படித்தான் கடந்து வந்திருப்போம்.

வீட்டில் தாத்தா, பாட்டி அல்லது மற்ற உறவினர்கள், 'வெயிலில் அலையாதே!' என்று சொன்னாலும் வீட்டைவிட்டு வெளியே போய் விளையாடுவதைத் தடுக்க மாட்டார்கள். அவர்களின் கவலை நேரத்திற்கு வந்து சாப்பிட்டு விட்டுப் போனால் போதும் என்பார்கள். அதையும் அழகாகப் பதிவு செய்திருக்கிறார். ஆனால் இன்றுள்ள நிலையோடு ஒப்பிட்டால் நிலைமை தலைகீழாக இருக்கிறது. வெயிலில் பலர் தமது பேரன், பேத்திகளை வெளியே விடுவதில்லை. கதவைப் பூட்டிவைத்துக் கொள்கிறார்கள். பெயருக்குச் சாயங்காலம் பேரன், பேத்திகளை எங்காவது பூங்கா உள்ளிட்ட ஒரு இடத்திற்குக் கூட்டிக்கொண்டு போய்விட்டு அதோடு வீட்டில் முடங்கச் சொல்லிவிடுகிறார்கள். இதனாலேயே பலர் விடுமுறையில் உறவினர் வீட்டுக்குச் செல்வது கிடையாது. கூப்பிட்டால் கூட 'அர்ச்சினன் பேர் பத்து' என ஓடிப் போய் விடுகிறார்கள். அவ்வளவு கட்டுப்பாடுகள். வீட்டிலிருக்கும் உறவினர்கள் வந்திருக்கும் பேரன் பேத்திகளிடம் மிகுந்த அக்கறை காட்டுவதாகக் கட்டுப்பாடுகள் விதிப்பதால் நமது சுதந்திரம் எல்லாம் பறிபோகுதே எனப் பேரன் பேத்திகள் நினைக்கும் சூழல் இப்போது பெருகி வருவதை யாரும் மறுக்க முடியாது. இன்னொன்று குழந்தைகளுக்குப் பாதுகாப்பு இல்லை எனக் கருதுவதாலும் இச்சூழல் பெருகி வருகிறது.

முன்பு வீட்டிற்கு நான்கு ஐந்து பிள்ளைகள் வரை இருப்பார்கள். இப்போது ஒன்று அதிகப்பட்சமாக இரண்டு என இருப்பதாலும் இந்தச் சிக்கல் இருக்கிறது. அதுவும் போக இன்றைக்குப் பிரதானமாகக் கோடை விடுமுறையில் நேரத்தை அலைபேசிகளே காவு வாங்கிக்கொள்கின்றன. அதற்கு வீட்டிலிருக்கும் பெரியவர்களே அனுமதி கொடுக்கிறார்கள். 'உனக்கு செல்போன் வேணாலும் தரேன். ஆனா வெயிலுல வெளியே போய்ச்சுத்தக்கூடாது' என்கிற கட்டுப்பாடுகள் அவர்களை வீட்டுக்குள்ளே முடக்கும் அவலத்தை உருவாக்கியிருக்கிறது.

இன்னொரு பக்கம் சிறப்பு வகுப்புகள் விடுமுறை நாட்களை விழுங்குவதால் கோடை விடுமுறை ஏன்தான் வருகிறதோ? என்று சலித்துக்கொள்ளும் அளவுக்குச் சூழல் மாறிவிட்டது. ஒரு குறுகிய வட்டத்திற்குள் சுருங்கிக் கொண்டே போகிறோம் என அவர்களுக்கு நினைக்கத் தோன்றுகிறது.

இப்போது இருக்கிற சூழல் அப்படித்தான் இருக்கிறது. அதே நேரத்தில் எஸ். ராமகிருஷ்ணனின் ஒரு சிறிய விடுமுறைக்காலக் காதல் கதையை வாசிக்கிறவர்கள் கோடை விடுமுறை என்பது.. அதிலும் வெயில் என்பது அனுபவிக்கவே என்ற மனநிலை மாற்றம் பெறுவார்கள் என்றே தோன்றுகிறது. இன்றைக்கு வைட்டமின்-டி சத்து குறைபாடு நிறைய பேருக்கு இருக்கிறது. ஒருவேளை கோடை வெயிலில் அலைந்தாவது வைட்டமின் -டி யைப் பெற்றுக்கொள்ளட்டுமே!

என்னைக் கேட்டால் வீட்டிலிருக்கும் பெரியவர்கள் இக்கதையைக் கட்டாயம் படிக்க வேண்டுமெனச் சொல்வேன். அப்படிப் படிக்கும்போது குழந்தைகளின் விடுமுறைக்கால உலகத்தைப் புரிந்துகொள்ள முயலுவார்கள் என்று தோன்றுகிறது. பெரியவர்கள் கட்டாயம் இப்படிப்பட்ட அனுபவங்களைக் கடந்துதான் வந்திருப்பார்கள். இப்போது பெரியவர்கள் ஆகிவிட்டார்கள் அல்லவா? அதனால்

ஞாபகப்படுத்த வேண்டியதிருக்கிறது.

கோடை விடுமுறையில் புதிய நண்பர்களுடனான உரையாடல் அதிகரிக்க ஒரு வாய்ப்பு இருக்கும். அலைபேசி மோகத்தில் உட்கார்ந்துவிட அனுமதித்தால் வீட்டிற்குள் இருக்கும் நபர்களுடன் கூட பேசுவது என்பது அரிதாகவே மாறிவிடும். இன்று பல இடங்களில் இப்படிக்கூட சூழல் வரத்தொடங்கிவிட்டது. அதையும் நாம் கண்கூடாகப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

இந்த வருடக் கோடை விடுமுறைக்கு வந்தவர்கள் அடுத்த விடுமுறைக்கும் வரணுமே என்ற எதிர்பார்ப்பு மனிதர்கள் மீதான அன்பை அதிகமாக்குகிறது. அதேபோல ஒவ்வொரு வருடமும் தனக்குப் பிடித்தமான நண்பர்கள் விடுமுறைக்கு வந்துவிட்டால் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை என்றே சொல்லலாம். எப்போது கோடை விடுமுறை வரும்.. எப்போது ஊருக்குப் போவோம் என்கிற ஆவல் தூக்கத்தை மறக்கடிக்கும் என்பதை நினைக்க நினைக்க இப்படியொரு பருவம் மீண்டும் வராதா? என நப்பாசை மனதைப் பாடுபடுத்துகிறது.

இக்கதையில் சிறுவயதில் புதிதாகப் பார்க்கும் நபர்களுடன் எளிதாகப் பேசிப் பழகும் இயல்பை மிக அழகாக வடித்திருக்கிறார் எஸ். ராமகிருஷ்ணன். விடுமுறையில் உறவினர் வீட்டிற்குச் செல்லும்போது இருக்கிற உற்சாகம்.. தனது சொந்த ஊருக்குத் திரும்பும்போது இருப்பதில்லை. முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு ஏன் திரும்பவும் ஊருக்குப் போக வேண்டும்.. இங்கயே எல்லாரும் இருந்துவிட்டால் என்ன? என நினைக்கத் தோன்றும். அந்தப் பருவத்தை அழகாகப் படம் பிடித்துக் காட்டியிருப்பது அருமை!

தனக்குப் பிடித்த பிள்ளைகள் அடுத்த பையன்களுடன் இயல்பாகப் பேசிப் பழகும்போது தனக்கு ஏற்படும் பொறாமை, அவள் தன்னிடம் மட்டும்தான் பேச வேண்டும் என்கிற உரிமை எடுத்துக்கொள்ளும் மனவோட்டம் என ஒவ்வொன்றும் மீண்டும் அப்பருவத்திற்குள் நம்மை இழுத்துக்கொண்டு போகும் என நினைக்கிறேன். என்னை அப்படித்தான் இழுத்துக்கொண்டு போனது. நானும் கூட அப்படியான கோடை விடுமுறையில் என் அத்தை மகள் என்னிடம் மட்டுமே பேச வேண்டும்.. அடுத்த பையன்களுடன் விளையாடக்கூடாது என வாதம் செய்திருக்கிறேன். அப்படியெல்லாம் முடியாது என அவள் மறுப்பு சொல்லியிருக்கிறாள். அதனால் நான் கோவித்துக்கொண்டது, அன்று அவர்களுடன் சேர்ந்து விளையாடாமல் போனது, பின்பு வம்படியாகப் போய் வேண்டுமென்றே அவர்களின் பக்கத்தில் நின்றுகொண்டு ஏதாவது பேச்சுக் கொடுத்து அவளை என்னுடன் விளையாட வைக்க முயற்சித்தது என அத்தருணங்களை நினைக்க.. அப்படியான பருவத்திற்குள் செல்வது இனி கனவில் மட்டுமே சாத்தியம் எனத் தோன்றாமல் இல்லை.

அறியாப் பருவத்தில் ஒருவர் மீது ஒருவர் வைக்கும் பாசத்திற்குப் பெயர் நட்பா? காதலா? எனத் திகைத்து நிற்கும் பருவ வயதை நாம் கடக்காமல் இருக்க முடியுமா? அப்படிக் கடந்து வந்தவர்களை வாழ்க்கையில் இறுதிவரை சந்திக்கிற வாய்ப்பு கிடைக்கிறதென்றால் யார்தான் அதை வேண்டாம் என்பார்கள்?

காதல், நட்பு இந்த இரண்டையும் தாண்டி வேறு உறவு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் இருக்கக்கூடாதா? என்ற கேள்வி மூலம் நம்மை ஆழமாகச் சிந்திக்க வைக்கிறார். அதோடு ‘அன்பு செலுத்துவதற்கு அடையாளங்கள் எதற்கு?’ என்ற கேள்விக்குப் பதிலே இல்லை நம்மிடம்! கோடையில் உருவான நட்பு கோடையோடு போய்விட வேண்டிய அவசியமில்லை. உறவு என்பது அடுத்தடுத்த சந்திப்புகளின் வழியாகப் புதுப்பித்துக்கொண்டு வருவதுதானே! என்று உறவுகளைத் தொடர்ந்து தக்கவைக்கும் சூட்சுமத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது.

‘இந்தத் தலைமுறை புதிய சிந்தனைகள் கொண்டது. அது பெயரற்ற உறவினைப் புரிந்துகொள்ளும். அனுமதிக்கும்!’ என்ற வரி என்னை மௌனம் கொள்ளச் செய்தது. இன்றைக்கு உறவு என்பது முறை சொல்லி இன்னார் என்று அழைப்பதற்குப் பயன்படும் ஒன்றாக மாறிவிட்ட சூழலில் ‘பெயரற்ற உறவு’ என்றாலும் அன்பு காட்டுவது அதன் வெளிப்பாடு என உள்ளார உணர முடிகிறது. அன்பு காட்டுதல் எந்த வடிவத்தில் இருந்தால் என்ன அது மனித உறவுகளைப் பலப்படுத்தத்தானே என்ற சிந்தனையை முடுக்கிவிட்டது.

அதற்கு இந்த வைரம் பாய்ந்த வரிகள் மிகவும் பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன். ‘எந்தப் பெயரில் அழைத்தாலும் உறவு என்பது அன்பு காட்டுதல் தானே!’

வாசிக்கப்பட வேண்டிய நூல்! அடுத்த கோடை விடுமுறைக்கு முன்பு மீண்டும் என் கைகளில் தவழவிட வேண்டும் என நினைக்கிறேன். என் கோடைக்கால விடுமுறை அனுபவங்களை கண்முன்னே காட்சிப்படுத்திச் சென்றிருக்கிற எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு அன்பும்... நன்றியும்...!

கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன்

# ஊர்மிளை

ஆரண்யம் செல்ல
அனுமதி மறுத்தால்
ஆவியைத் துறப்பேன்
என்றவனை
அதிர்ச்சியோடு பார்த்தாள் –
ஊர்மிளை
தனது
நோக்கம் நிறைவேற
அவன்
எந்தவொரு நிலையையும் –
எடுப்பான்
தன்மானத்துக்கொரு
குந்தகம் வருகையில்
தயங்காமல்



தனது
தலையையும் –
கொடுப்பான்
இவனிடம் நமது
வீம்பு –
எடுபடாது
என்னதான் கூறித்
தேற்றினாலும்
என்மீதுற்ற வெறுப்பு
அவனிடமிருந்து –
விடுபடாது
ஆகவே
ஈரேழு ஆண்டுகள்
இவனை
வெறுப்பதுபோலவே –
நடிப்போம்
இவன்
வீடேகிய பிறகே
விட்டதைப் –
பிடிப்போம்
எனத்
தனக்குள்ளாகவே ஒரு
உறுதியைப் –
பூண்டாள்
தழுவிக்கிடந்த அவனின்
நினைவுகளிலிருந்து –
மீண்டாள்

இப்போதைக்கு
அவனைப்
பிரித்து –
வைப்போம்
எதுவும் நடவாதது போல
கொஞ்சம்
சிரித்து –
வைப்போம்
படியேறி வருகிறான்
அவனுக்குப் பிடித்த
பாரிஜாத மலரொன்றைப்
பறித்து –
வைப்போம்
என
மலர்த்திய விழிகளோடு

அவனை –
ஏறிட்டாள்
மறுபடியும் அவனைப்
பார்த்த மகிழ்ச்சியில்
மனசுக்குள்ளாகவே –
வீறிட்டாள்...

ஏக்கத்திலும்
வெட்கத்திலும்
பெண்கள் ஆற்றும்
எதிர்வினைதான்
இது என்பதை
ஏனோ இலக்குவன்–
அறியவில்லை
என்னவாக இருக்கும்
தனது
இல்லாளின் மனநிலை
என்பதும் அவனுக்கு –
புரியவில்லை

கற்காலம் தொடங்கி
கலிகாலம் வரைக்கும்
கணவனென்ற ஆளுமையே
பெண்ணுக்கு –
காவலிருக்கிறது
அறிமுகமில்லாதபோது
ஆரணங்கின்
அழகைக்கண்டு அதை
அடைந்தே தீர வேண்டும்
என்ற –
ஆவலிருக்கிறது
அடைந்துவிட்டாலோ
அலட்சியப்படுத்தி
அவமதிக்கும் மனத் –
தாவலிருக்கிறது

இலக்குவனுக்கும்
ஊர்மிளைக்கும்
இடையில்
இப்படித்தான் ஒரு –
ஊடல் இருக்கிறது....
இருவரின் நெஞ்சிலும்
அறுபடாத அன்பின் –

தேடல் இருக்கிறது

ஒப்புக்கு
விடைபெற வந்ததுபோல்
நடித்தாலும்
உண்மையில்
ஊர்விட்டுப் போவதற்குள்
அவளை
ஒருமுறையேனும்
பார்த்துவிடத்தான் அவன் –
நினைத்தான்
எழில் சிந்தும் அவளது
திருமுகத்தை
ஏறிட்டுப்பார்க்க தெம்பின்றி
எப்படி ஆரம்பிப்பதென
தெரியாமல் மெல்ல –
கனைத்தான்
தெப்பமாய் வியர்த்து
தேகமெல்லாம் –
நனைத்தான்.....

அவனின்
திணறலைக் கண்டு
தேகம் குலுங்கிட –
நகைத்தாள்
திருந்தி வந்தவனைத்
தீண்டும் விதமாக
மீண்டும் அவனைப் –
பகைத்தாள்....
இருள் கவிந்திருக்கும்
அந்த
அரண்மனையின்
அந்தப்புரத்தில்
அருள்பாலிக்கும்
தேவதை போல்
அமைதியாய்
அமர்ந்திருந்தாள் –
ஊர்மிளை

எதிர்வந்து நின்று
அவளை
ஏறிட்டுப் பார்க்கும்
இலக்குவனுக்கு
ஒரு
புதிர்போலவே
தெரிந்தாள் அந்தப் –
பொற்சிலை

தனியொருவனாய்
தண்டகாரண்யம்
செல்லவேண்டும்
என்பதுதான்
தசரதன் தன்
தனயனுக்கு இட்ட –
ஆணை
தர்மபத்தினியை
அழைத்துச்சென்று
தண்டகாரண்யத்திலும்
மீட்ட நினைக்கிறான்
இராமன்
தாம்பத்தியமென்னும் –
வீணை

உறவுகளற்று
துறவறம் பூணுவதே
உலகத்தார் –
வழக்கம்
ஈதென்ன
இலக்கணத்தில்
இல்லாத
புதுப் –
பழக்கம்
இல்லறத்தில் இருப்பவனை
தன்னோடு
அழைத்துப்போனால்
தம்பியின் குடிகெடுத்தான்
தமையனென்று
தசரத மைந்தனுக்கு
வந்துசேராதா ஒரு
அவச்சொல்லும் –
இழுக்கும்..?

பதினான்கு ஆண்டுகள்
இனி
அவன் முகத்தைப்–
பார்க்கப்போவதில்லை
பசலையுறும் என்
துயரைத் –
தீர்க்கப்போவதில்லை
பதறியழும் என்
உள்ளக்குமுறல்களை
அவன் –
கேட்கப்போவதில்லை
மீளாக் கவலையிலிருந்து
என்னை அவன் –
மீட்கப்போவதில்லை

ஆகவே
சத்தமிடாமல் சென்று
சாளரக் கதவுகளைச்
சாத்திவிட்டு
அவனுக்கொரு
முத்தமிட்டு –
வீழ்த்தலாமா
அல்லது
சயனமஞ்சத்தில்
சரிந்து அவனை
நயன போதையில் –
ஆழ்த்தலாமா
என
ஊர்மிளையின்
உள்ளத்திலொரு
உத்வேகம் –
எழுந்தது
உக்கிரமாய் நிற்கும்
அவனைக் கண்டதும்
உள்ளெழுந்த எண்ணம்
உடைபட்டு –
விழுந்தது

“இளவரசே....
அறம் வழுவாது
நடப்பது போல
உன் அண்ணன்
நமக்கொரு
பெருங்கொடுமை –
இழைக்கிறான்
அவன் தன்
மனையாளோடு நடத்தும்
மன்மத நாடகத்தைக்
கண்டு இரசித்துக்
கைதட்டவா
உன்னையும் –
அழைக்கிறான்....
தன்
இளவலுக்குமோர்
துணையுண்டு
என்று அறிந்தும்
எதற்காக இந்த
ஈனப் பிழைப்பைப் –
பிழைக்கிறான்.....? “
மீண்டும் அங்கே
வார்த்தைப் போர்
வெடித்தது
அது
வரன்முறையற்று
இருவர் நாவிலும் –

தடித்தது
இலக்குவன் பேசிய
இழிசொல் கேட்டு
அவளின் இதயம் –
துடித்தது

அன்புக்குரியவனை
சீண்டுவது
அவனியெங்கும்
இருக்கும்
மங்கையரின் –
கோட்பாடு
இது புரியாமல்தான்
அநேக இல்லங்களில்
கேட்கிறது
அர்த்தமற்ற –
கூப்பாடு

பழிசொல்லித்
தூற்றிவிட்டு
வழியனுப்பச் சொல்கிறான்
இலக்குவன் –
சலிப்போடு
அழுது வடியும்
முகத்தோடு
எந்தப் பெண்ணாவது
அனுப்புவாளா
தன் கணவனை –
களிப்போடு..?

கரம்பிடித்தவளைக்
கண்கலங்க
வைத்துவிட்டு
கம்பி நீட்டுவதுதானே
காலகாலமாக
ஆடவர் எழுதும் –
வரலாறு
இதில்
இலக்குவன் மட்டும்
விதிவிலக்கா என்ன
எனவேதான்
இந்த –
தகராறு.....

நெடுநேரமாகியும்
வராத
தம்பியின் நிலையறிய
இராமன்
அந்த
நெடிய மாளிகையின்
நிலைப்படி –
ஏறினான்
அங்கே
நிகழும் யுத்தங்கண்டு
நிலை –
மாறினான்....

இருவருக்குமிடையில்
என்ன நடக்கிறது
என்பதை
புரிந்து கொண்டு
இன்முகத்துடன்
இராமன் –
கூறினான்
“உலக சரித்திரத்தில்
உனக்கிணையாய்
யாருமற்ற –
ஒப்பிலாதவள்
உண்மையில்
நீ
ஒரு சிறிதும் –
தப்பிலாதவள்

ஆண்டவன்
உலக நியதிகளில்
ஒப்பற்ற ஒன்றை
உன் மூலமாய் –
ஒப்புவித்திருக்கிறான்
அதனால்தான்
ஆரண்யத்தில்
அலைக்கழிக்காமல்
உன்
அழகிய திருமேனியை–
தப்பவைத்திருக்கிறான்
தன்னிலையறியாமல்
தர்க்கம் பேசச்சொல்லி
என்
தம்பியின் நாவிலும்
உன்நாவிலுமாய்
தரமிலாச் சொற்களை –
துப்பவைத்திருக்கிறான்... .

உனது
உள்மனக்கிடக்கைகளை
நான் –
அறியேன்
உனக்கு மட்டுமல்ல
இந்த
உலகத்துக்கே
உறுதியளிக்கிறேன்
அஞ்ஞாதவாசம்
முடியும் வரை
என்
அன்புக்குரியாளோடு
சல்லாபம் –
புரியேன்
உடலிச்சை என்னும்
உன்மத்தம் கொண்டு
ஒருபோதும் நான் –
திரியேன்

மரவுரி அகற்றி
இந்த
மாநகரை மீளும்வரை
மனதாலும் என்
மனையாளை –
நெருங்கமாட்டேன்
தம்பியை
தனித்திருக்க வைத்துவிட்டு
உன்
தமக்கையோடு
ஒருபோதும் –
உறங்கமாட்டேன்
தர்ம நியதிகளென்னும்
தலையாய
படிகளை விட்டு
தப்பித் தவறியும்
நான் –
இறங்கமாட்டேன்....

ஊர்மிளையே...!
கேட்டுக்கொள்...
ஆரண்யவாசம்
முடியும்வரை
நான்
அனுசரிக்கப்போகிறேன் –
பத்தியம்
இது அந்த
முப்பத்து முக்கோடி
தேவ தேவர்களின் மீது –
சத்தியம்....!”

**– ஊர்மிளை வருவாள்** ■

● மூலம்: ஷார்லட் பெர்கின்ஸ் ஸ்டெட்சன் (கில்மன்)
● மொழியாக்கம்: கார்குழலி
● ஓவியங்கள் - அன்பழகன்

# மஞ்சள் வண்ண சுவர்த்தாள்

ஒருவழியாக ஜூலை நான்காம் நாள் முடிந்தது. எல்லோரும் கிளம்பியாகிவிட்டது, எனக்கும் மிகுந்த சோர்வாக இருக்கிறது. விருந்தினர்கள் யாராவது வந்தால் எனக்கு நன்றாக இருக்கும் என்று அம்மாவையும் நெல்லியையும் குழந்தைகளையும் அழைத்திருந்தார் ஜான்.

நான் எதுவுமே செய்யவில்லை. எல்லாவற்றையும் ஜென்னிதான் இப்போது பார்த்துக்கொள்கிறாள், இருந்தாலும் நான் சோர்வடைந்துவிட்டேன்.

சீக்கிரம் நலம்பெறாவிட்டால் என்னை மீண்டும் வெயர் மிட்சலிடம் அனுப்பிவிடுவேன் என்று சொல்கிறார் ஜான்.

அங்கு போவதில் எனக்கு விருப்பமேயில்லை. அவருடைய ஆலோசனையை ஒருமுறை பெற்ற என்னுடைய தோழி ஒருத்தி அவர் ஜானையும் என்னுடைய சகோதரனைப் போலவும்தான் இருக்கிறார், சொல்லப்போனால் அவர்களைவிட மோசமாக இருக்கிறார் என்றாள்!

மேலும் அவ்வளவு தொலைவு சென்று வருவதே பெரிய சாதனை.

எதையும் செய்வதற்கே எனக்குத் தோன்றவில்லை, மேலும் இப்போதெல்லாம் எதற்கெடுத்தாலும் சிடுசிடுத்தபடியும் எப்போதும் முனகியபடி முறையிட்டுக்கொண்டும் இருக்கிறேன்.

ஒன்றுமேயில்லாததுக்கு எல்லாம் அழுகிறேன், பெரும்பாலான நேரங்களில் அழுதுகொண்டேயிருக்கிறேன்.

ஜானோ வேறு யாராவதோ இருக்கும்போது அழுவதில்லை, தனியாக இருக்கும்போது மட்டும்தான்.

இப்போதெல்லாம் அதிக நேரம் தனிமையில்தான் இருக்கிறேன். இப்போதெல்லாம் ஜான் அடிக்கடி ஆபத்தான நிலைமையில் இருக்கும் நோயாளிகளுக்காக வெளியூர் சென்றுவிடுகிறார். ஜென்னி என்னிடம் நன்றாக நடந்துகொள்கிறாள், தனியாக இருக்கவேண்டும் என்று விரும்பும்போது விட்டுவிடுகிறாள்.

சிறிது நேரம் தோட்டத்திலோ அந்த அழகிய பாதையிலோ உலாவுவேன், அல்லது ரோஜாப்பூக்கள் அடர்ந்த தலைவாயிலில் உட்கார்ந்துகொள்வேன், பெரும்பாலான நேரங்களில் மேலேயே படுத்துக்கொள்வேன்.

சுவர்த்தாளை மீறியும் இப்போதெல்லாம் அறையை எனக்குப் பிடிக்கிறது. ஒருவேளை சுவர்த்தாளினால்தான் பிடிக்கிறதோ.

அப்படித்தான் என் மனதில் தோன்றுகிறது!

இந்தப் பிரம்மாண்டமான நகர்த்தமுடியாத கட்டிலின்மீது படுத்துக்கொண்டிருக்கிறேன் -



ஆணியடித்து வைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன் - இந்தப் படிமத்தை ஒரு மணி நேரமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இது ஜிம்னாஸ்டிக்ஸைப் போலவே நன்மைபயப்பது என்று நிச்சயமாகக் கூறுவேன். கீழே அதோ யாரும் இதுவரை தொடாத அந்த மூலையில் இருந்து ஆரம்பித்து ஆயிரமாவது முறையாக முடிவில்லாத அந்தப் படிமத்தைத் தொடர்ந்தபடி அதன் முடிவைக் கட்டாயம் கண்டுபிடிப்பேன் என்று உறுதி எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

வடிவமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பற்றிக் கொஞ்சம் எனக்குத் தெரியும். இது கதிர்வீச்சு உருபடிவம், மாறி மாறி வருதல், மறுநிலைப்படி, செவ்வொழுங்கு என இதுவரை கேள்விப்பட்ட எந்த விதிக்கும் உட்பட்டு அமைக்கப்படவில்லை என்று தெரியும். அகலவாக்கில் மட்டுமே திரும்பத்திரும்ப அமைந்திருந்தது, வேறு வகையிலல்ல.

ஒரு பக்கமாக இருந்து பார்த்தால் அகலவாக்குப் படிமம் ஒவ்வொன்றும் தனித்தனியாக இருந்தது. வீங்கிய வளைவுகளும் வீச்சுக்களும் குடியை நிறுத்திய குடிகாரனின் கைநடுக்கத்தைப் போன்ற ஒருவிதமான தரம்தாழ்ந்த ரோமானியப் பாணியில் மேலேயும் கீழேயுமாக முட்டாள்தனமான வாத்து நடைபோலத் தனித்த நெடுவரிசைகளில் அமைந்திருந்தது.

இன்னொரு பக்கத்தில் மூலைவிட்ட எதிர்ப்புறத்தில் இணைந்த பரந்த கோடுகள் காட்சித் திகிலையூட்டும் பெரிய வளைந்த அலைகளைப் போல ஓடியபடியும் நீரில் நின்றாடும் கடற்பாசியைப் போலவும் இருந்தது.

மொத்தப் படிமமும் பக்கவாட்டிலும் அமைந்திருந்தது அல்லது எனக்கு அப்படித் தோன்றியது. அது எந்தப் பக்கத்தில் நகர்ந்தது என்பதைக் கண்டுபிடிப்பதில் சோர்வுற்றேன்.

கிடைநிலை அகலவாக்குப் படிமமொன்றைச் சுவர் அலங்காரத்துக்குப் பயன்படுத்தியிருந்ததுதான் இந்தக் குழப்பத்தை அதிகப்படுத்தியது.

அறையின் ஒரு பகுதியில் படிமம் எந்த மாற்றமும் இல்லாமல் இருக்கிறது. இன்னொரு பகுதியில் அறையின் இருபுறமிருந்தும் கீழிறங்கும் சூரியன் வீசும் ஒளிக்கதிர்கள் குறுக்கே வெட்டியபடி படிமத்தின்மீது விழும்போது அது கதிர்வீச்சு உருபடிவத்தைப் போல இருக்கிறது. பொதுவான ஒரு மையத்தைச் சுற்றி அமைந்த முடிவேயில்லாத படிமம் திடீரென விரைந்து செங்குத்தாகக் கீழே விழுந்து கவனத்தைச் சிதறடிக்கும்.

இதைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டே இருப்பது என்னைச் சோர்வடையச் செய்துவிட்டது. நான் ஒரு குட்டித் தூக்கம் போடப் போகிறேன்.

• • •

நான் ஏன் இதை எழுதவேண்டுமென்று தெரியவில்லை. எனக்கு எழுதப் பிடிக்கவில்லை. என்னால் எழுத முடியவில்லை. இது அபத்தமானதென்று ஜான் நினைப்பார் என்று எனக்குத் தெரியும். ஆனால் என் உணர்வையும் சிந்தனையையும் பற்றி ஏதோ ஒரு வகையில் சொல்லித்தான் ஆகவேண்டும் - அது மிகப் பெரிய நிவாரணமாக இருக்கிறது.

ஆனால் இப்போதோ கிடைக்கும் நிவாரணத்தைவிட எடுக்கும் முயற்சி அதிகமாகிவிடுகிறது. இப்போதெல்லாம் பாதிநேரத்துக்கும் மேலே சோம்பிக்கிடக்கிறேன், அதிக நேரத்தைப் படுத்துக்கொண்டே கழிக்கிறேன். என் உடல்பலத்தை இழந்துவிடக்கூடாது என்று ஜான் எனக்கு மீன் எண்ணெய்யும் நிறைய டானிக்குகளும் பானங்களும் திராட்சை ரசமும் மாமிசமும் தருகிறார்.

அன்புமிகுந்த ஜான்! என்னை மிகவும் நேசிக்கிறார் நான் நோயுற்றிருப்பதை வெறுக்கிறார்.

அன்றொரு நாள் அவரோடு மனம் திறந்த அர்த்தம்பொதிந்த உரையாடல் ஒன்றை மேற்கொண்டு என் உறவினர்களான ஹென்றியையும் ஜூலியாவையும் சென்று பார்க்க அனுமதிக்கவேண்டும் என்று எடுத்துச் சொன்னேன்.

ஆனால் அவர் என்னால் அங்கே போகமுடியாது, போனாலும் இருக்கமுடியாது என்றார். எனக்கான காரணங்களைச் சரியாக எடுத்துச்சொல்லி என்னால் வாதாடமுடியவில்லை. பேசிமுடிக்கும் முன்னரே அழத் துவங்கிவிட்டேன்.

நேராகயோசிப்பதேபெருமுயற்சியாகஇருக்கிறது.



எல்லாம் இந்த நரம்புக் கோளாறினால்தான் என்று நினைக்கிறேன். அன்பு ஜான் என்னைத் தூக்கிக்கொண்டு போய்க் கட்டிலில் படுக்கவைத்து நான் தலைசாய்க்கும் வரை பக்கத்தில் அமர்ந்து படித்துக்காட்டினார். என்னை அவருடைய செல்லமென்றும் ஆறுதலென்றும் எல்லாமுமென்றும் அவர்பொருட்டு என்னை நான் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்றும் உடலைத் தேற்றவேண்டும் என்றும் சொன்னார்.

இந்த நிலைமையிலிருந்து வெளியேவர எனக்கு நானேதான் உதவிபுரிய முடியும் என்றும் என்னுடைய மனோதிடத்தையும் சுயக்கட்டுப்பாட்டையும் பயன்படுத்த வேண்டுமென்றும் முட்டாள்தனமான கற்பனைகளில் மூழ்கிவிடக் கூடாது என்றும் சொன்னார்.

ஒரு ஆறுதல் என்னவென்றால் குழந்தை நலமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறான். அருவருப்பூட்டும் சுவர்த்தாள் ஒட்டப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கான இந்த அறையில் இருக்கவேண்டியதில்லை.

இந்த அறையை நாங்கள் பயன்படுத்தவில்லையென்றால் குழந்தை தங்கவேண்டியிருந்திருக்கும்! அதிர்ஷ்டவசமாகத் தப்பித்துவிட்டான்! என்னுடைய குழந்தை, உள்ளத்தில் எதுவும் எளிதில் பதிகிற வயதில், இதுபோன்ற அறையில் தங்கவிடவேமாட்டேன்.

இதற்கு முன்னால் எனக்குத் தோன்றவேயில்லை, நல்லவேளையாக ஜான் என்னை இங்கே தங்கவைக்க முடிவுசெய்தார், ஏனென்றால் குழந்தையைவிட நான் இதைச் சுலபமாகத் தாங்கிக்கொள்வேன் பாருங்கள்.

இப்பொழுதெல்லாம் இதைப் பற்றி அவர்களிடம் நான் எதுவும் பேசுவதில்லை - முன்னைவிட புத்திசாலியாகிவிட்டேன் - என்றாலும் இதைத் தொடர்ந்து கண்காணித்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

இந்தத் தாளில் வேறு யாருக்கும் தெரியாத, எனக்கு மட்டுமே தெரிந்தவை சில விஷயங்கள் இருக்கின்றன, மற்றவர்களால் அதுபற்றி எப்போதும் தெரிந்துகொள்ள முடியாது.

வெளிப்புறப் படிமத்தின் பின்னாலிருக்கும் மங்கலான வடிவங்கள் நாளடைவில் தெளிவாகத் தெரிய ஆரம்பிக்கின்றன. ஒரே வடிவம்தான் ஆனால் பலவாகத் தெரிய ஆரம்பிக்கிறது. படிமத்துக்குப் பின்னால் ஒரு பெண்மணி குனிந்து தவழ்வதைப் போல இருக்கிறது. எனக்கு அது கொஞ்சமும் பிடிக்கவில்லை. இங்கிருந்து ஜான் என்னைக் கூட்டிக்கொண்டு போய்விட்டால் நன்றாக இருக்குமே என்று நினைக்க ஆரம்பிக்கிறேன்!

• • •

என் நிலைமையைப் பற்றி ஜானிடம் பேசுவது சிரமமாக இருக்கிறது, ஏனெனில் அவர் ஒரு அறிவாளி கூடவே என்மீது அளவற்ற அன்புடையவர். இருந்தாலும் நேற்றிரவு முயற்சி செய்து பார்த்தேன். நிலவொளி வீசியது. சூரிய ஒளி போலவே எல்லாப் பக்கத்திலிருந்தும் நிலவொளியும் புகுந்தது.

எப்பொழுதும் மெல்ல ஊர்ந்தபடி ஏதாவதொரு ஜன்னலின் வழியாக வருவதால் சில நேரங்களில் அதைப் பார்க்கப் பிடிப்பதில்லை. ஜான் உறங்கிக்கொண்டிருப்பதால் அவரை எழுப்ப மனமில்லை. வெறுப்பேற்படும்வரை அலையலையாக ஊசலாடும் சுவர்த்தாளின்மீது வீசும் நிலவொளியைப் பார்த்தபடி அசையாமலிருந்தேன்.

பின்னாலிருந்த மங்கலான அந்த உருவம் வெளியே வருவதற்காகப் படிமத்தை அசைத்துப்பார்ப்பது போல இருந்தது.

தாள் நிஜமாகவே அசைந்ததா எனத் தொட்டுப் பார்ப்பதற்காகச் சத்தமில்லாமல் எழுந்துபோய்விட்டுத் திரும்பியபோது ஜான் கண் விழித்திருந்தார்.

**-தொடரும்**

தொடர் - 8

● கரிகாலன்

# தேநீர் சாலை



## உடலை எழுதும் கலை!

~

பிரிதல் என்பது என்ன?

உடலால் பிரிவதா? மனதால் பிரிவதா? உடலும் மனமும் ஒருசேரப் பிரிவதா?

பொருள்வயின் பிரியும் தலைவன் மனதால் பிரிவதில்லை. மனதைத் தலைவியிடம் விட்டு, உடலை மட்டுமே எடுத்துச் செல்கிறான். காதலுக்கு மனம் போதும். அதன் வளர்ந்த நிலையான காமத்துக்கு உடல் தேவை. பாலைத் திணைக் கவிதைகள் எல்லாமே பிரிந்த உடல்களின் வாதையைப் பாடுவதே!

பிரிந்து கிடக்கும் இரண்டு உடல்களுக்கு இடையே நீள்வதே பாலை. அதன் வெம்மை இரவையும் சுட்டது. தூக்கமிழந்து தவித்தார்கள் காதலர்கள்.

உடலை வெறுத்து ஆன்மாவை உயர்த்திப் பிடித்தது வைதீக மரபு. மாறாக உடலின் விழைவுகளில் கரிசனம் கொண்டு பாடப்பட்டவை தமிழின் அகமரபுக் கவிதைகள்.

'அண்டத்தில் உள்ளது பிண்டம், பிண்டத்தில் உள்ளது அண்டம்' என உடலில் பிரபஞ்சத்தைத் தரிசித்ததே தமிழ் மரபு.ஆனாலும் உடலின் விழைவுகளைப் பாட பெண்களிடம் தயக்கத்தை உருவாக்கின ஆணாதிக்க மதிப்பீடுகள். அத்தகு தயக்கத்தைத் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள் உருவாக்கின.

பெண் தன் உடலை ஆண் நுகரும் ஒரு பொருளாக வைத்திருந்து, அவனிடம் ஒப்படைக்க வேண்டுமென இம்மதிப்பீடுகள் கருதின. காதலைச் சொன்னாலும் காமத்தைச் சொல்ல முடியாத நிலை. அப்படி கூறினால் பரத்தமை ஒழுக்கம் எனப் பயமுறுத்தினார்கள். தங்களது உடலின் ஆசைகளை மறைத்தவர்களை, உடலாசையை வென்றவர்களாகக் கருதி, சீதை, கண்ணகி போன்றவர்களைக் காப்பிய நாயகிகளாகக் காட்டினார்கள்.

இத்தகைய மரபை ஊடறுத்து, பெண் தன் உடலை எழுத முடியுமெனத் துணிந்த மூத்த பெண்கவியே அவ்வை. அவளுக்குப் பெண் உடல் குறித்த அபாரமான நம்பிக்கை இருந்தது.

**‘தலை வரம்பு அறியாத்**
**தகைவரல் வாடையொடு**
**முலையிடைத் தோன்றிய**
**நோய்வளர் இள முலை**
**அசைவுடை நெஞ்சத்து**
**உயவுத்திரள் நீடி’**

வாடைக்காற்று எல்லை இல்லாத காதலை என் இளமுலையில் மூட்டுகிறது எனப் பாடுகிறாள் அவ்வை.

ஓர் ஊரில் திருவிழா நடக்கிறது. அழகிய உடைகளை அணிந்து ஒயிலாக விழாவுக்குச் செல்கிறாள் தலைவி. தன் இளமை நலன் மீது அவ்வளவு நம்பிக்கை. தலைவன் வருவான் தன் அழகில் மயங்குவானென அபார நம்பிக்கை. தோழியிடம் சொல்கிறாள்.

**‘விழவின் செலீஇயர்**
**வேண்டும் மன்னோ;**
**யாணர் ஊரன்**
**காணுநன் ஆயின்,**
**வரையாமைஓ அரிதே;**
**வரையின், வரைபோல் யானை,**
**வாய்மொழிமுடியன்**
**வரை வேய் புரையும்**
**நல் தோள்**
**அளிய தோழி!’**

திருவிழா நடைபெறுகிறது.. பகட்டாகச் செல்கிறோம். யாணர் ஊரன். அழிவில்லாத வளம் கொண்டவன். என்னைக் கண்டால் தழுவாமல் விடமாட்டான். அரசன் வாய்மொழி முடியன் மலை போன்ற யானையை உடையவன். அவன் மலையில் இருக்கும் மூங்கில் போன்ற என் தோள் அழகானது. ஊரன் என்னைப் பார்த்தால், பாவம் என் தோள்கள். இறுக்கி நசுக்குவான். அது இன்ப நசுக்கு!தன் அழகு குறித்து நம்பிக்கை கொள்ளும் அவ்வை பாடலிது!

காதலில் இன்பத்தை வழங்குபவன் ஆண். பெறுபவள் பெண் என்பது ஆண்மொழி. அவ்வையோ இன்பத்தை அளிப்பவள் பெண் எனப் பாடுகிறாள். உறவுக்குப் பின் தலைவியை நீங்கிச் செல்கிறான் தலைவன். அவன் போகும் பாதையோ காடு.

**‘சென்றிசின் வாழியோ,**
**பனிக்கடு நாளே; இடைச் சுரத்து எழிலி**
**உறைத்தென, மார்பின்**
**குறும் பொறிக் கொண்ட**
**சாந்தமொடு நறுந் தண்ணியன்கொல்;**
**நோகோ யானே?’**

எழிலி என்றால் வானம். வானம் பனியைப் பொழியும் காடு. மார்பில் அணிந்த சந்தனமும் கரைந்து குளிரால் நடுங்குவானே. என்னை அணைத்த வெதுவெதுப்பும் அகலுமே! என வருத்தம் கொள்கிறாள். தலைவியின் உடலே தலைவனுடைய குளிரைப் போக்குகிறது எனும் நுண்மை இங்கு சிந்திக்கத்தக்கது.

இன்னொரு பாடல். இதுவே அவ்வை யார்? அவளது துணிவு எத்தகையது? என உலகுக்கு அவ்வையின் முழுப்பரிமாணத்தையும் காட்டிய பாடல். தலைவன் பொருள்வயின் பிரிந்தான். தலைவியின் காமம் அவளைத் தூங்கவிடவில்லை. இத்தகைய கவிதைகள் அகமரபெங்கும் விரவிக்கிடக்கின்றன.

ஆனால் இப்படி தலைவனைப் பிரிந்த தலைவியின் காமத்தை ஓர் ஆண் பாடுவதற்கும் அவ்வை பாடுவதற்கும் உள்ள வேறுபாட்டை இங்கு கவனிப்போம்.

**‘கௌவை யஞ்சிற் காமம் எய்க்கும் எள்ளற விடினே**
**உள்ளது நாணே**
**பெருங்களிறு வாங்க முரிந்துநிலம் படாஅ**
**நாருடை ஒசியல் அற்றே**
**கண்டிசின் தோழியவர் உண்டஎன் நலனே.’**

இது ஆலத்தூர் கிழார் எழுதிய குறுந்தொகை (112) பாடல். தலைவி தன் காமம் குறித்து தோழியிடம் சொல்வதாக அமைந்த பாடல்.(தலைவி பேசுகிறாளே ஒழிய சொற்கள் கிழாருடையது)பிறருடைய பழிச்சொற்களுக்கு அஞ்சினால் காமத்தை விட்டுவிடவேண்டும்(காமம் குறித்த குற்ற உணர்வைக் கிழார் தலைவியிடம் ஏற்றுகிறார்). அவ்வாறு காமத்தை விட்டுவிட்டால், என்னிடம் இருப்பது நாணம் மட்டுமே(அது போதும்! கிழார் ஆசையும் அதுதான்).

தலைவர் நுகர்ந்த எனது பெண்மை, பெரிய களிறு உண்ணும்பொருட்டு வளைக்கப்பட்டு, நிலத்தில் விழாமல் நாருடன் ஒட்டிக்கொண்டு தொங்கும் ஒடிந்த சிறு கிளை!கிழார் ஆணைக் களிறு என்கிறார். பெண்ணை உடைந்த கிளை என்கிறார். ஆண் மேய்பவன். பெண் தன்னை மேயக் கொடுப்பவள். ஆனால் அவ்வை எப்படி காமத்தை வெளிப்படுத்துகிறாள்.

**‘முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல் ஓரேன்**

யானுமோர் பெற்றி
மேலிட்டு ஆஅ ஒல்லெனக் கூவு வேன்கொல்
அலமரல் அசைவளி அலைப்பவென்
உயவுநோ யறியாது
துஞ்சும் ஊர்க்கே.' (குறுந்தொகை - 28)

இரவின் தென்றல் காற்று காம நோயைத் தந்து என்னை வருத்துகிறது. எனக்கு வருத்தத்தைத் தரும் என்னுடைய நோயை உணராது, கவலையின்றி நீங்கள் தூங்குவீர்களா? நான் எங்கேயாவது போய் முட்டிக்கொள்ள வேண்டியதுதானா? இல்லை, உங்களைத் தாக்குவேனா? காமம் தீரும்வரை ஆவென்றும் ஒல்லென்றும் கூச்சலிட்டு ஊரின் அமைதியைக் கெடுப்பேனா? என்கிறாள்.

காமம் பெறுதல் என் உரிமை என்று முழங்குகிறாள் தலைவி. பஞ்சம் பிழைக்க பெண்ணைப் பிரிந்து ஆண் செல்லும் இந்த ஊரின் அரசியல் நிலை சரியா?அப்படி சென்றாலும் பெண் பொத்திக்கொண்டு மௌனமாகத்தான் இருக்க வேண்டுமா?ஆஅ ஒல்லெனக் கூவும் அவ்வையின் ஒலி ஆணாதிக்க வெளியின் கனத்த மௌனத்தை நூற்றாண்டுகளாகக் கலைத்தபடி இருக்கிறது!

...

## நிலவு தூங்கும் நேரம்!

இரவு ஹோட்டலொன்றுக்குப் போயிருந்தேன். அங்கு ஒரு மாஸ்டர். அந்த உணவகத்தின் ஆல் ரவுண்டர் அவர். அவரே மாஸ்டர். அவரே சர்வர். பம்பரமாகச் சுற்றுவார்.

முன்பொரு நாள். இப்படிதான், போயிருந்தபோது ஒரு சம்பவம். என்னுடைய இலையில் ஒரு தோசையை வைத்துச் சாம்பார், சட்னி வைத்தார். கூட்டமில்லாத நேரம். இதைப் பயன்படுத்திச் சாப்பிட நினைத்தார். அவசரம் அவசரமாக மூன்று இட்லியைப் பிட்டுப் போட்டார்.சாம்பார் ஊற்றிக்கொண்டார். சட்னியை எடுக்கத் தாவியவர், டம்ளரைச் சாய்த்துவிட்டார். இலையில் நீர் பரவி, சாம்பாரில் கலந்தது. அத்தோடு கொஞ்சம் சட்னியும் ஊற்றிப் பிசைந்தார்.நின்றபடி, கிடுகிடுவெனச் சாப்பிட்டார். இல்லை, விழுங்கினார்!

நாள் முழுவதும் 1000 இட்லி சுடுபவர். 800 தோசை சுடுபவர். 900 பரோட்டா சுடுபவர். மூன்று இட்லியை ருசித்துச் சாப்பிட நேரமில்லை. கண்ணீர் வந்தது. ஆள் முருங்கை நெற்று போல இருப்பார். இன்றைக்கும் கூட்டமில்லை. சாம்பார் வாளியை எடுக்கப் போனவர் 'நிலவு தூங்கும் நேரம், நினைவு தூங்கிடாது!' ஹம் பண்ணினார். இவர் பாடுவாரா? ஆச்சரியமாக இருந்தது.

ஆள் குஷியாக இருக்கிறாரே! அதுவரை விசேடம்! பில் கொடுத்துவிட்டு வெளியே வந்தேன். மாஸ்டரும் வெளியேறி அருகிலுள்ள இருளில் சிகரெட் பற்ற வைத்தார். அவரை நெருங்கினேன்.சிகரெட்டைப் பின்னால் மறைய வைத்தார். 'பரவாயில்லை, நீங்க ஸ்மோக் பண்ணுங்க!' வெட்கப்பட்டுச் சிரித்தார்.

'உங்க பேரு என்ன மாஸ்டர்?''பூவராஹமூர்த்தி!' என்றார்.'ரொம்ப நாளா பார்க்கிறேன். ஏன், எல்லா வேலையும் இழுத்துப்போட்டு நீங்களே செய்றீங்க. முதலாளியை இன்னொரு ஆள் வைக்கச் சொல்லுறதுதானே!'

'பாவம் சார் அவர். தொடர்ந்து மூணு ஆபரேஷன். நிறைய செலவாயிட்டுது. இங்கயே பதினைஞ்சு வருஷம் போயிட்டுது. நம்மால முடிஞ்சத அவருக்குச் செய்வோமே. அதான், ஒருத்தனாவே செஞ்சிகிட்டிருக்கேன்!' குரல் தழுதழுத்தது.

'மாஸ்டர் எனக்கு ஒரு ஹெல்ப்!'

'சொல்லுங்க சார். முடிஞ்சா செய்றேன்.'

'இல்ல, அந்த நிலவு தூங்கும் நேரம் பாடுங்களேன்!' திரும்பவும் வெட்கப்பட்டார். விரலிடுக்கில் சிசர்ஸ் கனிந்தது. வானத்தைப் பார்த்தார். முழு மதி நிறைந்து தண்ணென்று சுடர்விட்டது.

'நிலவு தூங்கும் நேரம்
நினைவு தூங்கிடாது !
இரவு தூங்கினாலும்
உறவு தூங்கிடாது!'

கொஞ்சம் கொஞ்சமாக அவரது முகமும் நிலாபோல ஒளி சிந்தியது.

அவர் குரலுக்கு இரவு ஒரு நாய்க்குட்டியைப்போல வாலைக் குழைத்தது.

'இது ஒரு தொடர்கதை
தினம் தினம் வளர்பிறை'

என்றவர் தேங்கி நின்றார். 'இவ்வளவுதான் சார் வரும்!' என்றார். பைக்கை உதைத்தேன். நிலவு தலைக்குமேல் கூடவே வந்தது.

நிலவு தூங்கும் நேரம், நினைவு தூங்கிடாது!ஹம் பண்ணிப் பார்த்தேன்.

எஸ்பிபி சாருக்கு இதெல்லாம் தெரியுமா? பூவராஹமூர்த்தி போன்ற மனிதரின் வலிக்கு மாத்திரையெல்லாம் தேவையில்லை. இந்த நிலவு தூங்கும் நேரம் போதும்!

● கருப்பசாமி.க (கலிங்கப்பட்டி)
ஸ்ரீ.கே.இராமச்சந்திரா நாயுடு கல்வியியல் கல்லூரி – பருவக்குடி, கரிவலம்வந்தநல்லூர்.



# மீட்டெடுக்கப்படும் மரபு

உண்மை உண்மை உண்மை.

இப்படியான முழக்கத்தோடு முடிகிறது ஒரு நூல்.

நாடறிந்த நல்லதொரு கவிஞனின் நற்சிந்தனைக்குள் முகிழ்த்த மலர்ச்சிந்தனை; நம் மண்ணின் மைந்தனாய், மக்களின் இறையாய்ப் போற்றப்படுகிற ஒரு தெய்வத்தின் வரலாற்றை ஆய்கிறது.

நாடாண்ட மன்னர்களை, மக்கள் மனதாண்ட தலைவர்களை மதத்தலைவர்களாக, சமூகப்பெருநோயாம் சாதித்தொழுநோய்க்கு உரமாக அடையாளப்படுத்திக்கொண்டிருக்கிற இச்சமகாலத்தில் மத அடையளமல்ல, மதத்தலை(இறை)வனல்ல அவன் ஒரு இனத்தலைவன், இனத்தார் மனத்தினை ஆண்டவன், அதனால் அவர்கட்கே அவன் ஆண்டவன் என்கிற உரிமை நிலைநாட்டுதல் வகைமையிலான நிலைப்பாட்டில் வரலாற்றோடு பயணிக்கிறது; பயணிக்கச்செய்கிறது அச்சிறுநூல்.

ஆழிப்பேரலையில் அமிழ்ந்துபோன ஆதித்தொல்குடி தமிழ்க்குடி என்பதை ஆய்வுகள் செப்புகின்றன. ஊழிக்காலத்தே நடந்த அவ்வொற்றை இடரில் இழந்த வரலாற்றின் இதயத்துடிப்பை இன்னும் செவிமடுத்துக்கொண்டிருக்கிற இப்பெரு இனத்தின் பெருந்தெய்வத்தைப்பற்றி அலசுகிறது அந்நூல்.

தென்புலத்தார் யார்? வள்ளுவனைத் துணைக்கொண்டு பதிலளிக்கிறார் ஆசிரியர். மேலும், அதை அகம், புறம் எனப் பகுத்த தமிழிலக்கியப் பரப்புகளிலிருந்து தூக்கிச் சுமந்து வந்து தம்கருத்திற்கு அரணமைக்கிறார் ஆசிரியர். அரணும் அசைக்கவியலாப் பெருவலு கொண்டு சீனப்பெருஞ் சுவர் போல் நிற்கிறது.

தமிழாய்ந்த தொல்குடிக்குத் தெய்வமுண்டா? எனக் கேட்க, உண்டு என்பதாய் ஆய்வு தொடங்குகிறது. உண்டெனில் யார்? எனும் கேள்விக்கு, பதிலே ஆய்வை நிறைவு செய்கிறது. எத்தனை எத்தனை மேற்கோள்கள். இன்றளவிலும் பின்பற்றிவருகிற எச்சத்தின் எடுத்துரைப்புகள் எதார்த்த உலகில் ஏற்றுக்கொள்கிற ஆய்வுண்மை.

இனத்தின் தலைவனைத் தேடிப்பயணிக்கிற மனநிலையைத் தருகிற உரையாடல். முன்னெப்போதுமில்லாத வகையில் எவருக்கும் புரிய எளிய உரையாடலில் உணரப்பட்ட உண்மைவிதைகள் உள்ளத்தில் தூவப்பட்டுக்கொண்டே வருகின்றன; இனத்தலைவன் பெருந்தாவரமாய் மனதிலே வளர்ந்துநிற்க.. ஐந்திணைப் பகுப்பில் அறிந்த கடவுள்களில் சிவனைக் காணவே காணோம்; சிலப்பதிகாரம் தாண்டி இந்திரனும், வருணனும் இடையிலேயே கரந்த கதையும் கண்டோம்.. என்கிற உண்மையை நினைவுபடுத்திச் சிந்திக்கச் செய்கிறார்.

கந்தன் யார்? சுப்ரமணியன் யார்? கோவணாண்டியாய் நிற்கப் பழகியவன் யார்? தெய்வயானை என்கிறவளின் கணவன் யார்? என்கிற கேள்விக்குப் பதில் இங்குள்ளது. பெயர் வைத்தவர்களையும், நிற்கப் பழக்கியவர்களையும் யாரென நாமே அடையாளப்படுத்திக்கொள்ள ஆதாரங்களை மட்டும் நம்மிடம் தந்துவிட்டுச்செல்கிறார் நூலாசிரியர்.

அதே வேளையில், வீரத்தின் அடையாளமாய், மாவீரர்களுக்கு உவமையாய் உருவகிக்கப்பட்ட உயர வேல் பிடித்த வேலன் யார்? 'கொற்றவைச்சிறுவ' என அடையாளப்படுத்தப்பட்ட அக்குமரன் யார்? கடுஞ்சின வேலெய்தி நிற்கும் அவனின், அண்ணன்தான் கணபதியா? பிள்ளையார் எனப்பட்டவன் யார்? தென்புலத்தாருக்குத் தெய்வமென நின்றவன் யார்? எனும் கேள்விகளுக்கும் விளக்கமுண்டு இதில். ஆசிரியரின் தகுந்த எடுத்துக்காட்டும், மேற்கோள்களும் அதற்கு உதவி புரிகின்றன.

ஆதித் தமிழ்க்குடி அமிழ்ந்துபோயின.. பெருங்கடலின் அடியாழம் செலவுசெய்து அங்கே கடல்நீரில் கனன்றுகிடக்கும் தமிழ்க்குடியின் மரபை மீட்டெடுப்பதாய் அமையும் இந்நூல், இம்முறை நாம் பெரிய திரையில் கண்டுமகிழ்ந்த ஆயிரத்தில் ஒருவன் படத்தின் குல தெய்வத் தேடுதலை நினைவுபடுத்துகிறது.

இன்றைய பழக்கத்திற்கும் அன்றைய வழக்கத்திற்கும் ஊடான பின்னலாய் உண்மையை உடைக்கிறது நூல். குன்றிருக்கும் இடமெல்லாம் குமரனிருக்கும் இடமானது எவ்வாறு? குன்றேறி நின்றாண்ட, கடலாய்ந்து போரிட்ட இனத்தலைவனை இழந்த மக்கள் சோகத்தினால் குன்றாயிருக்கும் இடமெல்லாம் அவனையே கண்டு, உண்டுகளித்த கடல், கழித்து எஞ்சிய யாவற்றையும் காவடியாய்த் தூக்கி வந்த எச்சம் இன்று காவடி காணிக்கை.

நடுகல் வைத்து வழிபடல், மறி அறுத்து வழிபடல் என்றிருந்த மக்கள், பசுவொத்த பார்ப்பாருக்கு அடிபணிந்ததெவ்வாறு? தமக்குளிட்ட பங்காளிச் சண்டையின் ஏதுவேது? இடைச்செறுகலாய் அல்ல இலக்கியம் பயணித்த காலம்; இடம்; சூழல் எனப் பதிலுரைத்தல். ஆதாரத்தோடு அனைத்தையும் உணரச் செய்கிறது இந்நூல்.

தமிழர் சால்பு எத்தகையது, அதில், வித்யானந்தரின் பங்களிப்பு எத்தகையது என்பதோடு மட்டுமல்ல தமிழர் தெய்வமெது? என்பதறிவதற்கும் இதன் வாசிப்பு அவசியம் நமக்கு.

மறி அறுத்து வணங்கிட்ட முறைமையோடு கண்ணப்பன் ஏன் கண்ணப்பனாகவே இல்லை; திண்ணப்பனாக மாற்றப்பட்டான் என்பதை விளக்கி சிவனுக்கு ஏன் அவன் கறியைப் படைத்து வழிபட்டான் என்பதையொட்டி நம்மைச் சிந்திக்கச் செய்கிறது. புனைதலின் பரிமாணங்களைப் புரியவைக்கிறது. ஆன்மீகத்தின் வழியான அன்றைய அரசியலை நிழல்காலத்தில் உணர்ந்துகொள்ள உதவுகிறது.

அதே நேரத்தில், தமிழ்க்கடவுள் மட்டுமல்ல, கண்ணப்பனும் களவாடப்பட்டான் என்பதனைப் பகிரங்கமாக உணர்த்திவிட எத்தனிக்கிறது. இந்நூல் அனைவரில்லிலும் அடித்து வைக்கப்பட்ட கடவுளர் படங்கள் அத்துணையிலும் அந்த முருகன் ஓரங்கப்பட்டான் என்பதோடு நில்லாமல் தமிழர் வழிபாட்டிலும் ஓரங்கட்டப்பட்டான் என்கிற உண்மையை ஆதாரத்தோடு விளக்கிச் செல்கிறது.

கல்வெட்டுக்கள், சிற்பங்கள், அகழ்வாய்வுகள், செப்புப் பட்டயங்கள், ஓலைச் சுவடிகள், நடுகற்கள் என ஆய்வுக்குத் துணைபுரிய அநேகமிருந்தாலும், இலக்கியத்தின் பேசுபொருளை ஆய்ந்து, அவற்றை நிறுவுகிறபோது மேற்கூறியவற்றின் பயனேதும்

துணைபுரியுமா? எனவாய்ந்து படிப்பார்க்குப் புரியுமென்பதனாலேயே படத்தோடு விளக்கியிருக்கிறார் ஆசிரியர்.

படித்தாரும்; படிப்பாரும் முடிக்கிறபோது, அதே உண்மை உண்மை உண்மையென உள்ளூர உணர்ந்தும் உரைத்தும்தான் முடிப்பார்கள்.

தமிழைப் படிக்க, தமிழ் படிக்க, இழிவென நினைக்கிற நாம், இல்லில் இயன்றவரை தமிழ்ப்பெயர் சூட்டவேண்டும்; நிலையங்களுக்கும், அங்காடிகளுக்கும் தமிழ்ப்பெயர் சூட்டவேண்டும் என்கிற அரசின் அறிவுறுத்தல்களை ஏற்றோமோ இல்லையோ தமிழில்தான் பெயர்வைத்தேனெனக் கூறிக்கொண்டு தமிழைச் சிதைக்கும் பிறமொழியைத் தாங்கியே பெயர்சூட்டுகிறோம். இதனைக் கடிந்துகொள்ளும் ஆசிரியர், நம்மை வரலாற்றைத் தொலைத்தவர்களாக மட்டுமில்லை தாய்மொழியைத் தாயைத் தொலைத்துவிட்டுப் பொய்யரைப் போற்றுகிற கூட்டமாகக் கண்டு மனம் வெதும்புவதை உணரமுடிகிறது.

செருமனியில் பெற்றோருக்கு இறுதிமரியாதை செய்ய பிரான்சிலிருந்து பல லட்சங்களின் செலவில் அர்ச்சகரை வரவழைக்கும் தமிழருக்கு, ஈன்றவர்களின் படங்களுக்கு மலர்தூவி வணங்கி இறுதி மரியாதை செய்து, முதியோரில்லங்களில் அடைக்கப்பட்டிருக்கும் அம்மா அப்பாக்களுக்கு அந்த லட்சங்களை உதவியாய்த் தந்துதவினால் ஈன்றார் மகிழமாட்டாரா? என்கிற கேள்வியை முன்வைக்கிறார். அதில் இச்சமூகம் மீதான அவரின் கோவம் வெளிப்படக் காண்கிறோம். இலட்சங்களைக் கொட்டிப் பாசத்தைக் காட்டிக்கொள்ள எண்ணும் பொய்ப்பகட்டு மனிதர்களுக்குச் சவுக்கடியாகத்தான் இருக்கவேண்டுமென ஆதங்கப்படுகிறேன் நான்.

இதே நிலை தொடர்ந்தால் தமிழ் முருகனைத் தமிழ் முருகனாக மட்டுமல்ல தமிழர்களின் முருகனாகக்கூட வழிபட முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்கிற எச்சரிக்கை என்னுரையில் ஆசிரியரின் எழுத்துக்களால், எச்சரித்துவிட்டுச் செல்கிறது. முருகன் தமிழ் முருகன், தமிழரின் முருகன் என்பதையும் ஒருமுறை மனதில் உச்சரித்துவிட்டும் செல்கிறது. அதே நேரத்தில் அதை உணர்ந்துகொள்வதும் நம் கடமையாகிறது.

படிக்க திருக்குறளும் இருக்கிறது, வணங்க தமிழ் முருகனும் இருக்கிறான். பேச தமிழ்மொழி தழைத்தினித்துத் தவமிருக்கிறது.. இந்நன்றி மறவாது நிற்கவேண்டும். நம்வரலாற்றை, இலக்கியத்தைக் காலமுறைமை உணர்ந்து பயிலவேண்டும் என்கிற பாடத்தினைச் சொல்லாமல் சொல்லிச் செல்கிறது இந்நூல்.

**நூலின் பெயர் : தமிழ் முருகன்,**

**ஆசிரியர் : கவிஞர். அறிவுமதி,**

**விலை : 150,**

**வெளியீடு : தர்மலிங்கம் அறவழித் தொண்டு மற்றும் கல்வி அறக்கட்டளை.**



# தேனியில் ஒரு கவிதைத் திருவிழா




தமிழ்நாடு முற்போக்கு கலை இலக்கிய மேடை 09.02.2020 அன்று கவிஞர் பிருந்தாசாரதியின் படைப்புலகம் என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்றைத் தேனி நகரில் நடத்தியது. அவரது ஒவ்வொரு நூல் குறித்தும் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

திரு.சித்தார்த் பாண்டியன் ‘இருளும் ஒளியும்’ கவிதை நிலை குறித்துப் பேசும்போது,கவிதைகளில் புதைந்துள்ள நுட்பமான செய்திகள் மீதான கவிஞர் பிருந்தாசாரதி அவர்களின் அவதானிப்பைக் கண்டு வியந்து மலைத்துப் போனார்.

மலர்கள்

தாவர விளக்குகள்

விழிகள்

மாமிச விளக்குகள்

என்ற கவிதையை வியந்த திரு.சித்தார்த் பாண்டியன் கவிஞருக்கு முத்தமிட விரும்புவதாகக் கூற அரங்கம் கலகலப்பானது .

அடுத்ததாக.. யாழ் தண்விகா என்ற புனைப்பெயரைக் கொண்ட திரு.விஜயராஜ் ‘பறவையின் நிழல்’ குறித்துத் தனது கம்பீரக் குரலில் மதிப்புரையை வழங்க அரங்கம் சற்று நிமிர்ந்து அமர்ந்தது.

கணித ஆசிரியை ஆர்.எஸ். லட்சுமி “எண்ணும் எழுத்தும்” நூலுக்கு மதிப்புரை வழங்கினார். ‘கணிதத்தைக் கண்டு பயப்பட்ட, மிரண்ட ஓர் கவிஞனின் முத்துக்களான, எளிமையான, வார்த்தைகளால் அழகாகக் கோர்க்கப்பட்ட கவிச்சரம்தான் “எண்ணும்எழுத்தும்” என்ற நறுமணம் கமழும்

கவித் தொகுப்பு' என்றார்.

அடுத்ததாக லஷ்மி விசாகன் அவர்கள் "மீன்கள் உறங்கும் குளம்" என்ற ஹைக்கூ தொகுப்பிற்கு மதிப்புரை வழங்கினார்.

எதிர்ப்புற நாவல் மரத்திற்கு

பூங்கொத்தை நீட்டுகிறது

நெடுஞ்சாலைக் கொன்றை மரம்

என்ற ஹைக்கூவை வாசித்தவர் பேருந்தில் சன்னலோர இருக்கையில் அமர்ந்து சென்றாலும் இப்படியான அவதானிப்பு தனக்கு வரவில்லை என்று பதிவு செய்தார்.

"ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடம்" கவிதைத்தொகுப்பிற்கு கே.எஸ்.அம்பிகாவர்ஷினி மதிப்புரை வழங்கினார்."கவிதைகளுக்கான பல்வேறு கூறுகள், மொழியின் ரகசியங்களைக் கட்டுடைத்துக்கொண்டே போகக்கூடியது. மொழியின் ரகசியமென்பது அதனுடைய வனப்பு. மொழியின் வனப்பை நெருங்க நெருங்க மேலும் அதனுடைய செழுமை கிறங்கடிக்கும்...

கவிதைகளில் அபூர்வமான தருணங்கள் நிகழ்வதைப் போல ஒரு தொகுப்பில் அபூர்வமான கவிதைகளும் நிகழ்ந்துவிடுகின்றன..உதாரணமாக ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடமென்னும் இந்தக் கவிதைத் தொகுப்பில் உள்ள..

"ஊர்த்திருவிழா சென்று

சாமி கும்பிட்டு ஆடிப்பாடி

மரத்தடியில் உறவுகளோடு கூடி

ஆடடித்துச் சமைத்து

உண்கையில்

எனக்குள் விழித்தான்

என் மூதாதையரில் ஒருவன்"

என்றகவிதை.

என்னுடைய தனிப்பட்ட ரசனைகளின் வழியாகத் தொகுப்பில் கண்டெடுக்கும்போது,

*ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடத்தில்,எங்கிருந்தோ பறந்துவரும் ஒரு வண்ணத்துப் பூச்சியாக

*விடுமுறை நாளில் உன் நினைவில், மனநிலை பிறழ்ந்த ஒருவனாக

*தவிட்டுக் குருவியில், தவிட்டுக் குருவியாக

*ஓர் இலையைக் கிள்ளினால்,முள்ளாக



*ஜன்னல் திறக்கும் பூனையில், பூனையாக

*புரியாத புத்தகத்தில், ஒரு முட்டாளின் கதையாக

பல அபூர்வ தருணங்களைக் காணமுடிகிறது," என்றார்.

தொடர்ந்து மறைநீர் நூலாசிரியர் பொறியாளர் கோ.லீலா வாழ்த்துரை வழங்கினார். "கவிஞர் எளிய தமிழில் இனிய கவிதைகள் எழுதும் வல்லமையோடு சொற்சிக்கனமும், அதன் வழியே ஞானத் தூறல்களையும் போடுபவர். பிறரின் வெற்றியைக் கொண்டாடக்கூடிய பெரும்மனதுக்காரர்," என மகிழ்ச்சியுடன் பேசினார்.

திரு.மேகா அருணாச்சலம் கவிஞரின் ஆறு நூல்களையும் தொகுத்து ஒரு குறுக்கு வெட்டுப் பார்வையை வழங்கினார். "ஒரு நூலில் இருந்து மறு நூல் வடிவத்தில் மாறுபட்டிருப்பது, பாடுபொருள் புதிதாகத் தேர்ந்தெடுத்திருப்பது , எல்லாவற்றிலும் எளிமை இயல்பாகக் கைகூடிவந்திருப்பது எல்லாம் அவரைத் தனித்துவமாக்குகிறது," எனக் குறிப்பிட்டார்.

நிறைவாக.. பேராசிரியர் முனைவர் அப்துல் சமது அவர்கள் தலைமையுரை ஆற்றினார். ஒவ்வொரு கவிதையையும் போற்றிச் சிலாகித்துப் பேசித் தன் நினைவுகளை பல்வேறு வரலாற்றுக் கதைகளுடன் சுவைபடக் கூறினார் என்பது நிகழ்வின் சிறப்பு.

பின் கவிஞர் பிருந்தாசாரதி அவர்கள் ஏற்புரை வழங்கினார். 'முப்பதாண்டுகள் இந்தக் கவிதையோடு தொடர்ந்து பயணம் செய்ததில் இப்படி ஒரு நாள் பரிசாகக் கிடைத்தது மகிழ்ச்சி', எனக் குறிப்பிட்டார்.

## ஊரடங்கு

வெறிச்சோடிய சாலையில்
சொந்த ஊர் சேர
கால்கள் துவள நடந்து வரும்
வயோதிகரின்
கையில் உள்ள நெகிழிப் போத்தலில்
நெளிவது அவரின்
கண்ணீராக இருக்கக்கூடும்.....

சாலையோரம் நடுநிசிக்குளிரில்
கால்களுக்கிடையே வயிறு சுருங்கி
நெஞ்சம் அணைத்து தலை குறுக்கி
கைகளைக்கட்டி ஐந்தடி
உருவத்தை ஓரடியாக
உருமாற்றி அமர்ந்திருக்கும்
மூத்த குடிமகளை நிற்காமல் செல்லும்
ஏதேனும் போக்கு வண்டியில்
யாராவது ஏற்றிவிட்டால்
இருப்பிடம் அடைவாள்......

இன்றாவது
கால்வயிறு நிறைக்கலாம்
என்ற பேராசையில்
கைகளை நீட்டியபடி
கண்கள் மின்ன வேகவேகமாக
கூட்டம் சூழ்ந்த அந்த வாகனத்தை
நோக்கிவரும் மனம்பிறழ்ந்தவளிடம்
எப்படிச் சொல்வது???

அது மருத்துவப் பரிசோதனை
வாகனம் என்று....

ஊரடங்கு விடியாத நாளில்
குடுவையுடன் தாயற்ற குழந்தைக்கு
பால் வாங்க தெருத்தெருவாக
சுற்றிய இளம் தந்தையின்
மார்பினில் பால் சுரந்திருக்கலாம்!
குழந்தை சிரிக்கிறது.....

தூய்மைப் பணியாளரின்
கைப்பேசியில்
"ராசாவே உன்ன நம்பி
இந்த ரோசாப்பூ இருக்குதுங்க"
பாட்டு திரும்பத் திரும்ப வர
அதைத் துண்டித்தபடியே
குப்பைகளுக்குள் முன்னேறுகிறார்....

அவரவர்க்கான
வாழ்க்கையை
கடத்திக்கொண்டிருக்கும்
ஏதோவொன்றைத் தேடி
அலையும்போதெல்லாம்
தோன்றுகிறது....

நம்பிக்கைதானே
வாழ்க்கை..

– தோழன்பிரபா

• • •

## தனிமை நாட்கள்

ஒரு கிலோ முப்பது ரூபாய்க்கு
விற்ற ரவையை
அரை கிலோ முப்பது ரூபாயென
விற்கிறார் மளிகைக் கடைக்காரர்
ஆயிரம் ரூபாயை
தாண்டிப் போய்க்கொண்டிருக்கிறது
ஆட்டுக்கறியின் விலை
அதிகம் விலை வைத்து
விற்கக் கூடாதென அரசாங்கம்
எச்சரித்த முகக்கவசம்
நாற்பது ரூபாய்க்கும்
சாதாரணக் கைக்குட்டைகள்
முப்பது ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன
அந்த வேப்பமரத்தடியில்
பல வருடங்களாக
காய்கறி விற்கும் பாட்டி மட்டும்
முந்தானையால் பாதி முகத்தை
மூடிக்கொண்டு
குவித்து வைத்த காய்கறிகளோடு
இன்னமும் கொசுறாய்
தந்து கொண்டிருக்கிறாள்
கொஞ்சம் கொத்தமல்லியையும்
நிறைய மனிதத்தையும்.....

– பிரபுசங்கர்_க

• • •

கொதிக்கிறது உலை நீர்
போடுவதற்குத்தான் அரிசி இல்லை

அணைக்காமலேயே அணைந்தது
எரிவாயு தீர்ந்து

பசுமையாகவே இருக்கிறது
காய் கனிகள்
நினைவுகளில்

பசிக்கு அழும் பிள்ளையிடம்
கொரானா என்றேன்
அதையேனும் வாங்கித் தா
என்பதிடம் என்ன சொல்ல....

– கதிரவன் வீ

• • •

வீதியில் மனிதர்கள்
வீட்டுக்குள்
ஒளிந்து கொண்டிருந்த
கொரோனா காலத்தில்

ஆகாயத்தில்
ஊர்வலம் நடத்தி
ஊரடங்கை
கேலி செய்துகொண்டிருந்தது மேகம்...!

– வணவை தூரிகா ■

● சாந்தா தத்
● ஓவியம் - அன்பழகன்



# சக மனுஷி

அரிது அரிது மானுடராய்ப் பிறத்தல் அரிது...! மூதாதையரின் முத்தான வாக்கியம்..! நேர்த்தியான வெளிப்பாடு.! போதும்பா இந்த மனுஷ ஜன்மம் என அலுத்துக்கொள்ளும் சுயப் பச்சாதாப மனிதர்கள் ஒருமுறையேனும் நினைத்துப் பார்க்க வேண்டிய கூற்று.! மனிதராய்ப் பிறப்பது அவ்வளவிலான மகத்தான வரம் என்பதுதானே இவ்வாக்கியத்தின் சாரம்.. நிச்சயமாய் ஆம்.! நாணயத்தின் இரு பக்கம் போல் இனிப்பும் கசப்பும் இருளும் ஒளியுமான ரசாயனச் சேர்க்கைதான் இவ் வாழ்வியல். தண்ணீர் நிரம்பிய கோப்பையுடன் நடப்பவன் பாதி வழியில் நீர் கொஞ்சம் சிந்திவிட்டபோது.. பரவாயில்லை.. பாதி தம்ளர் நீர் இன்னும் இருக்கிறதே என நினைக்கும் பாசிடிவ் இயல்புடையவர்கள் உள்ள உலகில் மனித வாழ்க்கை அரிதுதான்.. அழகுதான்....! இதில் மாற்றுப் பார்வை கொண்டவர்களும் உண்டு.. சுயமாப் பட்டாத்தான் தெரியும். அவனவன் கஷ்டம் அவனவனுக்கு.. வாழ்க்கையாம்.. அழகாம் என முணுமுணுப்பவர்களும் ஏராளம். சரி... இருக்கட்டும். அரிது என்பது ஒட்டுமொத்த மனிதப் பிறவியைத்தான் குறிக்கிறது.! இது ஆண் பெண் இருவருக்குமானதல்லவா.. பாலினப் பார்வை இங்கு எங்கு வருகிறது? இந்த ஒரு விஷயம் என்றில்லை. அனைத்து அம்சங்களிலும் இது பொருந்தும்.. மனிதர்களிடை ஆண் பெண் எனும் தனிப் பார்வை என்பதே தேவையற்றதென்பது என் தனிப்பட்ட கருத்து.

ஒரு நிமிடம்.. நான் பெண்களின் எதிரி அல்ல. பெண்களைத் தாழ்த்திப் பேசுவது என் நோக்கமல்ல. பெண்களை ஒரு தனிப் பிறவியாக்கி உயர்வாய்ப் பேச வேண்டாமே என்றுதான்! பெண்கள் ஆண்கள் இரு பாலரையும் சமமாய்ப் பாவிக்கலாமே என்பதுதான் என் ஆதங்கமெல்லாம்! அவர்கள் மீதான பரிவு வேண்டாம். கசிந்துருகும் கரிசனம் வேண்டாம். அவர்களை இன்னும் “வீக்கர் செக்ஷன்” ஆகவே பார்க்கும் பரிதாபம் வேண்டாம். அவர்கள் எவ்வளவோ முன்னேறிவிட்டார்கள். வானமே எல்லை எனும் பாய்ச்சலில் வளர்ந்துகொண்டிருக்கிறார்கள். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு எனும் பழைய பஞ்சாங்கக் காலத்தையெல்லாம் தாண்டித் திரும்பிப் பார்க்கவியலாதளவில் வெகு தூரம் சென்று விட்டார்கள். அவர்களுக்குத் தனிப்பட்ட சலுகைகள் தேவையில்லை. சலுகைகள் கொடுப்பதாலேயே ஓ.. அவர்கள் இன்னும் பின் தங்கிய நிலையில்தான் இருக்கிறார்கள் எனும் எண்ணத்தைத் தூண்டி விடுவதாகி விடுகிறது. அழும் குழந்தை முன் ஐஸ்க்ரீம் நீட்டுவது போல்! அவர்களுக்குத் தேவையெல்லாம் என்னைப் போல் நீயும் எனும் சம அங்கீகாரம்தான்!

ம்... பாழாய்ப்போன பெண் ஜென்மம் ஏன்தான் எடுத்தேனோ எனப் புலம்பும் பெண்கள் இன்னும் ஏராளமாய் இருக்கிறார்கள்தான். அளவுக்கதிகமான சுய பரிதாபம் மனதில் மலையாய்க் குவிந்து அகமும் புறமும் குமைபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். எவ்வளவு செய்தும் குறைந்தபட்ச அங்கீகாரம் கூடக் கிடைக்கவில்லையே எனக் குமுறித் தவிப்பவர்களும் உண்டுதான். அதென்ன.. அவர்களுக்கு மட்டும் இந்த அங்கீகார

எதிர்பார்ப்பு! இதற்கெல்லாம் காரணமே இச்சமூகம்தான்! சற்றே விளக்கமாய்ச் சொல்வதெனில்..

ஆணோ பெண்ணோ.. வாய்த்துள்ள வாழ்க்கையில் குடும்பம் அல்லது சமூகச் சூழல்களுக்கேற்ப.. அவரவர் வாழ்க்கைப் பின்னணியில் அவர்களுக்கு விதிக்கப்பட்ட கடமைகள்.. தார்மீகப் பொறுப்புகளை "யாவரும் மனிதர்கள்" எனும் மனிதக் கண்ணோட்டத்துடன் சரிவர நிறைவேற்றும் முயற்சிகளை முனைப்புடன் மேற்கொண்டால் இயற்கை நியதிகளடிப்படையிலான சில நுண்ணிய வேறுபாடுகள் நீங்கலாக இருபாலருமே சமம்தான். இருவருமே மனிதர்கள்தாம்.

எங்கு இல்லை பிரச்சனைகள்.. யாருக்கில்லை குழப்பங்கள்..? பாதிப்பும் தாக்கமும் பெண்களுக்குத்தான் அதிகமெனக் காலம்காலமாய் வலியுறுத்தப்பட்டு வருகிறது. பெண்கள் பொறுமையின் சிகரம், பூமா தேவி, தியாக மூர்த்தி, குடத்துள் குத்து விளக்கு என்றெல்லாம் சொல்லிச் சொல்லியே.. தலையில் மகுடம் சூட்டிச் சூட்டியே எத்தகு இன்னல்களுக்கும் பிரச்சனைகளுக்கும் சமூகம் அவர்களைத் தயார்படுத்தி வைத்திருக்கிறது என்பதுதான் உண்மை. மேற்கண்ட வளைய முத்திரை காரணமாகவே ஆண்களின் அதே அளவு அல்லது அதற்கும் அதிகமான பிரச்சனைகளும் துன்பங்களும் உணரப்படுவதில்லை. பெண்களைப்போல் அவர்கள் வெளிப்படையாய்ப் புலம்பித் தீர்ப்பதில்லையாதலால்.! இதெல்லாம் அடிக்கோடிட்டுக் சுட்டுவதாலேயே "பெண்ணாக இருந்தும் பெண் சார்பாய்ப் பேசுபவளல்ல" என்றும், "பெண்களை விட ஆண்களுக்கு அதிகம் பரிபவள்" என்றெல்லாம் நான் கடுமையாய்ச் சாடப்படலாம். ஆண் பெண் பேதமற்ற சக மனிதவாதியாய் இருக்கத்தான் விழைவு என்னுள்! பெண்ணியம் ஆணியம் என்றெல்லாம் யுகயுகங்களாய்ப் பேசிப் பேசி அப்பிரிவினையை இன்னும் பிரம்மாண்டமாக்க வேண்டுமா எனும் ஆதங்கம்தான்.

காலத்தின் அதீத மாற்றம் பிரமிப்பாகத்தான் இருக்கிறது. ஒரு இருபத்தைந்தாண்டுகள் என்ன... பத்தாண்டுகளுக்கு முன்பிருந்ததை விட தற்போது அனைத்துத் தளங்களிலுமான பிரம்மாண்ட மாற்றம் கண் கூடாய் தென்படுகிறதென்பதை எவரேனும் மறுக்கவியலுமா? இதற்கேற்ப வாழ்க்கை முறைகளிலும் நெறிகளிலும் அவற்றின் பரிமாணங்களிலும் பெண் பாகுபாடுகளும் கண்ணோட்டங்களும் அதனதன் தன்மைகளில் கணிசமாய் வித்தியாசப்பட்டு வருவதை அறிவோம்தானே.! .. 1993இல் "நீலி மேகங்கள்" எனும் தெலுங்குக் கவிதை நூலிலுள்ள "சமையலறை" எனும் கவிதையில் "பெண்ணின் கனவுகளில் கூட சமையலறைதான்... சமையலறைக் கலாச்சாரம்.. சமையலறைப் பேச்சுகள்.. அடுப்பு.. பாத்திரங்கள் எனச் சமையலறை அக்காக்கள்... அம்மாக்களாகி விட்டிருக்கிறோம்... நாங்கள்.." எனும் நெட்டுயிர்ப்பும் முணுமுணுப்பும் இடம்பெற்றிருக்கிறது. சற்றே நினைத்துப் பாருங்கள்.. ஆண்களுக்குச் சமமாய்ப் பெண்கள் வேலைக்குப் போகும் இந்நாளில் சமையலறைக் கனவுகளும் கலாச்சாரங்களும் இருவருக்குமானதாகத்தானே இருக்கின்றன..! இருவரின் பங்கீடும் இருப்பதால்தானே பொருளாதாரப் பகிர்வும் சம அளவில் அமையப் பெற்று.. சற்று பழைய உதாரணமாய் இருந்தாலும்.. ஒரு வண்டி இரு மாடுகள் போல் குடும்பம் சிரமமின்றிச் சீராய்ப் பயணிக்க ஏதுவாகிறது! வேலைக்குப் போகாத பெண்களை எடுத்துக்கொண்டால் சமையலறை மீதான எரிச்சலும் ஆதங்கமும் முணுமுணுப்பும் முன்னளவு தென்படுவதில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நவீன யுகத்தின் வாழ்க்கைத் தேவைகளுக்கேற்ப தாம் வேலைக்குப் போகாவிடினும் இல்லத்தில் தன் நியாயமான பொறுப்புமிகு பங்கும் பகிர்வுமிது எனும் நிறைவுடனே தம் கடமைகளைச் செய்கின்றனர் இன்றைய பெண்கள்.. ஒரு சில விதி விலக்குகள் நீங்கலாக....!

மேற்சொன்னது ஒரு சிறு உதாரணம்தான். இவ்வாறு அனைத்துத் தளங்களிலும் ஆண் பெண் இரு பாலருமே மனிதர்கள்தான் எனும் சம நோக்குடன் அவரவர் விளிம்புகளுக்கேற்பப் பொறுப்பும் பொறுமையுமான உளவியலைச் சரிவரக் கையாண்டு அதற்கேற்பக் குடும்பம் மற்றும் சமூகப் பார்வையை அமைத்துக்கொண்டால் முப்பத்தி மூன்று சதவீதம் என்றல்லாது தம் திறமைகள் மூலம் எத்தனை விழுக்காடும் பெண்கள் சாதிக்கவியலும் என்பது சர்வ நிச்சயம்.

நீலமும் மஞ்சளும் கலவையாகையில் பச்சை வண்ணம் கிடைப்பது போல் ஆண் பெண் இருவரின் இணைப்பான சம நோக்குத் தோழமைதான் முழுமையான பெண் விடுதலை..!

● இ.செல்வராஜ்

# சுஜாதா



தமிழ்நாட்டரசின் கருவூலத்துறையில் எண்பதுகளில் எழுத்தராகப் பணியில் சேர்ந்தேன். அதற்கு முன் எழுபதுகளில் எப்போதாவது நூலகம் செல்வேன். குமுதம், கல்கி, ஆனந்தவிகடன், கல்கண்டு, மஞ்சரி, கலைமகள் மற்றும் அம்புலிமாமா ஆகியன படிப்பேன். அப்போதெல்லாம் வாசிப்பென்பது நுனிப்புல் மேய்வது. மேற்சொன்ன புத்தகங்கள் கையில் தவழ, காத்திருக்க வேண்டும். காசுகொடுத்துப் பத்திரிக்கை வாங்க வறுமைச் சூழ்நிலை இடம் கொடுக்கவில்லை. ஒரு தனியார் சாயத்தொழிற்சாலையில் 'டையர்' பதவி.. நூல் சாயம்பவுடர் மற்றும் கெமிக்கல்கள் எடைபோட்டுக் கொடுத்து வேலையாட்களிடம் வேலை வாங்குவது. தினமும் உடலுழைப்பு செய்யவேண்டும். படிக்க ஆவலிருந்தும் புத்தகம் வாங்கும் ஆசை கனவாகவே இருந்தது. அரசுப்பணியில் அது நிறைவேறியது.

எனக்கு நட்புவட்டம் பெரியது. இலக்கிய ஈடுபாடு உள்ளோரும் அதிகம். 1972லிருந்து பழக்கமான நண்பர் சேது புத்தகப்பிரியர். பட்டுச்சேலை தயாரிப்பு மற்றும் ஜரிகை ஏஜெண்ட்டும் கூட. அவர் சுஜாதா பிரியர். வாராவாரம் ஆனந்தவிகடன், குமுதம் மற்றும் கணையாழி வாங்குவார். எப்போது பேசினாலும் இலக்கியப்பேச்சு இல்லாமல் இருக்காது. வேலைநேரம் போக மீதிநேரம் அவர் வீடே கதி. அவர் வீட்டில் இரண்டு பிரம்பு நாற்காலிகள் இருக்கும். நாங்கள் பேசும் பெரும்பகுதி பேச்சு சுஜாதா அவர்களின் படைப்பு பற்றி இருக்கும். ஓசியில் அவரிடம் புத்தகம் வீட்டுக்கு வாங்கி வந்து படித்து மகிழ்வேன்.

கணையாழியின் கடைசி பக்கம் சுஜாதாவின் 'ஹிட்' ஆகும். அதேபோல ஜூவியில் "தலைமைச்செயலகம்" தொடர் சூப்பர் ஹிட் ஆகும். விஞ்ஞான நாவல்களில் இவர் நிறைகுடம். சுவாரஸ்யத்துக்குப் பஞ்சமே இருக்காது. இவரின் எழுத்துலகக் குரு லா.ச.ரா. என்கிற லா.ச.ராமாமிருதம். இவரின் ஸ்ரீரங்கத்துத்தேவதைகள் மறக்க முடியாத தொடர் ஆகும்.

● மதுரா
● ஓவியம் - அன்பழகன்

# தலைகீழ் விகிதம்



அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கும் கோல்டன் ஃபிஷ்ஷை சர்வ ஜாக்கிரதையாய் வலையில் பிடித்து... மீன்தொட்டியைச் சுத்தம் செய்து தண்ணீர் மாற்றினான். புதிதாக வாங்கிய மீன்களையும் உள்ளேயிட்டு அவை ஒவ்வாமல் ஒன்றோடொன்று உரசிக்கொள்வதை ஒரு நிமிடம் ரசித்தான்..

நாளை சனிக்கிழமை... நினைக்கையிலேயே பரபரவென்றிருந்தது ஜெயந்தனுக்கு.. இன்று மட்டுமல்ல ஒவ்வொரு சனி ஞாயிறும் வரம்தான். வீடெங்கும் இறைந்து கிடந்த துணிமணிகளை வாஷிங்கில் போட்டு.. பார்க்கும் இடத்திலெல்லாம் குப்புறக் கவிழ்த்து வைத்த புத்தகங்களை அடுக்கி முக்கியமாகப் படுக்கை அறையைச் சுத்தம் செய்து தயார் செய்வதற்குள் பெண்டு நிமிர்த்தியது. சாதாரணமாக அலுப்பு தரும் செயல் இப்போது உற்சாகத்தைத் தருகிறது.

இன்று நேற்றல்ல... ஏழு வருடங்களாகத் தொடர்ந்துகொண்டிருக்கிறது... செல்ல மகள் யாழினியை நினைக்கும்போதே ஒரு எனர்ஜி வந்துவிடும் அவனுக்கு... வாரத்தில் இரண்டுநாள் மகளைத் தன்னோடு வைத்துக்கொள்வது அத்தனை மகிழ்ச்சியாக இருக்கிறது..

மீன்தொட்டியைப் பார்த்ததும் விரியும் மகளின் கண்களுக்குள்தான் சொர்க்கமே இருக்கிறது போலும்..

“ப்ளீஸ் பா.. நாம ஃபிஷ் வளர்க்கலாம்.. மம்மி நெவர் அலவ்ஸ் மீ.. நாம இங்க வளர்க்கலாமா?”

அவள் கேட்ட மறுகணம் எதையும் யோசிக்காமல் வாங்கி வந்துவிட்டான்.. இதோ இந்த ஊரடங்கில் அவனோடு சேர்த்து மீன்களுக்கும் வாங்கி வைக்க வேண்டும்.. எல்லா வேலைகளையும் முடித்து இரண்டு நாட்களையும் அவளுக்காக ஒதுக்கி வைத்துக்கொண்டான்..

அடையாள ஊரடங்குக்குப் பிறகு மேலும் நீட்டிக்கப்படலாம் என்ற தகவல் கசிந்துகொண்டிருந்தது.. அடுத்தவாரமெல்லாம் யாழினியை அழைத்துவர முடியுமோ என்னவோ? வேலையை முடித்துப் படுக்கையில் சாய்ந்தபோது கைபேசி ஒளிர்ந்தது..

“எனக்காகப் பத்துநிமிடம் ஒதுக்க முடியுமா? முக்கியமான விஷயம்...” சுஜாவின் தகவல்....

என்னவாக இருக்கும்? இருவருக்கும் இடையே பேச ஏதுமில்லை... ஒருவேளை யாழினியைப் பற்றி ஏதேனும்... அவன் நினைத்ததைப் புரிந்துகொண்ட மாதிரி... இது முழுக்க பர்ஸனல்... என்ற அடுத்த மெசேஜ்...

ஒரு நிமிடம் நிதானித்தான்.. ஒருவேளை

யாரையேனும் மறுமணம் செய்யப் போறாளோ? அதைப் பற்றி என்னிடம் பேச என்ன இருக்கிறது? அலுப்பாக உணர்ந்தான்..

அவனுக்கும் சுஜாவுக்கும் நடந்த திருமணமே ஒரு ஆக்ஸிடன்ட் மாதிரிதான்.. படித்து முடித்த கையோடு ஒரு பெரிய கம்பெனியில் வேலை கிடைத்துவிட அம்மா வரன் பார்க்க ஆரம்பித்தாள்.. இப்போது வேண்டாம்.. திருமணம் பற்றிய எந்த எண்ணமுமில்லை என்றவனைக் கன்வின்ஸ் செய்து ஒரே மாதத்தில் சுஜாவை ஃபிக்ஸ் செய்தாள்..

எந்தப் புரிதலுமில்லாமல் சடாரென்று நடந்து முடிந்தது.. பொண்ணும் முத்தாக சொத்தும் பத்தாகனு அம்மாவுக்குத்தான் ஒரே மகிழ்ச்சி. சுஜாவும் அம்மாவுக்கு ஏற்ற மருமகளாகப் பதவிசாக நடந்துகொண்டாள்.. எதிலும் குறை சொல்ல முடியாத நேர்த்தி இருந்தது அவளிடம்...

ஆனால் ஜெயந்தனுக்கு அவளோடு ஒட்ட முடியவில்லை. இரண்டு மாதம் கூட தாக்குப்பிடிக்கவில்லை.. மூச்சு முட்டியது. கூண்டுக்குள் அடைத்தது போலிருந்தது. பொருந்தாத ஒன்றில் நுழைந்த மாதிரி... பொறுக்க முடியாமல் நாம் பிரிந்துவிடலாம் என்றான். ஏதோ சொல்லவந்தவளைப்பேசுவதற்குஒன்றுமில்லை... என்னால் இதைத் தொடர முடியாது. அவன் தீர்மானம் அவளை வாயடைத்தது.

விஷயமறிந்த அவள் பெற்றோர் வானத்துக்கும் பூமிக்குமாய்க் குதித்தனர். ஒருபடி மேலாய் அவள் அப்பா சாம தான பேத தண்டங்களைப் பிரயோகித்துப் பார்த்தார்.. ஆனால் சுஜா ம்யூச்சலாகப் பிரிவதற்கு எந்த நிபந்தனையுமின்றி ஒத்துக்கொண்டாள். அம்மாதான் அழுது ஆகாத்யம் செய்தாள். 'பெண் பாவம் பொல்லாதது.. புருஷனில்லாதவ வளர்த்த பிள்ளை னு கெட்டபேர் வாங்கி வச்சிட்டியே..என்ன குறை அவளுக்கு?' என மாய்ந்தாள். 'உன்னையொத்தவங்களைப் பாரு... அவனவன் சுமாரா இருக்கிறதுகளோட எப்படி பொறுப்பா குடித்தனம் நடத்தறான்.. வெளிநாட்டு வேலைக்குப் போனதில புத்தி பேதலிச்சுப் போயிட்டா?' ஆங்காரப்பட்ட அம்மாவிடம் என்ன சொல்ல?

முகநூல் படங்களைப் பார்த்து அம்மா நம்பிக்கொண்டிருக்கிறாள்.. அவர்களைப்போல உடைந்ததை ஒட்டவைத்துப் போலியாக வாழ முடியாது.. சுஜாவைக் குறை சொல்லவில்லை.. எனக்கு ஒத்து வராது அவ்வளவுதான்..

ஜெயந்தனின் தீர்மானத்துக்கு முன் எதுவும் எடுபடவில்லை..

அவன் நண்பர்கள் உறவினர்கள் என யாராவது அவன் முடிவை மாற்ற முயற்சித்துக்கொண்டே இருந்தார்கள்.. அவர்கள் பிரிந்த பின்னரும் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கும் ஒன்றை அவன் மௌனத்தினாலேயே சமாளித்துக்கொண்டிருக்கிறான்.. அவரவர் வாழ்க்கையை அவரவர்தானே தீர்மானிக்க வேண்டும்? ஒவ்வொருவரும் உள்ளே நுழைந்து தம் அபிப்ராயத்தைத் திணிக்க முயல்வது ஏன்? அக்கறை என்பதை விட அடுத்தவர் அந்தரங்கத்தில் புகுவது இவர்களுக்கு எளிதாகவே இருக்கிறது..

இரண்டு நாளும் மின்னல் வேகத்தில் ஓடிவிட்டன.. ஞாயிறு ஊரடங்கு கூட பெரிய விஷயமாகத் தெரியவில்லை..

திங்கள் மாலை அவன் குறிப்பிட்ட காபி ஷாப்புக்கு வந்திருந்தாள் சுஜா.. வெளிர் நீல டாப்ஸூம் அடர் நீல ஜீன்ஸூம் அவளுக்குப் பாந்தமாகப் பொருந்தியிருந்தன.. கைகளை மடக்கி விரிக்கும் அவள் மேனரிசம் யாழினியை நினைவூட்டியது..

'ரொம்ப நாளா உங்ககிட்ட சொல்ல ட்ரை பண்றேன்.நீங்க கேட்கத் தயாரில்லை.. எனிவே இப்பவாச்சும் வந்தீங்களே தாங்க் காட்... யாழினி உங்க பொண்ணு இல்லை..'

ஒரு நிமிடம் திகைத்துப் போனான்..

ஆட்டக்களத்தில் பந்து இப்போது அவள் கையில்..

'இதை ரொம்ப நாளைக்கு அவ கிட்ட மறைக்க முடியாது. சீக்கிரமா சொல்ல விரும்பறேன்..'

மீண்டுமொருமுறை நன்றி தெரிவித்துவிட்டு அவள் நகர...

எங்கிருந்தோ கொரோனா தொற்று பீதி காரணமாக 21 நாள் ஊரடங்கு மறுநாளிலிருந்து தொடங்குவதாக அறிவிப்பு செய்துகொண்டிருந்தார்கள்... ■

● மா.ரஞ்சனி
ஐந்தாம் ஆண்டு முதுநிலை உயிரித் தொழில்நுட்பவியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

# அம்பேத்கார் என்றோர் அறிவாளர்




ஒரு தனிமனிதனின் ஞானம் உலகத்திற்குப் பயன்பட வேண்டுமானால் அவர், எழுத்தில் அல்லது பேச்சில்தான் வெளிப்படுத்த முடியும். எழுத்து பேச்சு என்ற இந்தக் களங்கள்தான் மாற்றத்திற்கான திறவுகோல். ஆதி மனிதனின் பகுத்தறிவு, முதலில் பேச்சு என்னும் வெற்றியைத்தான் பெற்றது. பேச்சில் உலகை வென்றவர்களும் உலகை ஆண்டவர்களும் ஏராளம். எழுத்தால் சமூகத்தை மாற்றிய வித்தகர்களின் விரல்களும் சிந்தையும் அறிவுக்கடலின் சிம்ம சொப்பனம் என்றுதான் சொல்லவேண்டும்.

அப்படி பேச்சாலும் எழுத்தாலும் தன் மக்களுக்குத் தந்தையாக விளங்கியவர்தான் பாரதரத்னா டாக்டர்.பாபாசாகேப் அம்பேத்கார். சட்டமேதை அம்பேத்கார் என்ற ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் அவரது எழுத்தும் பேச்சும். தன்னுடைய எழுத்தின் மூலம் சாதியை எதிர்த்துச் சவுக்கால் அடிக்க.. உழைப்பாளிகளின் வியர்வையால் ஏற்றமடையும் முதலாளிகளின் தோலுரிக்க.. “ஊமையர்களின் குரல்” என்ற ஒரு இதழை நடத்தினார். தீண்டாமை ஒழிப்பு, சாதி மறுப்பு போன்றவை நடந்தே தீர வேண்டுமென்ற நோக்கில் யாரெல்லாம் குரல் கொடுக்கிறார்களோ அதற்கும், அவர்கள் செயல்களுக்கும் இவர் நடத்தும் இதழின் பேனா முனை முதலிடம் கொடுக்கும்.

*1924*ஆம் ஆண்டு மார்ச் *30*இல் கேரளாவின் வைக்கம் என்ற இடத்தில் தீண்டாமையை ஒழிக்க வைக்கம் போராட்டம் நடந்தது. பெரியாரின் வாழ்வில் *141* நாட்கள் போராட்டம் தந்த வைக்கம் வெற்றியை அம்பேத்கார் தான் நடத்திய “ஊமையர்களின் குரல்” இதழில் “வைக்கம் போராட்டத்தின் வெற்றி” என்ற தலைப்பில் தலையங்கமாக எழுதியுள்ளார். அதில் மகர் என்ற இடத்தில் பொதுக்குளத்தில் பட்டியல் இன மக்கள் தண்ணீர் எடுக்க உரிமை கோரிப் போராட்டம் நடத்துவதற்கு, தந்தை பெரியார் நடத்திய வைக்கம் போராட்டம் மிகுந்த தாக்கத்தை உண்டாக்கியதாகக் குறிப்பிட்டிருந்தார்.

சமூகப் புரட்சியாளர் அம்பேத்கார் நம்முடைய தமிழ் மொழி குறித்தும் ஆய்வு மேற்கொண்டிருக்கிறார். தமிழ் மொழி இந்தியா முழுவதும் பேசப்பட்ட மொழி என்று சொல்லியிருக்கிறார். தமிழ் என்ற சொல் தமிழர் என்றும் தமிழா என்றும் மருவி கடைசியில் திராவிடம் என்று மாறியது.. திராவிடம் என்பது தமிழர்களின் மொழியைக் குறிப்பிடுகின்றது.. ஆரியர்களின் வருகைக்கு முன் தமிழ்மொழி இந்திய துணை கண்டம் முழுக்க பேசப்பட்ட மொழி ஆகும் என்று குறிப்பிட்டார்.

தமிழ் மொழி இந்தியாவில் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை பேசப்பட்ட மொழி.. இந்திய தேசம் முழுவதும் நாகர்களால் பேசப்பட்ட மொழி தமிழ் மொழி.. இந்தியாவில் வாழ்ந்த ஆரியர்கள் நாகர்கள் மீதும் அவர்களுடைய மொழி மீதும் ஒருவிதத் தாக்குதல்களை நடத்தினதால்தான் இந்தியாவின் வடக்குப் பகுதிகளில் வாழ்ந்த நாகர்கள் தங்கள் தாய்மொழியான தமிழை விட்டு அதற்குப் பதிலாக சமஸ்கிருதத்தைக் கலந்தனர் என்று தன்னுடைய தாய்மொழி ஆய்வை வெளியிட்டார். சட்டமேதை அம்பேத்காரால் வைக்கப்பட்ட இந்த மொழியறிவு இதுநாள் வரையிலான மொழியியல் வல்லுநர்களால் ஏற்றுக்கொள்ளப்படாததாகவே உள்ளது.

பழமையைப் பற்றி மட்டுமல்ல நிகழ்காலம் எதிர்காலம் என எல்லாவற்றிற்கும் சேர்த்து சிந்தித்து பேசவும் எழுதவும் செய்தவர் அம்பேத்கார். அனைத்து மாணவர்களும் படிக்க வேண்டும்.. மாணவர்கள் பெறப்போகும் பட்டமும் சட்டமும்தான் சமூக மாற்றத்திற்கான ஆணிவேர் என்று சொன்ன அம்பேத்காரின் வார்த்தைகள் பொன்னெழுத்துக்கள்.

● கவி - சௌவி
● சித்திரம் - அன்பழகன்

# கனக்கும் இரவு



யாருமற்ற வெளியில்
யாரையும் சலனப்படுத்தாது
நட்சத்திரங்களைத் தின்றுகொண்டிருக்கின்றன
பறவைகள்
கனத்த இரவு முழுவதையும் வெளிச்சப்படுத்த
ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு
பறந்து பறந்து முயன்றுகொண்டிருக்கிறது
மின்மினிப்பூச்சி
வெகுவேகமாய் ஓடிச்சென்று
புலியை வேட்டையாடித் தின்று முடித்து
காடு அதிர வெற்றி எக்காளமிடுகிறது
வெளியே வாசலில் சின்னச் சின்ன
முனகல்களோடு படுத்திருக்கும் நாய்
தன் கனவில்
பொய்த்துப்போன மழையால்
அணைக்கால்வாயில் தண்ணீர் திருடுகிறார்கள்
காந்திவழி நடக்கும் கதரணிந்த விவசாயிகள்
பிள்ளைபோல் வளர்க்கப்பட்ட
தென்னைமரமொன்று
அதிகாரம்வேண்டுமென்ற மன அரிப்பில் சிக்கி
பராமரிப்பற்றுச் சாய்கிறது
இரவின் அழுகையோடு
கோவில் நந்தவனத்தில்
தூக்கம் வராத பெண்ணொருத்தியின்
மூடிய இமைகளுக்குள்ளிருந்து
வெளியேறும்
யாருமறியாக் கண்ணீர்த்துளியில்
இன்னும் கனமாகிறது இரவு ■

● ஏ. சாகுல் ஹமீது

# விளையும் பயிர்..



ஒரு சந்திப்பு நம் வாழ்க்கையின் அனைத்துப் பக்கங்களையும் புரட்டிப்போட்டு விடும் வல்லமை கொண்டது. அந்த ஒன்பதாம் வகுப்பு மாணவியின் வாழ்விலும் அந்த வல்லமையான சந்திப்பு நிகழ்ந்தது.. முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் அவர்களுடன்.

அந்தச் சந்திப்பை அழகிய கட்டுரையாக எழுதி.. அந்த எழுத்தினால் எழுந்த லட்சியத்தை வாழ்க்கையாக்கிச் சாதித்த அந்தப்பெண்.. மாஷா நஸீம்.

கன்னியாகுமரி மாவட்டம் இரவிபுதூர்க்கடையைச் சேர்ந்த முதுநிலைப் பொறியியல் பட்டதாரி. இதுவரை 14 கருவிகளைக் கண்டுபிடித்துள்ளார். மிக முக்கியமாக அதிக தொழில்நுட்பமுடைய கழிப்பறைகள் - இந்தியன் இரயில்வே இதனைப் பயன்படுத்துகிறது. முத்திரை பதிக்கும் கருவி (Flameless Seal maker) - இந்தியத் தேர்தல் ஆணையம் இதனைப் பயன்பாட்டில் வைத்துள்ளது.

2016ஆம் ஆண்டின் "டாப் 10 பெண்மணிகள்" இல் ஒருவராகத் தெரிவுசெய்து ஆனந்தவிகடன் வார இதழ் விருதளித்துக் கௌரவித்தது. சர்வதேச, தேசிய மாநாடுகளின் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியுள்ளார். மத்திய அரசு இவருக்கு IIT நுழைவுத் தேர்விலிருந்து விலக்களித்து IISER (Indian Institute of Science, Education And Research) இல் நேரடி அட்மிஷன் கொடுத்தது. அமெரிக்காவின் கூகுள் நிறுவனத்தில் நேரடிப்பயிற்சி மேற்கொண்ட 8 இந்தியர்களுள் இவரும் ஒருவர். 46 நாடுகள் பங்கேற்ற ஒரு உலக உச்சிமாநாட்டில் தனது 14ஆம் வயதிலேயே ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து உரை நிகழ்த்தி இந்தியாவிற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்.

இளம் வயதிலேயே தனது கண்டுபிடிப்புகளுக்காக 3 சர்வதேச விருதுகள், 5 தேசிய விருதுகள், 2 ஜனாதிபதி விருதுகளையும் வென்றுள்ளார்.

இந்த அறிவியல் அறிஞரின் தீர்க்கதரிசனமாய் ஒன்பதாம் வகுப்பில் அவர் வரைந்த அந்தக்கட்டுரை..

## எனது முன்மாதிரி அப்துல் கலாம் அவர்கள்

APJ அப்துல் கலாம்! இந்தியாவில் உள்ள பெரும்பாலான மக்களுக்கு மிகவும் பரிச்சயமான ஒரு மந்திரச்சொல் அது! 5 ஆண்டுகளுக்கு முன்னர் பொது அறிவு கேள்விக்கான விடையாகத்தான் குடியரசுத் தலைவர் பெயரை மனப்பாடம் செய்து வந்தனர் மாணவர்கள். ஆனால் இன்று, இந்தியாவில் உள்ள முப்பது கோடிக்கும் அதிகமான மாணவச் செல்வங்களின் உணர்வுகளில் கலந்த பெயர் அப்துல்கலாம்.

ஒரு ஏழை மாணவனாக, ஒரு பொறியாளராக, ஒரு ஏவுகணை விஞ்ஞானியாக, நாட்டின் பாதுகாப்பு ஆலோசகராக, அணு ஆற்றலில் இந்தியாவின் வல்லமையை உலகிற்குப் பறைசாற்றியவராக, ஒரு கவிஞராக, ஒரு எழுத்தாளராக, திரு. கலாமைப் பற்றிய வெற்றிச் செய்திகள் அநேகம் உண்டு. இந்தச் செய்திகளின் அடிப்படையில்தான் அவர் பெரும்பாலான மாணவர்களுக்கு முன்மாதிரி. நான் முன்மாதிரியாகக் கொள்வதற்குக் காரணம் இவை அல்ல. மாறாக, நான் அவரை நேரில் சந்தித்து அவரிடம் நான் கண்ட நற்பண்புகள்தான் என்னை மிகவும் கவர்ந்தவை.

குடியரசுத் தலைவரைச் சந்திப்பதற்காக, புது டில்லி ராஷ்டரபதி பவனில் காத்திருந்த அந்த நேரம் என் வாழ்வில் ஒரு பொன்னாள். கடந்த வருடம் ஆகஸ்டு 23ஆம் நாள் தேசிய விருது பெற்ற எனது கண்டுபிடிப்பினைக் குடியரசுத் தலைவருக்கு நேரில் விளக்கிட எனக்கு அந்த வாய்ப்பு தரப்பட்டிருந்தது.

நான் குடியரசுத் தலைவரைச் சந்திப்பதற்காகக் குடியரசுத் தலைவரின் கூடுதல் செயலாளர்திரு.இராதாகிருஷ்ணன் அவர்களுடன் பலமுறை கடிதத் தொடர்பு வைத்திருந்தேன். முதலில் அவரைச் சென்று பார்த்துவிட்டுத்தான் குடியரசுத் தலைவரைச் சந்திக்க வேண்டும் என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் சிறிது நேரத்தில் திரு.இராதாகிருஷ்ணன் அவர்களே என்னைத் தேடி வந்து என் கைகளைப் பற்றிக் கை குலுக்கிப் பாராட்டு தெரிவித்தார். இந்தியாவின் மிகப்பெரிய அலுவலகத்தில், உயர்ந்த பொறுப்பில் உள்ள உயர்அதிகாரி, ஒரு 8-ம் வகுப்பு மாணவியைக் காண அவரே நேரில் வந்த நிகழ்ச்சி என்னை மிகவும் உணர்ச்சி வசப்படுத்திவிட்டது. குடியரசுத் தலைவரின் எளிமை, பொறுமை, அன்பு, ஆறுதல் ஆகிய குணாதிசயங்கள் அங்குள்ள உயர்அதிகாரிமுதல், காவலர்வரையிலும் பிரதிபலிப்பதை நான் கண்கூடாக உணர்ந்தேன். அப்போதே நான் கண்மூடி பிராத்தித்தேன். “இறைவா நான் பிற்காலத்தில் பல உயர்ந்த பதவிகளை அடைந்தாலும், இது போன்று எளிமை, பொறுமை, அன்பு ஆகிய குணங்கள் என்னுள் இருக்கச் செய்ய ஆவன செய் இறைவா” என்றேன். இந்தச் சம்பவம் கலாம் அவர்களை என் முன்மாதிரியாக நான் கொள்ள, உறுதி கொள்வதற்கான முதல் காரணமாக அமைந்தது.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நான் கண்மூடி பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, அங்கிருந்த இராணுவ அதிகாரி என்னிடம் குனிந்து “ராஷ்டரபதியைச் சந்திக்கும் நேரம் வந்துவிட்டது” என்று மெல்லக் கூறினார். நான் குடியரசுத் தலைவரிடம் விளக்கிக்காட்ட வேண்டிய எனது கருவியினைத் தூக்க முயற்சித்தபோது, அந்த இராணுவ அதிகாரி, “இந்தச் சுமையைத் தூக்கி வர வேண்டியது எனது கடமை” என்று கூறி அவரே தூக்கி வந்தார். குடியரசுத் தலைவர்முன்பு கடைபிடிக்க வேண்டிய மரியாதை மரபுகள் பற்றி எனது ஆசிரியைகள் மற்றும் தந்தை என்னிடம் கூறியிருந்தார்கள். ஆனால் குடியரசுத் தலைவரை அந்தப் பெரிய அறையில் நேரில் பார்த்தபோது, அவரின் புன்சிரிப்பு, ஏற்கனவே நான் கடைபிடிக்க நினைத்து வைத்திருந்த மரபுகள் அத்தனையையும் ஒரு நொடியில் மறக்கச் செய்து விட்டது.

எனது கருவி குறித்து எந்த மொழியில் தாங்களுக்கு நான் விளக்கிட விரும்புகிறீர்கள் என்று நான் மேதகு குடியரசுத் தலைவரிடம் வினவினேன். மேலும் தமிழ்நாட்டைப்பற்றி, நான் இஸ்லாமியப் பெண்ணாக இருப்பதால் அதனைப்பற்றியும் கேள்வி கேட்பார் என்று எதிர்பார்த்துப் பதில்களைத் தயாரித்து வைத்திருந்தேன். ஆனால் அது பற்றி அவர்எதுவுமே கேட்காதது, எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. தன் சாதி, தன் இனம், தன்மொழி என்று மக்களைப் பிரித்துப் பார்க்கும் தலைவர்களைத்தான் நான் பத்திரிக்கைகளில், சினிமாவில் பார்த்திருக்கிறேன். இதற்கெல்லாம் மாறாக, ஜாதி, மத, இன

மொழிகளுக்கு அப்பாற்பட்டு, ஒரு இந்தியராக அவர் ஜொலித்தார். இது கலாம் அவர்களை நான் முன்மாதிரியாகக் கொள்வதற்கு இரண்டாவது காரணமாக அமைந்தது.

நான் எனது கருவி குறித்து விளக்கி முடித்தபோது *EXCELLENT IDEA* என்று பாராட்டிக் கை குலுக்கினார் குடியரசுத் தலைவர் அவர்கள். புகைப்படக்காரரை மணி அடித்து அழைத்துப் புகைப்படங்கள் எடுக்கச் செய்தார். புகைப்படத்திற்கு 'போஸ்' கொடுக்க அவர் இருக்கையினை விட்டு எழுந்து நின்றார். என்னைத் தோளில் பிடித்து அருகில் நிற்கச் சொன்னார். எனது கருவி குடியரசுத் தலைவரின் மேஜை மீது ஒரு ஓரத்தில் இருந்தது. எங்கே இந்தக் கருவி புகைப்படத்தில் வராமல் போய்விடுமோ என்று போட்டோகிராபரை கைஅமர்த்திக் காத்திருக்கச் சொல்லிவிட்டுத் தாமே சென்று கையினால் அதனைத் தம் பக்கம் நகர்த்திக்கொண்டு புகைப்படத்திற்கு "ரெடி" ஆனார். சிறிதும் கலப்படமற்ற இந்த எளிமை என்னைப் பிரமிக்க வைத்தது. நான் உணர்ந்து அறிந்துகொண்ட இந்த எளிமை, நான் கலாம் அவர்களை முன்மாதிரியாகக் கொள்வதற்கு மூன்றாவது காரணம்.

நான் குடியரசுத் தலைவரைச் சந்தித்த பின்பு, அவரது கூடுதல் செயலாளர் திரு.இராதாகிருஷ்ணன் அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு கிட்டியது. அவரிடம் குடியரசுத் தலைவருடன் நான் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் பற்றிக் கேட்டேன். என்னிடம் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தபோது, அவர் என்னைத் தொலைபேசியில் காத்திருக்கச் சொல்லிவிட்டு, மறுமுனையில் குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள பணியாளரிடம் கோபப்பட்டுப் பேசினார். "இதற்கு ஆயிரம் ரூபாய் செலவு செய்வதற்கு என்ன அவசியம் வந்தது?" என்று வினவிக்கொண்டிருந்தார். குடியரசுத் தலைவரின் செலவுக் கணக்குகள் பற்றி பார்லிமென்டே கூட கேள்வி எழுப்ப முடியாது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அத்துணை மகத்துவம் வாய்ந்த மாளிகையில் ஆயிரம் ரூபாயைக் கணக்கு பார்த்து செலவு செய்வதை அறிந்த எனக்கு ஆச்சரியமும் திகைப்பும் ஏற்பட்டது. தனது ஒவ்வொரு அசைவிலும் சிக்கனத்தைக் கடைபிடித்தவர்கலாம் அவர்கள். நான் கலாம் அவர்களை முன்மாதிரியாகக் கொள்ள இது நான்காவது காரணம்.

நமது குடியரசுத் தலைவர் ஆற்றல் மிக்கவர், வெற்றியாளர், பலனை எதிர்பாராது தனது கடமையினைச் செய்யும் கர்மவீரர் என்ற கோணத்தில் அவரை முன்மாதிரியாகக் கொள்ளும் மாணவர்கள்தான் அதிகம்! ஆனால் திரு. கலாம் அவர்களை முன்மாதிரியாக நான் கொள்ள, தேர்வு செய்ததற்கு மேற்கூறிய அம்சங்கள் காரணமல்ல. மாறாக, அவரது தேசபக்தி, ஜாதி, மத, இன, மொழிகளை கடந்த அவரது இந்தியன் என்ற உணர்வு, எளிமை, பொறுமை, அன்பு, சிக்கனம், உயர்பதவியிலும் பணிவு என்ற குணாதிசயங்கள்தான் என்னை மிகவும் கவர்ந்தவை. நாட்டில் மிகச்சிறந்த வல்லுநர்களை உருவாக்க *IIM~IIT* போன்ற சீரிய நிறுவனங்கள் உள்ளன. இவர்கள் உலகளவில் சாதனை படைக்கலாம். ஆனால் உண்மையான சாதனையாளர் எப்போது உருவாகிறான் என்றால், இந்தச் சாதனையாளன் மனிதாபிமானியாக மாறும்போதுதான். மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் சாதனையாளர் நிலையைக்கடந்த மனிதாபிமானி. சாதனையாளர்களைக் கல்விக்கூடங்களில் தயார்செய்துவிடலாம். ஆனால் மனிதாபிமானம் என்பது அன்பு, நட்பு, பொறுமை, எளிமை, சிக்கனம் ஆகிய குணங்களால் வருவது. உயர்ந்த பொறுப்பிற்கு வந்தாலும் இந்தச் சிறப்புப் பண்புகள் தம்மைவிட்டுப் பிரியாவண்ணம் கடைசிவரையிலும் கட்டிக் காத்துவருபவர் கலாம் அவர்கள். நான் நேரில் கண்டுணர்ந்த இந்தக் காரணங்களுக்காக, மேதகு கலாம் அவர்களை நான் முன்மாதிரியாகக் கொண்டுள்ளேன். ஜெய்ஹிந்த் ! ■



பதிவு எண் : 521/2018

தமிழக காவல்துறை மற்றும்
படைப்புக்குழுமம் இணைந்து நடத்தும்

# மதுவிலக்கு விழிப்புணர்வு குறும்பட போட்டி-2020

## விரைவில்



போட்டி நடுவர்

இயக்குனர் **கே. பாக்யராஜ்**

**பரிசு**

**1,50,000**

கால அளவு

**8- நிமிடங்களுக்குள்**

கடைசி நாள்

**பின்னர் அறிவிக்கப்படும்**

அனுப்ப வேண்டிய முகவரி

padaippu Media Networks, #23 Third Floor, Aarthi Arcade,
R.K. Salai, Mylapore, Chennai - 600 004